
# மல்லிகை

பெப்ரவரி. 1970

விலை சதம் -/50

தெணியான்



தெணியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For all your requirements :

in

PRINTING & STATIONERY

Please contact

# Catholic Press

Batticaloa.

THE ONLY PRESS IN THE EAST
EQIPPED WITH THE LATEST
AUTOMATIC MACHINES.

NEAT AND QUICK JOBS ASSURED.

**No. 18, Central Road,**
**Batticaloa.**

Telephone: 364.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெணியான்


கட்டிட வேலைகளுக்குப் பொருத்தமான பொருட்களைத் தேர்ந்தெடுப்பது

## ஒரு பொறுப்பான பணி

விஷயமறிந்தவர்கள் எங்களையே நாடிவருகிறார்கள்.

★

கட்டிட வேலைகளுக்குத் தேவையான சகலவிதமான பொருட்களையும் நியாயமான ஒரே விலையில் நீங்கள் குறிப்பிட்ட இடங்களில் விநியோகித்து, நீண்டகாலமாக நற்பெயரை ஈட்டியுள்ள

ஒரே ஸ்தாபனம்

# க. வே. சிதம்பரப்பிள்ளை அன்ட் சன்ஸ்

## 37, பார் ரோட் - மட்டக்களப்பு.

### "யானை" மார்க்

அஸ்பெஸ்டாஸ் கூரைத் தகடுகள், சீலிங் தகடுகள், காங்கேசன் சிமெந்து, இரும்பு உருக்குக் கூட்டுத்தாபனத்தின் தயாரிப்புகள், இரும்பு வலைகள், நெளிவு கூரைத்தகடுகள், கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் கட்டிட விற்பனை பொருட்கள், அறுவை மரங்கள் இயந்திர வாளால் அறுவை செய்த சலாகைகள், பீடிங் மோல்டிங்.

### "ELEPHANT BRAND"

Asbestos, Masconite Corrugated Sheets, Coloured Ceiling Sheets, Kankesan Cement, Steel Corporation's Products, B. R. C., Galvanised Corrugated Roofing Sheets, Dealers for C. W. E. Hardware Department, Sawn Timbers, Reepers Beading Molding Manufactured by our own Machine shop. Other Building Materials.

இவைகளுக்கு
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# K. V. SITHAMPARAPILLAI & SONS

BUILDING & ENGINEERING CONTRACTORS.

*Dealers in Building Materials.*

37, BAR ROAD — BATTICALOA.

Stores: 79, 136, 140 & 142 Bar Road, Batticaloa.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபத்திரவம் தரும் மூட்டைப்பூச்சி, எலிகள்




இவற்றை உடனே ஒழிப்பதற்கு

**ரன்பக்!**
**ரன்ராட்!**




முக்கியமான எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:

**அப்துல்லா இன்டஸ்ட்ரீஸ் அன்ட் பேப்பர் பாக்ஸ் மனுபக்சரி**
*72, பாபர் வீதி, கொழும்பு — 13.*



உத்தரவாதமுள்ள தங்க நகைகளுக்கு

**சண்முகா ஜுவல்லர்ஸ்**

நம்பிக்கை

நாணயம்

உத்தரவாதம்

இவையே எங்கள் மூலதனம்

இன்றே விஜயம் செய்யுங்கள்



# சண்முகா ஜுவல்லர்ஸ்

**35, பிரதான வீதி, கல்முனை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையிலேயே புகழ் பெற்ற மரக்காலையும் தளபாட நிலையமும்

**மதியூஸ் ரிம்பர் டிப்போ**

மரத்தளபாடங்கள் மற்றும் அரிவை மரங்கள்
குறிப்பிட்ட நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

**அருணா பேர்ணிச்சர் பலஸ்**

அழகும் உறுதியுமுள்ள நவீன போஸ்தர்
தளபாடங்கள் எப்போதும் கிடைக்கும்

விபரங்களுக்கு:—

# மதியூஸ் ரிம்பர் டிப்போ

இல. 2. வாவிக்கரை வீதி,
மட்டக்களப்பு.

# அருணா பேர்ணிச்சர் பலஸ்

மதியூஸ் ரோட், — மட்டக்களப்பு.



## நுளம்பு (MOSQUITO) மூட்டுப்பூச்சி (BUG) எலி (RAT) ஈ, கொசு (FLY)

இவற்றை ஒழித்தால் நீங்கள் ஆரோக்கியமாக வாழலாம். அதற்கு எங்களிடம் கிடைக்குல் வீட்டுப்பூச்சிக் கொல்லிகளை (HOUSEHOLD INSECTICIDES) உபயோகியுங்கள்.

உங்கள் தோட்டத்தில், முற்றத்தில், வளவில் வளரும் செடி கொடி மரம் மற்றும் பயிர்களுக்கு சிறிய பக்கட்டில் பசளைகளும் (FERTILISERS) கோழி, ஆடு, மாடு, உணவு (LIVESTOCK FOOD) பாத்திரங்கள் விவசாய உபகரணங்கள், விவசாய இரசாழனங்கள் ஸ்பிறேயர், டஸ்டர் மற்றும் பண்ணைகளுக்கு வேண்டிய பல பொருள்களும் உண்டு.

உங்களுக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளுக்கு எங்களிடம் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

# பாம் ஹவுஸ்

34, பஜார் வீதி, மட்டக்களப்பு.
தொலைபேசி இல: **332.**

# FARM HOUSE

**34, Bazaar Street. Batticaloa.**
Telephone No: **332.**

கிளை : திருமலை வீதி, ஓட்டமாவடி,
Branch : Trinco Road, Oddamavadi.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்ரேன் எலக்ரிகல்ஸ்!

நாடெங்கும் தெரிந்த பெயர்! நம்பிக்கை நிறைந்த பெயர்!
நயமான சேவைப் பெயர்! நல்லவர்கள் நாடும் பெயர்!

★ மின்சார இணைப்புகள் ★ ஒலி, ஒளி அமைப்புகள்
★ மின்சார திருத்தவேலைகள் ★ பட்டரி சார்ஜிங்
★ ஒலிபெருக்கி வாடகை



பொதுக்கூட்டமா? நாடகமேடையா? திருமண வைபவமா?
புதுமனை புகுதலா? பரிசளிப்பு விழாவா? பாடசாலை வைபவமா?

எதுவானாலும்

கண்ணியமான சேவைக்கும், கணிசமான சார்ஜுக்கும்

எங்களை நாடுங்கள்

## EASTERN ELECTRICALS

**ENGINEERS & CONTRACTORS**

83/A. Trinco Road, Batticaloa.

(Prop:- J. A. Nagarajah 9. Dias Lane, Batticaloa.)





எந்தவிதமான வைபவமானாலும் நீங்கள் அழகு ராணியாகத் திகழவேண்டுமென்றால், இன்றே

**M. A. S. நகைகளை**

அணியுங்கள்.

## M. A. S.

## நகைகள்



பார்வைக்கும், பாவனைக்கும் சிறந்தவை.

தேர்ச்சி பெற்ற சிற்பிகளால் செய்யப்பட்ட, உத்தரவாதமுள்ள நகைகள் பவுண் தங்க M. A. S. நகைகளே!

## M. A. S. நகை மாளிகை

21, பிரதான வீதி, மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்—பாரதியார்.

செடி: 1 | பெப்ரவரி, 1970 | மலர்: 2

## மகரந்தம்

**கதை** — பக்கம்

வாழ்வின் பெருமை..............இரா. சரசுவதி ... 13
யாககுண்டம்....................செங்கை ஆழியான் ... 14
காட்டுப்பூ..................வ. அ. இராசரெத்தினம் ... 19
தியாகங்கள் பாரமா?......அருள் சுப்பிரமணியம் ... 24
அந்தவிட்டின் புதியகதை...செ. யோகநாதன் ... 32

**கவிதை**

வினுவிடை ..................................மஹாகவி ... 12
இறப்பில்லா இறந்தகாலம் எம். ஏ. நுஃமான் ... 42
சமநீதி........................................சர்வானந்தன் ... 41
வாழ்வுக்கடலினிலே.............கருணை யோகன் ... 44
கவிதை பாடாமல்............செ. குணரெத்தினம் ... 47
ஈழமதில் எழுந்த மலரே......வே. ஐயாத்துரை ... 23

**கட்டுரை**

தர்மத்திற்காகப் போராடுக......பீ. மரியதாஸ் ... 43
எனக்குப் பிடித்தது...மு. ஹ. சேகு இஸ்ஸடீன் ... 30
'மலர்' வெளியீட்டுவிழா ......................மணி ... 6

**பிற**

வணக்கம் ................................................ ... 8
வளர்ச்சிக்கு வழி........................................ ... 9
ரீங்காரம் ................................................ ... 11
ஈழத்துரத்தினங்கள் ...................................... ... 45
வீசும் தென்றல்.......................................... ... 48

கதைகள் யாவும் கற்பனை. கட்டுரை கவிதைகளில் உள்ள கருத்துகளுக்கு அவற்றின் படைப்பாளிகளே உரிமையாளர்.

—ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலர்" வெளியீட்டு விழா

பாரம்பரியக் கலைகளின் இருப்பிடமான மட்டுநகர் மண்ணில் புதிய இலக்கிய ஏடான ''மலர்'' மலர்கிறது என்ற செய்தி வெளிவந்த நாளிலிருந்து, மக்கள் அந்த நிகழ்ச்சியை மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். எங்கும் ''மலர்'' என்பதே பேச்சு. மட்டுநகர் மாதா விழாக்கோலம் பூணுவதுபோல் ஒரு பிரமை.

மக்கள் இவ்வளவு ஆர்வத்தோடு எதிர்நோக்கிய ஒரு விழாவை இருமுறை ஒத்திப்போடவேண்டிய துர்ப்பாக்கியத்தை இயற்கை ஏற்படுத்திவிட்டது. ஆம்; 1970ம் ஆண்டு தை மாதம் 3ம் திகதி ''மலர்'' வெளியீட்டு விழா நடைபெறவேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த நாளில் மட்டுநகர் மாரிகால வெள்ளத்தில் மூழ்கிக்கொண்டிருந்தது. எனவே விழா தை மாதம் 12ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வெள்ளம் வடிந்து, கதிரவன் ஒளி படர்ந்து மகிழ்ச்சி நிரம்பிய ஒரு சூழ்நிலை எங்கும் நிலவியிருந்தது. ஆனால் திடீரென்று 12ம் திகதி காலை முதல் மாலை வரை ஓயாத பேய்மழை விடாமல் கொட்டிக்கொண்டிருந்தது. வேறு வழியின்றி விழாவை மீண்டும் ஒத்திப்போடவேண்டியதாயிற்று.

24-1-70ல் விழா நடந்தது.

மக்கள் இத்தனை நாள் பொறுமையுடன் காத்திருந்ததற்கும், ''மலர்'' வெளிவருவது தாமதித்ததற்கும் பிரதி செய்யும் வரையில் விழா அமைந்திருந்தது. தொடர்ந்த மழையினால் மட்டுநகர் மண்ணைக் கவ்வியிருந்த மூட்டம் மறைந்து, பகலவன் ஒளி பட்டுப் பிரகாசித்ததுபோல், மக்கள் வதனமும் இவ் விழாவில் மலர்ந்திருந்ததைக் காணமுடிந்தது.

கிழக்குப்பிராந்தியக் கல்விப்பணியாளர் திரு.வெ. சங்கரலிங்கம் மங்கலவிளக்கேற்றி விழாவைத் தொடங்கிவைக்க, சங்கீதபூஷணம் திரு. இராஜு அவர்களின் கம்பீரமான தமிழ் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகியது.



— ''மலர்'' வெளியீடு —

வெளியீட்டு விழாக் குழுவின் அமைப்பாளர் திரு. ஏ. ஜே. மங்களராஜ், சம்பிரதாயப்படி வரவேற்புரை நிகழ்த்தினாலும் மணியான ஒரு கருத்தைத் தன் உரையிலே வெளியிட்டார். 'ஈழநாடு சுதந்திரம் அடைந்த பின்னர், எமது சுயதேவையை நாமே பூர்த்திசெய்ய வேண்டும் என்ற லட்சியக்குரல் உணவுத்துறை முதல் கைத்தொழில்துறை வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் வானொலிப் பெட்டியைக்கூட இன்று நாமே சுயமாகச் செய்யக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஆனால் இலக்கியத் துறையைப் பொறுத்தமட்டில் இந்த உணர்வு நமக்கு ஏற்படாதது விசித்திரம்தான்.''

தலைமையுரை நிகழ்த்திய, மாவட்ட அரசாங்க அதிபரும் மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றத் தலைவருமான திரு. தேவநேசன் நேசையா அவர்கள், ஈழத்து இலக்கிய முயற்சிகளை, ஈழத்து வாசகர்கள் ஆதரிக்கவேண்டிய அவசியம்பற்றி அழுத்திக் கூறினர்.

அறிமுகஉரை நிகழ்த்தும் பொறுப்பான பணி மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவரும், மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றச் செயலாளருமான திரு. ரீ. பாக்கியநாயகம் அவர்கள் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. அவர் அப்பணியை மிகவும் பொருத்தமாகச் செய்தார்.

ஈழத்திலே இலக்கியப்படைப்பாளி தற்போது அனுபவிக்கவேண்டியுள்ள இடர்ப்பாடுகளையிட்டு மிகவும் குத்தலான நகைச்சுவையோடு பேசிய அவர், ''மலர்'' முதல் ஏட்டிலிருந்து மிக முக்கியமான பகுதிகளை எடுத்து வாசித்துக்காட்டினர். ''இது உங்கள் பத்திரிகை. உங்களுக்காகவே இது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் ஒன்று; வாசகர்கள் விரும்புவதைக் கொடுப்பது வியாபாரம். வாசகர்கள் எதை விரும்பவேண்டும் என்று இலக்கிய கர்த்தா விரும்புகிருனே அதைக் கொடுப்பதுதான் சேவை'' என்ற பகுதியை அவர்வாசித்துக்காட்டியபோது சபை கலகலப்படைந்தது.

அறிமுக உரையின் பின்னர் கௌரவ ஆசிரியர், ''மலர்'' முதல் ஏட்டின் தலையங்கத்தை வாசித்து சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். சஞ்சிகையின் முதல் பிரதியை மாநகர முதல்வர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.



வெளியீட்டு விழாக் குழுவின் அமைப்பாளர்
திரு. ஏ. ஜே. மங்களராஜ்.

சிறப்புரை நிகழ்த்திய, பிரதம கல்வி அதிகாரி ஜனப். எம். சமீம், கவிஞர் ''மஹாகவி'', கவிஞர் ''திமிலைத்துமிலன்'' ஆகியோர் ஈழத்தில் இலக்கிய சஞ்சிகை ஒன்று நிலைபெறமுடியாமல் போனதற்கான காரணங்களை வெவ்வேறு கோணங்களில் நின்று ஆராய்ந்தனர். (இவர்களது பேச்சுக்கள் தனிக்கட்டுரைகளாக ''மலர்'' ஏட்டில் இடம்பெறும்).

வெளியீட்டு விழாவின் இறுதியில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

—''மணி''



— விழாவிற் கலந்துகொண்ட பிரமுகர்கள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

**"மலர்"** முதல் ஏட்டிற்கு நிறையப்பாராட்டுகள் கிடைத்துள்ளன.

''மலர்'' சஞ்சிகையின் கவர்ச்சியான அமைப்புப் பற்றியும், தரமான படைப்புகள் பற்றியும், பலர் நேரிலும் தபால் மூலமும் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள். ''மலர்'' மேலும் வளர்ச்சியுறுவதற்கான ஆலோசனைகளையும் பலர் அன்புடன் தெரிவித்துள்ளார்கள்.

இவை அனைத்திற்கும் எம் உளம் நிறைந்த நன்றி.

பத்திரிகைத் துறையில் அனுபவப்பட்டவர்கள், மலரை இவ்வளவு கவர்ச்சியாக வெளிக் கொணர்ந்ததில் நிறையச் சிரமங்கள் ஏற்பட்டிருக்குமே என்று அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

உண்மைதான். ஈழத்தில் சாதாரண அமைப்பில் ஒரு சஞ்சிகை வெளியிடுவதற்கே நிறையச் சிரமப்பட வேண்டி இருக்கிறது. இத்தனை சிறப்புடன் ஒரு சஞ்சிகை வெளிவருவதென்றால், நிச்சயம் அதன் பின்னால் நிறைய உழைப்பும் மிகுந்த சிரமமும், பெருத்த செலவும் இருக்கவேண்டும் என்பதைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் நாம் அடைந்த இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் பற்றி ஒப்பாரி வைப்பதில் அர்த்தமில்லை. அது அவசியமும் இல்லை. ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு ''மலர்'' சக்தியமான பணி ஆற்றும் என்பதை மட்டும் வாசகர்கள் புரிந்து கொண்டால் போதுமானது.

நிறைய எண்ணங்கள் இருக்கின்றன. ஆனால் அவை எல்லாவற்றையும் உடனடியாகச் செயல்படுத்த முடியவில்லை. ''மலரி''ன் வளர்ச்சிப் பாதையில் அவற்றை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஈழத்து வாசகர்களும், எழுத்தாளர்களும் தோள் கொடுத்து உதவினால் இப்பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும் என்பதில் சந்தேகம் என்ன ?

— ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்

"உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"—பாரதியார்.

செடி : 1 — பெப்ரவரி 1970 — மலர் : 2

## வளர்ச்சிக்கு வழி

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வரும் சஞ்சிகைகளையும் நூல்களையும் தடை செய்ய வேண்டும் என்ற ஒரு குரல் சமீப காலமாக ஈழத்து இலக்கிய உலகில் பரவலாக ஒலிக்கிறது.

தமிழகத்திலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகளையும் நூல்களையும் தடைசெய்து விட்டால், ஈழத்தில் சஞ்சிகைகளும் நூல்களும் பெருகிவிடும் என்று எதிர்பார்ப்பது விவேகமானதல்ல. அப்படிச் செய்வது பிரச்சினையைத் தீர்க்கவும் தீர்க்காது.

உண்மையில், ஈழத்துப் படைப்புகளை ஆதரிக்கவேண்டும் - ஈழத்து இலக்கியத்தை வளர்க்கவேண்டும் என்ற தேசிய உணர்ச்சியையும், அபிமானத்தையும் ஈழத்து இலக்கிய அன்பர்கள் மத்தியில் உருவாக்குவது ஒன்றுதான் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

சஞ்சிகைகள் ஒரு புறம் இருக்கட்டும். நூல்களை எடுத்துக்கொள்வோம்.

ஈழத்தில் இன்று நூல்கள் வெளியிட முடியாமலும், வெளியிடும் நூல்களை விற்பனை செய்ய முடியாமலும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஈழத்திலுள்ளவர்களே அவற்றை ஆதரிக்காமல் இருப்பதுதான். இந்த நிலையைமுதலில் மாற்ற வேண்டும்.

இதற்கு என்ன வழிவகைகளை மேற்கொள்ளலாம்?

ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் பணியில் பெரும் பங்கு இந்த நாட்டின் படித்தவர்கள் மேல் சார்ந்துள்ளது.

பாடசாலை ஆசிரியர்களும், அலுவலகத்தில் பணிபுரியும் அன்பர்களும், கலை கலாச்சார மன்ற அங்கத்தவர்களும், ஈழத்தில் வெளியாகும் தமிழ் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிரதி கட்டாயமாக வாங்குவதென்ற ஒரு பிரதிக்கினை எடுத்துக்கொள்ள வேண்டும். குறைந்த பட்சம் மாதம் பத்து ரூபாயாவது இதற்கு ஒதுக்க வேண்டும். குப்பைப் பத்திரிகைகளுக்கு மாதாமாதம் செலவிடும் பணத்தை இதற்கு ஒதுக்கினால், காலக்கிரமத்தில் நிலையான ஒரு நூல் நிலையத்தையே வீட்டில் உண்டாக்கி விடலாம் அல்லவா?

ஈழத்தில் பெருந்தொகையான தமிழ்ப் பாடசாலைகளும் உள்ளூராட்சி மன்றங்களும் உள்ளன. இவை ஒவ்வொன்றும் தத்தம் நூல் நிலையங்களுக்கு ஈழத்து நூல்களில் ஒவ்வொரு பிரதி கட்டாயமாக வாங்கி வைக்க வேண்டும். அந்த வகையில் ஒரு சில ஆயிரம் பிரதிகள் விநியோகமாக முடியும்.

பாடசாலைப் பரிசளிப்பு விழாக்களில் ஆண்டுதோறும் கணக்கற்ற நூல்கள் விநியோகமாகின்றன. இவற்றில் குறைந்த பட்சம் ஐம்பது சதவிகிதமாவது ஈழத்து நூல்களாக இருந்தாலும் ஆயிரக்கணக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்கள் ஆண்டுதோறும் விற்பனையாக முடியுமே?

சில வர்த்தக ஸ்தாபனங்களும், பத்திரிகைகளும் அவ்வப்போது பல்வேறு வகையான போட்டிகளை நடத்தி ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பரிசில்களாக வழங்குகின்றன. இப்பரிசுத் தொகையில் ஒரு மிகச் சிறு பங்கை ஈழத்து நூல்களக வழங்கினால்....? அந்த வகையில் ஒரு சில நூறு பிரதிகள் விநியோகமாகமுடியும் அல்லவா?

அவ்வளவு ஏன்? ஈழத்தில் வளரும் எழுத்தாளர்களும், கவிஞர்களும், நாடகாசிரியர்களுமாகக் குறைந்த பட்சம் ஆயிரம் பேர் தேறமாட்டார்களா? இவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு பிரதி கட்டாயமாக வாங்குவதாக இருந்தாலும் ஈழத்தில் வெளியாகும் நூல்களில் கணிசமான அளவு பிரதிகள் விற்பனையாகிவிடுமே.

பிறந்த நாள் பரிசு, திருமணப் பரிசு, பொங்கல் பரிசு, முதலிய பரிசு வகையறுக்களில், ஒரு கணிசமான பகுதியை ஈழத்து நூல்களுக்கு ஒதுக்குவதன் மூலம், மேலும் சில பிரதிகளைச் செலவாக்க முடியும். இப்படியே ஆராய்ந்துகொண்டுபோனால், புத்தக விநியோகத்துக்கான புதுவழிகள் மேலும் புலப்படலாம்.

ஆக புத்தகம் வெளியானவுடன் குறைந்த பட்சம் ஒரு 3000 பிரதிகளாவது விநியோகமாக முடியும் என்ற உத்தரவாதம் இருந்தால் ஈழத்தில் எந்த எழுத்தாளனும் துணிந்து புத்தகங்களை வெளியிட முன்வருவான். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடுவதற்கு வெளியீட்டகங்களும் போட்டி போட்டுக்கொண்டு முன்வரும். இந்த உற்சாகம் ஒன்றே எழுத்தாளனின் படைப்பாற்றலைத் தூண்டிவிடவும், பெருமளவில் புதிய படைப்புகளை உருவாக்கவும் வழிகோலும்.

இது ஒன்றும் நடக்கமுடியாத கற்பனைக் கனவு அல்ல. இன்று சிங்களத்திலும், மலையாளத்திலும் பெருமளவில் நூல்கள் பெருகி, அந்த மொழி இலக்கியங்கள் பெரும் வளமும், வளர்ச்சியும் பெற்றிருப்பதற்கு முக்கிய காரணமே இந்தத் தேசிய உணர்வு தான்.

இதைச் செய்ய முடியாத நாம், ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி வரட்டுக் கூச்சல் போடுவதும், வெளிநாட்டு நூல்களைத் தடை செய்யுங்கள் என்று 'கதாநாயக' வேஷம் போடுவதும் அர்த்தமற்ற செயல்களாகும். நம் நாட்டு நூல்களை நாம் ஆதரிக்க முன்வந்தால் 'வெளிநாட்டு நூல்களைத் தடைசெய்க' என்ற கூச்சல் இல்லாமலே காரியம் ஆகிவிடும் அல்லவா?

—ஆசிரியர்.

## ஆறுதல் தரும் செய்தி

பாரதத்தில் சிறந்த நூலுக்கு ஒரு லட்ச ரூபா பரிசு கொடுக்கும் பாரதீய ஞானபீடம், மற்றும் ஜனதிபதி பரிசு, சாகித்திய அகடமி பரிசு என்றெல்லாம் கேள்விப்படும்போது 'வாயூறுத' ஈழத்து எழுத்தாளர்கள் இருக்கமுடியாது. இப்படியான திட்டங்கள் ஈழத்திலும் இருக்கமுடியாதா என்று ஆதங்கப்பட்டவர் அநேகர். இப்படி அங்கலாய்த்தவர்களுக்கு, ஆறுதல் தரும் வகையில் சமீபத்தில் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. இலக்கியத்தையும் கலையையும் வளர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் ஆண்டுதோறும் ஒரு லட்ச ரூபா பரிசளிக்கப்போகிறது என்பதுதான் அச்செய்தி. அதில் சிறந்த இலக்கிய சிருஷ்டிக்கு 'பிரதமர் பரிசு' கால் லட்சம் வழங்கப்படுமாம். இதுதவிர சிங்களத்தில் சிறுகதை, நாவல், நாடகம் முதலிய பத்து இலக்கிய சிருஷ்டிகளுக்கும், தமிழில் நாவல், சிறுகதை, கவிதை முதலிய ஐந்து இலக்கிய சிருஷ்டிகளுக்கும் விசேட பரிசுகளும் வழங்கப்படவிருக்கின்றன.

பரிசுக்குரிய இலக்கிய சிருஷ்டிகளைத் தெரிவு செய்வதற்காக, கல்வி கலாச்சார இலாகா பத்துப்பேர் கொண்ட ஒரு சபையை நியமித்திருக்கிறது. இப்படியான இலக்கியப் பரிசுகளைத் தமிழில் வழங்குவதற்காக ஏற்கனவே அமைந்துள்ள சாகித்திய மண்டலம், கலைக்கழகம் போன்றவற்றின் தெரிவுகள்பற்றி இலக்கிய வட்டாரத்திலே பரவலான முணுமுணுப்புக்கள் சதா கேட்டவண்ணமிருக்கின்றன.

அப்படியான முணுமுணுப்புகள் இந்த இலக்கியத் தெரிவிலும் கேட்காதவாறு, சபையிலுள்ள தமிழ் உறுப்பினர்கள் பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரீங்காரம்

வாழு மிலக்கியத்தின் மாசிகையா யீழத்தின்
கீழைத் தமிழ்மணந்தான் தேசத்தில் — நாளும்,
துன்ன மலரொன்று தோன்றிக் கமழ்கின்ற
தன்னே தமிழுக் கணி.

—அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்.

தங்களின் எழில்மிகு ''மலர்'' கன்டு மட்டிலா மகிழ்ச்சியுற்றேன். ஈழத்து இலக்கிய ரசிகர்களுக்குப் புதியதோர் இலக்கியப் பாதையைக் காட்டுவதாக ''மலர்'' முதல் இதழ் அமைந்துள்ளது.

—அ. க. ஜுனைதீன், வெலிமடை.

'மலரை' நான் விரும்பிப் பாராட்டுவதற்கான காரணம், அதன் அமைப்பு, தோற்றம், எழுத்து, விஷயங்கள் முதலியவற்றின் சிறப்போடு, மற்றப் பத்திரிகைகளில் நான் தேவையற்றவை என்று வெறுத்து ஒதுக்கும், சினிமா, அரசியல், அக்கப்போர் இத்தியாதி.... யாவும் ஒட்டுமொத்தமாக ஒதுக்கப்பட்டிருப்பதே.

—செல்வி. சௌமினி பஞ்சாட்சர சர்மா, கோப்பாய்.

''மலர்'' கண்டேன். மகிழ்வுற்றேன். பாராட்டத்தக்க முயற்சி மட்டுமல்ல பேராதரவு தரவேண்டியதும்கூட. ஈழத்துப் பத்திரிகை உலகில் புதுமையான ஓர் அமைப்பில் ''மலர்'' அமைந்துள்ளது.

—ஐ. எம். தாஹிர் — கிண்ணியா.

ஈழத்தில், அதுவும் கிழக்கு மாகாணத்தில், இலக்கிய தாகம் விஞ்சி எழ, அதன் விளைவாக, முழுக்க முழுக்க இலக்கியச் சுவையுடன் மணம் கமழ ''மலர்'' மலர்ந்திருப்பது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

—செல்வி. நோ. இராசம்மா. கல்முனை.

ஈழத்தில் இலக்கிய முயற்சிகளுக்குத் துணைசெய்யும் பெருநோக்குடன் 'மலர்' வெளிவருவது வரவேற்கத்தக்கது. மலரை நல்லாசிரியனுக்கு உவமையாகக் கூறுவர். ''மங்கலமாகி, இன்றியமையாது, யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கிப், பொழுதின் முகமலர்வுடையது பூவே'' என்பது நன்னூல். மனம் நிறைந்த மலர் மக்களால் வரவேற்கப்படுகின்றது; அதன் மணம் நெடுந்தூரத்திலுள்ள வண்டுகளேயும் தன்னிடம் ஈர்க்கின்றது; மணமுள்ள வண்ண மலரை மக்கள் நாடுவது இயல்பே.

அத்தகைய மணமும், வண்ணமும், மகிழ்ச்சிக்கு உள்ளதொரு நிலையுமுடைய மலர், கலையின் இருப்பிடமாகிய மட்டக்களப்பிலிருந்து வெளிவருகின்றது. மணம்வீசும் நன்மலர் நாட்டு மக்களுக்கு நலம் காட்டுவதுபோல, நல்லறிஞரின் பல இலக்கியப் படைப்புக்களைக்கொண்ட இச்சொல் மலரும் நல்ல இலக்கியப் பணிக்கு வழிகாட்டுமென்ற துணிவுடையோம். மலர் என்றும் பொலிவுடன் இலக்கிய மணம் வீச எமது வாழ்த்துக்கள்.

கலாநிதி சு. வித்தியானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# * வினாவிடை

**''மஹாகவி''**

—★—

''கண்மணியே, நின்னுடைய கருத்துள்ள
விழிவீச்சுக் கிடைக்கப்பெற்றேன்.
பெண்ணழகு முழுதும் ஒரே கணப்பொழுதிற்
தாக்கியது; பிய்ந்துபோனேன்.
உண்ணுதற்குமனமில்லை; உறங்குதற்கு
வழியில்லை; உலைகின்றேன் நான்.
எண்ணமென்ன? எவ்வேளை? எவ்விடத்தே?
—இங்ஙனம் ஓர் சுழலும் தேனீ''

''விண்ணவரே, தங்களது விளங்காத
கடிதத்தை விளங்கிக்கொண்டேன்.
மண்ணிலத்தே என் கால்கள் படியவில்லை;
மிதக்கின்றேன் வானமீது. —
வெண்ணிலவு வரும்வேளை; பின்வளவு
வேம்பின்கீழ்! வேலிஓரம்!...
திண்ணம், உங்கள் திறன் அனைத்தும் தெரியட்டும்!
—இங்ஙனம் ஓர் மலர்ந்த முல்லை.''

கவிஞர் 'மஹாகவி' ஈழத்துக் கவிதை உலகில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியவர். புகழ் பெற்ற 'குறும்பா', 'கண்மணியாள் காதை' முதலியன அச்சில் வெளிவந்துள்ள இவரது கவிதை நூல்கள். 'கோடை' என்ற இவரது கவிதை நாடகம் பலதடவை மேடையேறி நிலைத்த புகழை ஈட்டியுள்ளது. புதுமை நோக்குக் கொண்டவர். உயர்ந்த பதவியில் இருந்தாலும் பழகுவதற்கு இனியவர். பண்பாளர்.

—ஆசிரியர்.

* கருநாடக இசை அமைத்து
இராக மாலிகையாகப் பாடுதற்காக
எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் பெருமை

செல்வி. இரா சரசுவதி.

திருமண விழா வீடு. ஒரே அமர்க்களம்; ஆரவாரம். திரைப்படப் பாடல்கள் ஒலி பெருக்கியில் அலறிக்கொண்டிருந்தன. ஆனால் இரு உள்ளங்கள் மட்டும் இவற்றைப் பொருட்படுத்தாது, வாழ்வைப்பற்றி வாதிட்டுக்கொண்டிருந்தன. ஆம்! அது ஓர் மண்பானை. 'மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே!' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, குயவனின் கைவண்ணத்தால் அழகுற வனையப்பெற்றிருந்த, அந்தப் பானை தன் அழகிய செவ்விள மேனியை ஒரு முறை கண்ணோட்டமிட்டது. அதற்கு ஆனந்தம் தாங்கவில்லை. தன்னை உருவாக்கிய தந்தையான குயவனை வாழ்த்தி வணங்கியது. "மண்ணையும் படைத்து, அதில் மனிதனையும் இறைவன் படைத்தது இதற்குத்தானோ?" என்று மண்பானை சிந்தித்த வேளையிலே......!

எங்கிருந்தோ வந்த நகைப்பொலி அதன் சிந்தனையைச் சிதறடித்தது. "ம்... யாரது?" என்று சற்று அதட்டலாகக் கேட்டது மண்பானை.

"ஓகோ! நேற்று வந்த நீ அதட்டிக் கேட்குமளவிற்கு வந்துவிட்டாயா?" என்று கேட்டது அக்குரல்.

மட்பாண்டம் மென்னகை பூத்தது. "இதென்னடா, பெரும் வம்பாயிருக்கிறது. தன்னை யார் என்று கூறாமலேயே, என்னோடு சண்டைக்கு வருவது யார்?" என்றது மண்பானை.

"என்ன, என்னைத் தெரியவில்லையா உனக்கு? உன் பெருமை உன் கண்களை மறைத்துவிட்டது போலும்! இங்கே பார்! என்னழகைப் பார்!" என்று இறுமாப்புடன் இயம்பியது அக்குரல்.

குரல் வந்த திக்கை நோக்கியது மட்பாண்டம். ஆங்கே அழகே உருவான ஒரு வெள்ளிப்பானை மின்னிக்கொண்டிருந்தது. "ஓ! நீதானா இவ்வளவு நேரமும் பேசினாய்? உன் திடீர் ஆத்திரத்திற்குக் காரணம் என்னவோ?" என்று இதமுடன் கேட்டது மட்பாண்டம்.

"ஏ, மண்பிண்டமே! நீ இன்றிருப்பாய்; நாளை இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிடும் தன்மை படைத்த உனக்கு, இத் திருமண விழாவில் அளிக்கப்பட்டிருக்கும் கௌரவத்தை நினைக்கையில் என் நெஞ்சமுறும் வேதனையைச் சொல்ல வார்த்தைகள் இல்லை!"



மட்பாண்டம் தனக்குள் சிரித்துக்கொண்டது. "சகோதரி! உன் உள்ளம் இன்னும் பண்படவில்லை. மனிதருக்குள்தான் ஆற்றாமை, வேதனை, மனக்குமுறல் எல்லாம் அமைந்துள்ளன என்றால், எம்மிடமும் இருக்கத்தான் வேண்டுமா? சே! கூடவே கூடாது" என்றது

"ம்... உன் பெருமையின் அகம்பாவத்தில் என்னிடம் தத்துவமா பேசுகிறாய்?" என்று சீறிச் சினந்தது, வெள்ளிப்பானை.

"சோதரி! நான் தத்துவம் பேசவில்லை. உண்மையைத்தான் உரைக்கிறேன். நீ வெள்ளியால் ஆக்கப்பட்டவள்; நான் மண்ணால் ஆக்கப்பட்டவள். மனித வாழ்விற்கு யாம் இருவருமே பயன்படுகிறோம். உண்மையான மகிழ்ச்சியும் பெருமையும் வீண் ஆரவாரத்திலில்லை. பிறர்க்கு யாம் எந்த வகையில் பயன்படுகிறோம்? என்பதில்தான் தங்கியுள்ளது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்பதை மறவாதே சோதரி!" என்றது மட்பாண்டம்.

மட்பாண்டத்தின் பேச்சைக் கேட்ட வெள்ளிப்பானை மோனத்தில் மூழ்கிவிட்டது. இவ்வாறு இருக்கையில், நங்கையொருத்தி, பசுப்பாலைக் கொண்டுவந்து, வெள்ளிப்பானையில் ஊற்றி மூடிவிட்டுச் சென்றாள். மண்பானை வெள்ளிப்பானையை ஏறிட்டுப் பார்த்தது. வெள்ளிப்பானை ஆற்றாமையின் செந்தணலிலிருந்து மீட்சிபெற்று மண்பானையைப் பார்த்துக் கனிவாகச் சிரித்தது.

மலையகப் பெண் எழுத்தாளர் இரா. சரஸ்வதி, இலங்கைப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் அவ்வப்போது, கதை கட்டுரை எழுதிவருகிறார். கலைநயம் மிகுந்த நடை, ஆழ்ந்த நோக்கு, சத்திய வேட்கை இத்தனையும் அவர் எழுத்துக்களில் பிரதிபலிப்பதைக் காணலாம். சிறந்த பேச்சாளரும் பாடசாலை ஆசிரியையுமான இவர் நிறைய எழுதியிருந்தாலும், தன்னடக்கம் மிகுந்தவர்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாத்திரீடம்

செங்கை ஆழியான்

வானத்தின் உச்சியிலிருந்து விண்மீன் ஒன்று ஓயாமல் நடுங்கிக்கொண்டிருந்தது. ஒருகணம் ஒளி வீசுவதும், மறுகணம் அணைவதுமாக இருந்த அந் நட்சத்திரம் கண்சிமிட்டுவதாக எனக்குப் படவில்லை; அது முதிர்ந்த வயோதிபத் தளர்ச்சியால் நடுங்குவதாக எனக்குப்பட்டது.

என்மனதின் இயக்கம் அப்படி. அசைகின்ற எதனைக்கண்டாலும் தளர்ச்சியால் நடுங்குவதாகவே எனக்குப்படும். கடந்த ஐந்தாண்டுகளாகத் தான் எனக்கு இந்தப்பிரமை.

என் சூழல் அப்படி. தளர்ச்சிகளிடையே வாழ்பவன், நான். வாழ்க்கையின் நீண்டபயணத்தை முடித்துக்கொண்டு இறுதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கிழங்களிடையே என் வாழ்க்கை கழிகின்றது; அதுதான் என்கடமை.

வயோதிபமடம் ஒன்றின் மேற்பார்வையாளனாக என்று பொறுப்பேற்றேனோ, அன்றே எனக்கு வாழ்க்கையின் தத்துவம் புரிந்தது; சின்னத்தனமான உலகத்தினரின் உள்ளங்களும் புரிந்தன. உடல் தளர்ந்த வயோதிபர்களும் உள்ளந்தளர்ந்த வயோதிபர்களும் அம்மடத்தில் இறுதியை எதிர்பார்த்துப் பொழுதைக்கழித்தார்கள். அவர்களைத் தினமும் காண்கிறேன். அவர்களின் இன்ப துன்பங்களில் தினமும் பங்குகொள்கிறேன்.

வானத்தின் உச்சியிலிருந்து நடுங்கிக்கொண்டிருக்கிறதே, நட்சத்திரம்; அது ஏனோ இன்று எனக்குச் சாம்பசிவத்தாத்தாவை நினைவு படுத்துகின்றது.

சாம்புத்தாத்தா எவ்வளவு இனிமையானவர். இவ்வயோதிபமடத்திற்கு அவரால் எவ்வளவு களை? சாம்புத்தாத்தா அவ்வயோதிப மடத்திற்கு வந்த வேளையும், நான் மேற்பார்வையாளனாகப் பதவியேற்ற வேளையும் ஒருநாளே. நான் முதன்முதல் வயோதிபமடத்தில் சேர்த்த முதல் வயோதிபர் அவர்தான். அந்த நாள் இன்றும் எனக்குப் பசுமை மாறாது இருக்கிறது.

மழைபெய்து ஓய்ந்திருந்த ஒரு மாலை வேளை. என் அறை வாசலின் முன் யாரோவந்து நிற்பது போன்ற பிரமை ஏற்படவே தலைநிமிர்ந்து பார்த்தேன் ஒரு வயோதிபர் நின்றிருந்தார்.

பால்போல வெண்மைநிறம்; உடலில் சுருக்கங்கள் விழுந்து தளர்ந்திருந்தன. துல்லியமான வேட்டி; சால்வை. வழுக்கைவிழுந்த பளபளப்பானதலை. மழையில் நனைந்திருக்கிறார்போலிருக்கிறது.



புவியியற் சிறப்புப் பட்டதாரியான 'செங்கை ஆழியான்' பல்கலைக்கழகத்திலிருந்த போதே 'கதைப்பூங்கா', 'விண்ணும் மண்ணும்', 'காலத்தின் குரல்கள்', 'யுகம்' முதலிய நூல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். 'புவியியல்', 'விவேகி' என்னும் இதழ்களின் ஆசிரியராக இருந்திருக்கிறார். நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளும் ஏழு நாவல்களும் இதுவரை எழுதியுள்ளார். 'சுதந்திரன்', 'ஈழநாடு' நடாத்திய சிறுகதைப் போட்டிகளில் முதற்பரிசுகளைப் பெற்றிருக்கிறார். இவர் எழுதிய ''நந்திக்கடல்'', ''ஆச்சி பயணம் போகிறாள்'', ''சுருட்டுக் கைத்தொழில்'' ஆகிய நூல்களை யாழ் இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ளது. யாழ் இலக்கிய வட்டத்தை உருவாக்க உதவியதுடன் அதன் இணைச் செயலாளராகவும் இருந்து பணியாற்றியிருக்கிறார். இன்று அதன் உபதலைவராக இருந்து இலக்கியப்பணி புரிகிறார்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் மெதுவான நடுக்கம். வலதுகையால் தடியொன்றை இறுகப்பற்றி ஊன்றியபடி இடதுகையால் கதவு நிலையைப்பற்றியபடி, அவர் நின்றிருந்தார். வானத்தின் உச்சியிலிருந்து நடுங்கிக்கொண்டிருக்கிறதே இந்த நட்சத்திரம். அதைப் போலத்தான் அன்று அவர் நின்றிருந்தார்.

அவர் விழிகளை என் கண்கள் சந்தித்தன. எவ்வளவு பரிதாபகரமானது!

''வாருங்கள், தாத்தா! உங்களுக்கு என்ன வேண்டும்?''

தயங்கியபடி உள்ளே நுழைந்த அவர், என் முன் இருந்த கதிரையில் அமர்ந்தார்; நிம்மதியான நெடுமூச்சு எடுத்தது. சால்வையால் தலையையும் முகத்தையும் ஒத்திக்கொண்டார்,

''ஏன்தாத்தா, அறையைவிட்டு மழைக்கை வந்தீர்கள்?''

என் கேள்வி அவருக்கு விளங்கவில்லை என்பதை உடன் நான் கண்டுகொண்டேன். நான்தான் தவறான கேள்வியைக் கேட்டுவிட்டேன். அவர் இந்த வயோதிபமடத்தில் இருப்பவர்களில் ஒருவர் என நான் தவறாகக்கருதிவிட்டேன். அவர் இந்த மடத்தில் புதிதாகச்சேருவதற்காக வந்திருக்கிறார்.

"என்பெயர் சாம்பசிவம், தம்பி ... என்னையும் இம்மடத்தில் சேர்த்துக்கொள்ளுவீர்களா?..."

"அநாதைகளுக்காகத்தான், இந்தமடம், தாத்தா! அநாதை என்றால் எவரையும் சேர்த்துக்கொள்வோம் ... உங்களுக்குப் பிள்ளைகள் இல்லையா?"

''பிள்ளைகள் இருக்கிறவர்கள் அநாதைகளாவதில்லையா?''

அவருடைய கேள்விக்கு என்னால் உடனடியாகப் பதில்கூற முடியவில்லை. வயோதிபமடத்தில் இருப்பவர்கள் எல்லாரும் அநாதைகளல்லர். பிள்ளைகளாலும் உற்றாராலும் புறக்கணிக்கப்பட்டு இங்கு வந்து ஒதுங்கிய சீவன்கள் இங்கு அதிகம்தான்.

'வயோதிபமடம் இந்நாட்டிற்கு ஒருவகையில் அவமானம்' என்று நான்சிலவேளைகளில் நினைப்பதுண்டு. பெற்றுவளர்த்து, சீராட்டிப்பாராட்டி, பாலூட்டி ஆளாக்கிய பெற்றோரை, நன்றிமறந்து, தங்களுக்கு இடைஞ்சல் என்று கருதி, வயோதிப மடத்தில் பெரிய இடங்களின் சிபார்சுகளோடு கொண்டுவந்து தள்ளிவிடும் புண்ணியவான்களை நான் கண்டிருக்கிறேன். நாளைக்கு இவர்களுக்கு இந்நிலைவராது என்பது என்னநிச்சயம்?

உண்மையிலேயே, எவரும் பார்ப்பதற்கு இல்லாத அநாதைக்கிழவர்கள் இங்கு இருக்கிறார்கள் தான்.

சாம்புத்தாத்தாவின் கேள்வியில் நியாயம் இருக்கவே செய்தது. அவர் தொடர்ந்தார்; அவர் விழிகள் நீரைச் சொரிந்தன:

''தம்பி...... உண்மையில் நான் அநாதை...... எனக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். நல்ல நிலையில் இருக்கிறார்கள்... அவர்களுக்கு நான் இப்போது உதவாதவன்! என்னால் எனக்குத் தேவையானவற்றைத் தேடிக்கொள்ளவும் உடம்பில் பலமில்லை. நான்அநாதை தான்...''

பரிதாபத்துக்குரிய மனிதர்தான். இவரைப் போல எத்தனைபேர்?

''உங்களை இங்கு சேர்த்துக்கொள்ளச்சட்டம் இடம் கொடுக்காதே, தாத்தா?...''

அவர் சிரித்தார்.

"அதுக்காகத்தான் தம்பி, விதானையிட்டையும், டி. ஆர். ஓ. விட்டையுமிருந்து காகிதம் வாங்கி வந்திருக்கிறன்...''

அவ்வாறுயின் அவர் அநாதைதான்.

சாம்புத்தாத்தா வயோதிபர்மடத்திற்கு வந்து ஐந்தாண்டுகள் கழிந்துவிட்டன. அவர் நேற்று வந்ததுபோலத்தான் இருக்கிறது. அவர் வந்தபிறகு இம்மடத்தில் எத்தனை மாற்றங்கள்?

மடத்தைச்சுற்றி வரண்ட கட்டாந்தரையே விரிந்துகிடந்தது. இன்று அத்தரையில் குலைகளைத் தள்ளி குட்டிகள் ஈன்று செழித்து வாழைமரங்கள் வளர்ந்திருக்கின்றன. கிணற்றங்கரையை அடுத்துக் காய்கறித்தோட்டம். எல்லாம் சாம்புத்தாத்தாவின் முயற்சிதான். சோம்பிக்கிடந்த கிழடுகள் எல்லாம் இன்று சாம்புத்தாத்தாவோடு ஏதோ தம்மாலியன்றளவு வேலை செய்கின்றன. கிடைக்கின்ற பயனில் இங்குள்ள நூற்றியிருபது கிழவர்களுக்கும் பங்குண்டு.

சாம்புத்தாத்தா அவ்வயோதிபர்களின் தலைமைப்பொறுப்பை எவருமே வழங்காமல் வகித்தார். எல்லா வயோதிபர்களும் அவரின் வார்த்தைகளுக்குக்கட்டுப்படுவதை நான் கண்டிருக்கிறேன். சாம்புத்தாத்தா ஒருவகையில் அவ்வயோதிபமடத்தைப் பராமரிப்பதில் எனக்குப் பெருந்துணையாக இருந்தார் என்றே கூறவேண்டும்.

அவர் அடிக்கடி என்னைநாடி வருவார். அவர் வருகையை நானும் விரும்பினேன்.

''தம்பி, நமது மடத்திற்குப் பத்திரிகைகள் ஒழுங்காக வருவதில்லை. ஒருக்காக் கவனியும் ...''

கவனித்தால் உண்மை புலனாகும்; வாசிகசாலைக்குப் பொறுப்பாயுள்ளவர் தமது அறையில் பேப்பர்களைப் பூட்டிவைத்திருக்கும் மர்மம்.

"தம்பி..." என்று ஒருநாள் தயங்கினார், சாம்புத்தாத்தா.

"என்ன, தாத்தா ...?"

''வெள்ளிக்கிழமைகளில் எங்களுக்குப் பாயாசமும் தர ஒழுங்கு செய்துதாரும்... ஆசைப்படுகினம்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கண்கள் கலங்கின. எவ்வளவு ஆசைகளைத்தான் இந்த வயோதிபர்கள் வைத்திருக்கிறார்கள்?

"செய்துதரச்சொல்லுகிறேன் தாத்தா... வேறும் ஏதாவது தேவையென்றால் தயங்காமல் கேளுங்கள்..."

அவ்வயோதிபமடத்தில் ஒருவித மலர்ச்சியும் மகிழ்ச்சியும் குடிகொள்ளத்தொடங்குவதை நான் அவதானித்தேன். தங்களுக்குச்சொந்தமான வீட்டில் ஓடிஆடிப் பழகுவதைப்போல அங்குஎல்லாரும் திரிந்தார்கள்.

வயோதிபமடத்து வேலைக்காரிகளுக்கும் வேலைகள் குறைந்தன. ஒரு வயோதிபருக்குச்சுகமில்லை என்றால், மற்றவர்கள் அவரைப்பரிவோடு கவனித்தார்கள். சாம்புத்தாத்தா சாகக்கிடக்கும் வயோதிபர்களின் மலசலத்துணிகளைக் காவிச்செல்வதைப் பலதடவைகள் நான் கண்டிருக்கிறேன்.

"உங்களுக்கு ஏன் தாத்தா, இது .. வேலைக்காரர்கள் கவனிப்பார்களே?..."

"இல்லை, தம்பி! இதிலை என்ன குறை.. தாய் தேப்பனுக்குக் கடைசி காலத்திலை பிள்ளையள் செய்யவேண்டிய வேலைஇது .. பிள்ளைகள் இல்லாதவர்களுக்கு நான் செய்கிறேன்..." அவ்வேளைகளில் அவர் விழிகள் கலங்கும். எதை எண்ணிக்கலங்குவாரோ?

நான்கு பிள்ளைகளின் தந்தை அவர்; இன்று...?

சாம்புத்தாத்தாவைத்தேடி எந்தஒரு பிள்ளையும் இதுவரைகாலமும் இங்கு வந்ததை நான் காணவில்லை. ஆனால், சாம்புத்தாத்தாவின் பிள்ளைகள் நல்லநிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் பலதடவை அறியநேர்ந்திருக்கிறது.

மாலைவேளைகளில் மடத்தின் மாமரநிழலில் கும்பல்கும்பலாக அமர்ந்து வயோதிபர்கள் பலதையும் பேசிக்கொள்வார்கள் அங்கு அடிபடாத விஷயமே கிடையாது.

வாழ்ந்த வாழ்க்கை .. சீரழிந்து போனகதை... பிள்ளைகளின் தறுதலைத்தனம்... அரசியல்... எல்லாம் அவர்கள் பேச்சில் இடம்பெறும்.

"நீ உன்ரை தாய்தேப்பனை வடிவாக் கவனிச்சிருந்தால், உன்னை இண்டைக்கு உன்ரை பிள்ளைகள் கைவிட்டிருக்குமோ? .." என்பார் ஒரு கிழவர்,

"விசர்க்கதை கதைக்கிறாய்? அது என்ரை விதி.. அளந்தஅளவு அவ்வளவுதான்... நீ என்ன திறமோ?"

"நான் மலடன்"


சாம்புத்தாத்தா வந்தால் அங்கு ஒருவகை அமைதிநிலவும்.

"உங்களுக்கு உந்தக்கதைகளை விட்டால் வேறு பேச்சில்லை... ஏதோ, எப்படியோ இங்கை வந்திட்டம். இனி அதைப்பேசிக் கவலைப்பட்டு என்ன பயன்?... இங்கையாவது சந்தோஷமாக இருக்கப் பாருங்கோ..." என்பார், அவர்.

"இண்டைக்கு இரவு என்னசாப்பாடு?..." என்று சாம்புத்தாத்தாவைக் கேட்பார்கள்.

"களி..." என்பார் அவர்; ஒவ்வொருநாளும் என்னவென்ன சாப்பாடு என்று அவருக்குத்தான் தெரியும்.

வானத்தின் உச்சியிலிருந்து அந்த நட்சத்திரம் இன்னமும் நடுங்கிக்கொண்டுதான் இருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. கடந்த இருதினங்களாக வயோதிபமடத்தில் என்றுமேயில்லாத சோகம் குடி கொண்டு விட்டது. எல்லா வயோதிபர்களும் எதையோ பறி கொடுத்தவர்கள் போல உலவினூர்கள்.

சாம்புத்தாத்தா படுத்த படுக்கையாகி விட்டார்; வைத்தியர்களும் கைவிரித்து விட்டார்கள். என்னைப் பெற்ற தந்தையைப் பறிகொடுப்பது போல என்னுள்ளம் வருந்துகின்றது. வயோதிப மடத்தில் எத்தனையோபேர் இறக்கிறூர்கள், என்ருலும், சாம்புத்தாத்தாவை இழக்க மடம் தயாராக இல்லை.


மாபெரும் தலைவர் ஒருவரை இழப்பதா?

எட்டு நாட்களுக்குமுன் அவர் நல்ல ஆரோக்கியத்தோடுதான் இருந்தார். என்னை அன்று மாலை சந்தித்தகாட்சி மறக்கக்கூடியதா?

"தம்பி... நாளைக்கு சிவராத்திரி..."

"அதுக்கு என்ன, தாத்தா? ஏதாவது விசேஷ உணவு தேவையா?"

அவர் சிரித்தார்.



"அப்படியில்லைத் தம்பி... நாங்க நித்திரை முழிக்க விரும்புகின்ருேம்..."

"உடம்புக்கு ஒத்துவருமா, தாத்தா?"

"அதிலென்ன... வருடத்தில் ஒருநாள்தானே?"

"ஆதுக்கு நான் என்ன செய்யவேண்டும்?..."

"இங்கு கதாப்பிரசங்கம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்துதாரும், தம்பி..."

அவருடைய வேண்டுகோள் நியாயமானதாகவே பட்டது. கதாப்பிரசங்கங்களும் பஜனைகளும் வயோதிபர்களுக்கு நிம்மதியைத் தரக்கூடியனவே. சாம்புத்தாத்தா நியாயமல்லாதவற்றை ஒருபோதும் கேட்கமாட்டார்.

ஒழுங்கு செய்து கொடுத்தேன். வயோதிபர்கள் மிகுந்த மகிழ்வோடு சிவராத்திரி விரதத்தை அனுட்டித்தார்கள்.

மறுநாள் சாம்புத்தாத்தாவை நான் கண்டபோது, அவர் சோர்ந்து காணப்பட்டார்.

"என்னதாத்தா, நித்திரைத் தூக்கக்களைப்பா?"

"இல்லை, தம்பி... நேற்றுக் காதாப்பிரசங்கம் செய்தவர் கூறிய ஒரு விஷயம் மனதைக் குழப்புகிறது..."

சாம்புத்தாத்தாவை நான் நிமிர்ந்து பார்த்தேன். அந்த முகத்தில் கருணை பொழியுமே? ஒரு வகை வைராக்கியம் எப்படிக்குடிவந்தது? அவர் தொடர்ந்தார்.

"முனிவர்களும் அசுரர்களும் யாகம் செய்தார்கள். முனிவர்கள் யாககுண்டத்தில் நெய்யையும் பாலையும் பொரியையும் அவியாக இட்டார்கள். அக்குண்டத்திலிருந்து தேவன் ஒருவன் தோன்றினுன்... அசுரர்கள் இரத்தத்தையும் ஊனையும் அவியாக இட்டார்கள்! அவர்களது குண்டத்தில் இருந்து பூதம்தான் தோன்றியது..."

நான் அவரை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தேன். அவர் நெற்றிவியர்வையை ஒத்திக் கொண்டு ஆவேசத்தோடு பேசினுர்:

"எங்கள் இதயமும் ஒரு யாககுண்டம்தான், தம்பி!..."

அவருக்குப் பெருமூச்சு வாங்கியது. நான் அவரை ஆசுவாசப்படுத்தினேன். உண்மைதான். இன்று நினைத்துப்பார்க்கும்போது உண்மை புலனுகத்தான் செய்கிறது. பிள்ளைகளால் நன்கு பராமரிக்கப்படாது கைவிடப்பட்ட வயோதிபத் தந்தை தாய்களின் இதயங்கள் யாககுண்டங்கள்தாம். பிள்ளைகள் அக்குண்டத்தில் சொரிந்தஅவி தேவனுக நிச்சயம் உருவாகாது; பூதந்தான் தோன்றும்.

சாம்புத்தாத்தாவின் இதய குண்டத்திலிருந்து தேவனு, பூதமா தோன்றியது என என்னுல் நிச்சயம்கூற இயலவில்லை. முந்தநாள் சாம்புத்தாத்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பார்க்கவிரும்புவதாக அறிந்துபோனேன். வெட்டிச்சரிந்த வாழைமரமாக அவர் படுக்கையில் கிடந்தார்.

"தம்பி.." அவர்குரல் இதய அடிவாரத்திலிருந்து எழும் ஒடுங்கிய குரலாகக் கேட்டது: "என்பிள்ளைகளை ஒருக்கா நான் பார்க்கவேணும்... அறிவித்துவிடுகிறயா, தம்பி! .."

நான் மறுக்கவில்லை; மறுக்கும் அதிகாரம் எனக்கு இல்லை.

சாம்புத்தாத்தாவைத் தந்தையாகப் பெற்ற அப்புண்ணியவான்களை நான் ஒருதடவை காணத்தான்வேண்டும்; இனிய ஒரு தந்தையை இறுதி காலத்தில் பராமரிக்கக் கொடுத்துவைக்காத அந்தத் துரதிர்ஷ்டசாலிகளை நான்ஒருதடவை காணத்தான் வேண்டும்.

நான்கு பேருக்கும் நான் செய்தி அனுப்பினேன். இரண்டுநாட்களுக்குப்பின் இருவர் ஓடோடி வந்தார்கள்.

சொந்தக்கார்; பளபளப்பான ஆடை; நல்ல வசதியோடுதான் அவர்கள் இருந்தார்கள்.

அவர்கள் முதலில் என்னிடம் வந்து என்னைச் சந்தித்தார்கள்.

"சாம்பசிவம் என்பவர் பிள்ளைகள் நாங்கள்..."

"ஓ அப்படியா? உட்காருங்கள்..." அவர்களைக் காணும்போது என் இதயம் கடலாகக் குமுறியது.

"அவருக்கு எப்படி?..."

"கடுமைதான் இன்றையோ நாளையோ...?"

"அப்படியா? பிணத்தை எங்களிட்டை தந்திடுங்கோ அவருடைய இறுதியாத்திரையைப் பெரிசாச் செய்ய வேணும்.. கட்டாயம் செய்ய வேணும் எங்க கடமை அது...?"

கடமைக்கு எவ்வளவு அற்புதமாக இந்தப் பிள்ளைகள் விளக்கம் தருகிறார்கள்?

"ஏன், இப்பவே கொண்டு போங்களேன் "

"சீச்சி உசிரோடை வேண்டாம் உமக்குத் தெரியாததே? கிழடுகளைப் பராமரிப்பது மிகக்கஷ்டம்... சீவன் போனவுடன் அறிவியுங்கோ...! இப்ப அவரை ஒருக்காப் பார்க்கலாமே? "

என்னால் பொறுக்கமுடியவில்லை.

"இப்ப என்னத்துக்கு? சீவன் போனவுடன் பாருங்கோ! .. "

அவர்கள் என்னை வெறுப்போடு பார்த்தார்கள். என் குரலிலிருந்த வெறுப்பையும், அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்தையும் உணர்ந்து கொண்டேன்

"எங்கடை 'பாதரை'ப் பார்க்க நீர் தடை செய்ய முடியாது ... ..."

"இவ்வளவு காலமும் நீங்களே பாத்தனீங்கள்?... சும்மா, போங்கள் ...! நாளைக்கு உங்கடை பிள்ளைகள் உங்களை இங்கை கொண்டு வந்து தள்ளி விடாமலா போகப்போகுதுகள் .. ' செத்த பிறகு அறிவிக்கிறேன், விரும்பினால் வந்து பிணத்தைக் கொண்டுபோய் ஊருக்குக் காட்டுங்கள்."

அவர்கள் போனபிறகு, நான் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டதாக உணர்ந்தேன். நான் வயோதிபமட மேற்பார்வையாளன். உணர்ச்சி வசப்பட எனக்கு இவ்விஷயத்தில் உரிமையில்லை.

வானத்து நட்சத்திரம் ஓயாமல் நடுங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. எனக்குத் தூக்கம்வர மறுக்கிறது. சாம்புத்தாத்தா இப்போது எப்படி இருக்கிறாரோ?

அறையை விட்டு வெளியேவந்தேன். என் கால்கள் அவரிருந்த அறையை நோக்கி நடந்தன.

மங்கலான விளக்கு ஒளியில் சாம்புத்தாத்தா வாங்கில் கிடக்கிறார். அவரைச் சுற்றி அவரது தோழர்கள் விழிநீரைச் சுமந்து இருக்கிறார்கள்.

"தாத்தாவின் பக்கத்தில் போய் நான் அமர்கின்றேன். நான் ஏன் அழுகின்றேன்? என் கண்கள் ஏன் நீரைச் சொரிகின்றன?

"தாத்தா .. சாம்புத்தாத்தா ... "

அவர் மெதுவாக விழித்து என்னைப் பார்க்கிறார்.

ஏதோ கூற அவர் உதடுகள் துடிக்கின்றன. குனிந்து அவர் உதட்டோடு வலது காதைப் பொருத்துகின்றேன்.

"தம்பி . என் பிணத்தை இங்கேயே எரித்துவிடு ..."

சாம்புத்தாத்தா போய்விட்டார். எல்லா வயோதிபர்களும் கதறி அழுகின்றார்கள்.

நான் வெளியே எழுந்து வருகின்றேன். சாம்புத்தாத்தாவின் யாக குண்டத்திலிருந்து வெளி வந்தது பூதந்தான்.

❋


அனைவரும் படிக்கவேண்டிய ஈழத்து
இலக்கிய நூல்
யாழ் வாணனின்
"அமரத்துவம்"
(சிறுகதைத் தொகுதி)
வெளியீடு: யாழ் இலக்கிய வட்டம்.
கிடைக்குமிடம்:
தனலக்குமி புத்தகசாலை.
சுன்னாகம்.
விலை: ரூபா 2-50.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஈழத்தின் மற்ருெரு முது பெரும் எழுத்தாளர் வ. அ. இராசரெத்தினம். 1947ம் ஆண்டுமுதல் எழுதிவருகிருர். ''கொழு கொம்பு'' (நாவல்) ''தோணி'' (சிறுகதைத் தொகுப்பு) இதுவரை வெளிவந்துள்ள இவரது நூல்கள். ''தோணி'' 1963ல் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றுள்ளது. யதார்த்தமும் மனிதாபிமானமும் இவரது கதைகளில் பளிச்சிடும். தற்போது மூதூர் பாடசாலை ஒன்றில் தலைமையாசிரியராகக் கடமை ஆற்றி வருகிருர் இவர்.

—ஆசிரியர்.

கணக்கா?

ஆரம்பப் பாடசாலையில் ஐந்து வகுப்புக்களை வைத்துக்கொண்டு மாரடிக்கும் நான், கரும்பலகையிற் கணக்குகளை எழுதி முடித்து, அடுத்த வகுப்பிற்குப் பாடத்தைத் தொடங்க முன் அவள் அத்தனை கணக்குகளையுமே செய்து முடித்து விடுவாள்.

எழுத்தா?

குண்டு குண்டாகத் தூக்கி நிறுத்தினற்போல ஒவ்வொரு எழுத்துமே 'என்னைப்பார் என் அழகைப்பார்' என்று சொல்வதுபோலப் பளிச்சென்று அட்சர சுத்தமாய் ... ...

ஐந்தாம் வகுப்புப் பாடப்புத்தகமான 'தமிழ் மலர்' அவள் அசுரவேகத்தைத் தாக்குப்பிடிப்பதாக இல்லை. பாடசாலை தொடங்கிச் சில நாட்களுக்குள்ளே அவள் அப்புத்தகத்தை வாசித்து முடித்து விட்டாள். அவள் வேகத்திற்கு ஈடு செய்ய நான் எங்கெங்கெல்லாமோ தேடிக்கொண்டுவந்து கொடுக்கும் அத்தனை புத்தகங்களையுமே அவள் வாசித்து முடித்துவிட்டாள்.

என் இருபது வருட ஆசிரிய அனுபவத்தில் அத்தனை விவேகமுள்ள மாணவியை நான் சந்தித்ததேயில்லை. சரோஜா என்ற அச் சின்னஞ்சிறுமி எதிர்காலத்தில் ஒரு சரோஜினி தேவியாகவோ, அல்லது தனக்குத்தானே நிகரான ஒரு சரோஜாவாகவோ திகழ்வாள் என நான் எண்ணிக் கொள்வேன். ஆரம்ப ஆசிரியளுக இருக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமைப் பட்டுக் கொள்வேன்.

ஆயினும் அந்தக் குக்கிராமத்தில் எவருமே — அதிலும் பெண்கள் — ஐந்தாம் வகுப்பிற்கு மேற் படிக்க எவரும் அனுமதிக்க மாட்டார்களே என்ற எண்ணம் எனக்குக் கவலையைக் கொடுத்துக் கொண்டேயிருந்தது!

ஆமாம் ஊருக்குக் கிழக்கே கூப்பிடு நூரத்தில் மாவலித்தேவி சலசலத்து ஓடிக்கொண்டிருக்கிருள். தைப்பூசத்தின் பின்னுற் பெரும் போக அறுவடை முடிந்ததும், ஊரவர்கள் எல்லாருமே கங்கைக்கரையில் மிளகாய்த்தோட்டம் செய்யப் போய்விடுவார்கள். ஏற்றம் இறைத்தல், பாத்தி கட்டல், களைபிடுங்கள், காய்பறித்தல், அதைச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்றல் என்று அடுத்த ஆறு ஏழுமாதங்கட்கு ஆண் பெண் குழந்தைகள் எல்லாருக்குமே வேலையிருக்கும். மேற்படிப்பைப்பற்றி அவர்கள் எக்காலத்துமே கவலைப் படவில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது அவர்கள் அறிந்திராத ஒரு சங்கதி!

ஆயினும் நான் நாளும் பொழுதும் சரோஜாவின் தந்தையிடம் பேசி, அவர் மனதைக் கரைத்து அந்த ஆண்டுப் பரீட்சை முடிந்தவுடன் பக்கத்தூரிலுள்ள மஹா வித்தியாலயத்திற்கு அவளை அனுப்பிவைத்தேன். கிராமத்திலிருந்து செல்லும் ஓரிரு சிறுவர்களோடு சரோஜா மஹா வித்தியாலயம் சென்று கொண்டிருக்கிருள். அவளது விவேகத்தையும், கெட்டித்தனத்தையும் மஹா வித்தியாலய அதிபர் வாயிலாகக் கேட்டு நான் பெருமிதமடைந்து கொண்டிருந்தேன்.

ஆயினும் என் மனதில் உள்ளூர ஒரு கவலை இருந்துகொண்டேயிருக்கின்றது. 'சரோஜா 'பெரியவளான'பின் பாடசாலைக்குச் செல்ல அவள் தந்தை அனுமதிக்கமாட்டார்.

இந்தக் கவலையோடு பட்டினத்துப் பெண்கள் விடுதிப்பாடசாலை ஒன்றிலே நான் சரோஜாவிற்கு இடம் தேடிக் கொண்டேயிருந்தேன்.

''என்னத்திற்கையா பெண்ணை அதிகம் படிக்க வைப்பது? இன்னும் நாலு ஐந்து வருடம் போனுல் குடியும் குடித்தனமுமாக வாழவேண்டியவள். அதுவரை தாய்க்குதவியாக வீட்டிலிருந்து கொண்டு தொழிலுக்குச் செல்லும் அண்ணன்மாருக்கும் எனக்கும் ஆக்கிப்படைத்தால் அந்தப் படிப்பே அவளுக்குப் போதும்.

என வாதம் பண்ணிய அவள் தந்தையை மிகுந்த சிரமப்பட்டுப் பட்டினத்துப் பாடசாலைக்குச் சரோஜாவை அனுப்பிவைக்க ஒப்புக் கொள்ளச் செய்தேன். அடுத்த தைமாதம் வரைக்கும் அதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரோஜா பக்கத்தூரிலுள்ள மஹா வித்தியால யத்திற்கு ஒழுங்காகச் சென்று கொண்டிருக்கிறுள். வெள்ளேச் சட்டையும் நீலக் கழுத்துப்பட்டியும், காலிலே வெள்ளேச் சப்பாத்துமாக அவள் பாட சாலேக்குச் செல்வதைக் காணும் போதெல்லாம், நான் ஓர் எதிர்காலச் சரோஜினிதேவியைச் சிருஷ் டித்துக் கொண்டிருக்கிறேன் என, என் மனத்துட் புளகாங்கித மடைந்து கொண்டிருந்தேன்.

* * *

ஒரு நாள் நடுநிசி. ஆடி மாதத்துக் கச்சான் காற்று ஹோய் என்ற சப்தத்துடன் உறுமிக் கொண் டிருந்தது. அப்பேய்க்காற்றின் உறுமலுக்கு மேலாக எங்கிருந்தோ அவலக்குரல் கேட்டது. கனவிலே கேட்பது போன்ற அவ்வோலத்தைக் கேட்டுக் கண் விழித்த நான் சத்தம் வந்த திசையிற் காது கொடுத்து உன்னிப்பாகக் கேட்டேன், அந்த ஓலம் சரோஜாவின் வீட்டிலிருந்துதான் வருவதாக எனக் குப் பட்டது. நான் மின் விளக்கைக் கையில் எடுத் துக்கொண்டு ஓட்டம்ஓட்டமாக அங்கே சென்றேன்.

அந்த அர்த்த இராத்திரியிலே சரோஜாவின் வீட்டிலே கிராமம் முழுமையுமே திரண்டிருந்தது.



வீட்டினுள்ளே கிராமத்துப் பெண்கள் எல்லாருமே கூடி ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள். வெளியே கூடியிருந்த ஆண்கள் எல்லாரும் 'வாழ்க்கை நிலேயாமை' பற்றி வாய் ஓயாமற் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆஹா! இழவு வீட்டிலேதான் தத்துவங்கள் பிறக்க முடியும்!

நேற்றுவரை சுகதேகியாக இருந்த சரோஜாவின் தாயார், ஏழு பிள்ளேகளேப் பெற்றெடுத்திருந்த அப்பேரிளம் பெண், தன் எட்டாவது குழந்தையைத் தரித்திருக்கையிற் செத்தே விட்டாள். நேற்று மிளகாய்த் தோட்டத்திற்குச் சென்று காய் பறித்தாளாம். எந்த நோயுமே இல்லேயாம். திடீரென ஒரு வலிப்பாம், வலிப்பிலே 'அம்மா' என்று அலறி ஞளாம்! அவ்வளவுதான், பின்னர் 'பேரை நீக்கிப் பிணம் என்று பேரிட்ட' திருமூலர் கதையாகிவிட் டது. விடிந்தாற் சூரையங் காட்டிலே கொண்டு போய்ச் சுடமட்டும் 'ஞானத்திற்கு'க் குறைச்சலே யிராது.

நான் இடிந்துபோனேன், தாளலயத்தோடு ஒப்பாரி இசைக்கும் கிராமப் பெண்களின் குரலுக்கு மேலாக 'அம்மா அம்மா' எனத் தலேயிலடித்துக் கதறும் பிள்ளேகளினது ஓலம் என்னேச் சித்திரவதை செய்தது.

ஒரு பாட்டம் அழுது ஓய்ந்து முடங்கிக் கிடந்த சரோஜாவின் தந்தை என் தலேக் கறுப்பைக் கண் டதும் மீண்டும் தலேயிலடித்துக் கொண்டு கதறி ஞர், சற்றுத் தணிந்ததும்

ஆக்கிப் படைப்பேளு — நான்
அருகிருந்து ஊட்டுவளு?
தூக்கித் துடைப்பேளு — குஞ்சைவிட்டுத்
தூரந் தொலே போவேளு?

என்று இராகத்தோடு ஒப்பாரி பாடத் தொடங் கிஞர், நான் சிலேயாக நின்ருலும் என் கண்கள் கண்ணீரை வழிந்தோட விட்டன.

விடிந்தது!

பதிற் பாடசாலேயை இன்னெருநாளேக்கு வைத் துத் தொலேக்கலாம் என்று எண்ணிக் கொண்டு நான் அன்று பாடசாலேக்கே போகவில்லே.

மனம் ஒடிந்து கடைசிக் குழந்தையைக் கையிற் பிடித்தவண்ணம் மூலேயிலே முடங்கிக் கிடந்தார் சரோஜாவின் தந்தை. ஆயினும் ஈமக்கிரியைகளுக் கான வேலேகள் மளமளவென்று நடைபெற்றுக் கொண்டேயிருந்தன, பாடை கட்டுபவர்கட்கும், வேறு சில்லறை வேலேகளேச் செய்து கொண்டிருப்ப வர்கட்கும் 'பெரிய மனுஷி'யாக இருந்து, கேட்ப வைகளே வீட்டினுள் இருந்து எடுத்துக் கொடுத் துப் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள் சரோஜா.

* * *

ஈமச் சடங்குகள் நடைபெற்று முடிந்து விட் டன. அதன் பின்னல் எத்தனே எத்தனேயோ சடங்கு கள் கிரியைகள் ... எல்லாமே இயந்திரகதியில் நடைபெற்று முடிந்து விட்டன. முப்பத்தொன்று கூட முடிந்து விட்டது. வீட்டினுள் நிறைந்திருந்த இனத்தவர்கள் எம்லாருமே வீட்டை விட்டுப் போய் விட்டார்கள்.

ஆயினும் சரோஜா இன்னமும் பாடசாலேக் குப் போகவில்லே, 'இன்னும் சில நாட்களில் பாட சாலே இரண்டாந்தவணேக்காக மூடப்பட்டு விடும். ஆவணி விடுதலே கழித்து மூன்ருந்தவணே தொடங் கியதும் அவளேப் பாடசாலேக்கு அனுப்பலாம் என்று எண்ணிக் கொண்டே நான் என் வேலேகளேக் கவ னிக்கத் தொடங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அதற்குள் எனக்கு அவ்வூரைவிட்டு மாற்றம் வந்து விட்டது. பதிற் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த நான், பதவி உயர்த்தப்பட்டு தொலைதூரத்துக்கு மாற்றப் பட்டேன்.

* * *

மூன்றுந்தவணைத் தொடக்கத்திற் புதிய பாடசாலையிற் பதவியைக் கையேற்ற நான் என் வேலைகளில் மூழ்கி விட்டாலும் சரோஜாவை மறக்கவில்லை, எதிர்காலத்தில் அவள் எப்படி எப்படி யெல்லாமோ விகசிப்பாள் என்று என் மனம் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தது.

தொலைவில் இருந்து கொண்டு சரோஜாவை மீண்டும் பாடசாலைக்கு அனுப்பவேண்டியதன் அவசியம் பற்றி சரோஜாவின் தந்தைக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டேயிருந்தேன. ஆனால் எந்தக் கடிதத்துக்கும் எனக்குப் பதில் வரவேயில்லை. எதிர்காலத்திலே இந்நாட்டிலே பெரிய மேதையாகப் பிரகாசிக்க வேண்டிய ஒருத்தியை இழந்து விட்ட சோகம் என்னைப்பற்றிக் கொண்டது. 'காட்டிலே கணக்கற்ற மலர்கள் மலர்கின்றன. அவைகளின் மணத்தை நுகர்வாரின்றி அவை மாய்ந்து மடிகின்றன' என்ற கவிவாக்கு சரோஜாவைப் பொறுத்தவரை உண்மையாகி விட்டது என்ற நினைவு என் மனத்தை அரித்துக் கொண்டேயிருந்தது. வெள்ளைச் சட்டையும் நீலக் கழுத்துப்பட்டையுமாக சரோஜா பாடசாலைக்குச் செல்வது என் மனக் கண்முன் எப்போதுமே நிழலாடிக் கொண்டிருந்தது. அவ்வுருவத்தை என் நினைவிலே வளர்த்து பெரியவளாக்கி, ஒரு சரோஜினி நாயுடுவாக உருவாக்கிக் கொண்டேயிருந்தேன். அடுத்த விடுதலையில், மீண்டும் அவ்வூருக்குச் சென்று சரோஜாவைப் பாடசாலையிற் சேர்ப்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன்.

* * *

மார்கழி விடுதலையில் மீண்டும் நான் சரோஜாவின் ஊருக்கு வந்தேன், இரவு முழுக்கப் பெய்த பெருமழையிற் தலைமுழுகியிருந்த தகரைப்பற்றைகள் காலை இளவெயிலிற் குளிர் காய்ந்து கொண்டிருந்தன. அச்செடிகளின் மஞ்சள் நிற மலரிலே நாவற்பழ நிறமான வண்டுகள் ரீங்கரித்து மொய்த்துக் கொண்டிருந்தன. தகரைப் பற்றைகளின் கீழே தரைமட்டத்தில் வெள்ளை வெளேரெனப் பூத்திருந்த தும்பைப் பூக்களில் வண்ணாத்திப் பூச்சிகள் மொய்த்துத் தம் பகட்டான சிறகுகளைக் காலை வெயிலில் உலர்த்திக் கொண்டிருந்தன. மஞ்சளும் வெள்ளையுமாகப் பூத்துக்கிடந்த அச்செடிகளிடையே பின்னிப்படர்ந்த கார்த்திகைக் கொடிகள் தீக்கொழுந்தன்ன தம் செந்நிற மலர்களோடு பகட்டிக் கொண்டிருந்தன. இரவு முழுவதும் பிரயாண அலுப்பினாற் கனத்துக் கிடந்த என் கண்களுக்கு அவை இரம்மியமாகக் காட்சியளித்தன. நான் என் கைப்பையோடு மாவலித்திட்டில் அமைந்திருந்த அக்கிராமத்தின் ஒற்றையடிப்பாதையில் நடந்து கொண்டிருந்தேன். தகரைப்பற்றைகட்கும் மேலால் மாவலித் தேவி காட்டிற் பெய்த மழையைத் தன்னோடு சேர்த்துக் கொண்டு நுங்கும் நுரையுமாய்க் கரை ததும்ப ஓடிக்கொண்டிருந்தாள்.

ஒற்றையடிப்பாதையைத் தாண்டி கிராமத்து மாட்டு வண்டிகள் செல்லும் மணல் ஒழுங்கைக்கு வந்து விட்டேன். இரு கரையிலும் நிரைத்து நின்ற ஆமணக்கு வேலிகட்குப் பின்னால், ஆற்றிடை மேட்டு வெண்மணலிற் பசுமையாய்ப் படர்ந்து நின்ற நிலக்கடலைப் பயிர்களிலே தேங்கி நின்ற மழை முத்துக்களில், காலைச் சூரியனின் இளங்கதிர்கள் வர்ணஜாலம் புரிந்து கொண்டிருந்தன. வேலியிலே உயர்ந்து நின்ற முருக்க மரங்களில் தோரணங் கட்டியது போல நீளமான *சுரைக்காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. இதோ சரோஜாவின் வீடு வந்து விட்டது.

''வாருங்கள் ஐயா!'' சரோஜா என்னை வரவேற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சட்டையும், நீலநிறக் கழுத்துப் பட்டையும், வெள்ளைச் சப்பாத்துமாக நான் கற்பனை கண்டு கொண்டிருந்த அவள், நீல நிறப் பாவாடையும், கார்த்திகைப்பூ என்று தற்போது சொல்லும் செங்காந்தள் நிறத்தில் மேற்சட்டையும் அணிந்தவளாக நின்று என்னை வரவேற்ருள்.

நான் வீட்டுக்குட் சென்றேன். மண் சுவரால் ஆன இரண்டறை வீடும் முன் மண்டபமும், தளங்கூட மண்ணுற்தான் மெழுகப்பட்டிருந்தது. ஏற்கனவே எனக்குப் பரிச்சயமான வீடுதான். ஆனுல் இப்போது எத்தனை பரிசுத்தமாக இருக்கிறது? சுவர்கள் சாணத்தால் மெழுகப்பெற்றிருந்தன. மாவலிகங்கைக் கரையிற் கிடைக்கும் சில்லுக்காய்களினுல் அவை மினுக்கப்பெற்றிருந்தன. மண்டபத்துள்ளிருந்த மேசையில் சில புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வலது மூலையில் நான்கு நெல்மூடைகள் ஒன்றன் மேல் ஒன்ருக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

என்முன்னுல் வீட்டுக்குட் சென்ற சரோஜா, அறைக்குள்ளிருந்து மட்டக்களப்புக் கற்பன்பாயை எடுத்து மண்டபத்துள் விரித்து என்னை அமரும்படி செய்துவிட்டு மீண்டும் அடுக்களைப்பக்கம் சென்ருள்.

பாயில் அமர்ந்து கொண்ட நான் வீட்டை நோட்டம் விட்டேன். வீட்டினுள்ளே பூசி மினுக்கி அடுக்கிவைக்கப்பட்டிருந்த பழங்காலத்து வெண்கலப்பாத்திரங்களில் என் முகம் பிரதிபலித்தது.

சில நிமிடங்களிற் சரோஜா பாற்குவளையும் கையுமாக என்னிடம் வந்தாள்.

பாலைப் பருகியபடியே ''வீட்டிலே எவரையும் காணுமே'' என்றேன் நான்.

''அப்பாவும் அண்ணன் மாரும் வயலுக்குப் பசளை எறியப் போய் விட்டார்கள் ஐயா, நீங்கள் இப்போதுதான் வருகிறீர்களா? என்ருள் சரோஜா.

''ஆமாம், நேற்றுத்தான் ரெயில் ஏறி இப்போதுதான் வருகிறேன். பாலைக்குடித்து விட்டு வயலுக்குப் போய் அப்பாவைப் பார்க்கலாம் என்றிருக்கிறேன்'' என்றேன் நான், ''வேண்டாம் ஐயா, நான் அப்பாவைக் கூட்டிவரும்படி தம்பியை அனுப்பியிருக்கிறேன். இன்னுங் கொஞ்ச நேரத்தில் அப்பா வந்து விடுவார். நீங்கள் பாலைக் குடித்து விட்டுச் சற்று இளைப்பாறுங்கள்'' என்று பெரிய மனுஷி போலப் பேசினுள் சரோஜா.

பிரயாண அலுப்பினுல் நானும் அவள் சொல்வதை ஆமோதித்தபடியே தலையணையிற் சாய்ந்தேன்.

* * *

கூப்பிடு தூரத்திலிருந்த வயலிலிருந்து சற்று நேரத்திற்கெல்லாம் சரோஜாவின் தந்தையார் வந்தேவிட்டார். படலையைத் தாண்டி என்னைக் கண்டதுமே,

''சரோஜா! ஐயாவுக்குத் தண்ணி வென்னி கொடுத்தியா?'' எனக் கேட்டுக்கொண்டே,

''வயல் எல்லாம் குடலைப் பருவம், இன்றைக்குத்தான் 'யூறியா'ப் பசளை எறிந்தோம். நீங்கள் வந்திருப்பதாகச் சரோஜா சொல்லி அனுப்பினுள். உடனே வந்துவிட்டேன்'' என மன்னிப்புக் கோருந் தோரணையில் அவர் என்னிடம் பேசினுர்.

தொடர்ந்து நாங்கள் இருவரும் நீண்டநேரம் பேசிக்கொண்டே இருந்தோம். மாண்டுபோன தன் மனைவியைப்பற்றி நாத்தழுதழுக்கப் பேசிய அவர் சற்றுச் சுதாரித்துக் கொண்டு

> ''சரோஜா — என்மகள் இல்லாவிட்டால் நானும் என் பிள்ளைகளும் நேரக் கஞ்சியே குடிக்க மாட்டோம். நானும் மூத்த ஆண் பிள்ளைகள் மூவரும் விடிந்து எழுந்தால் வயல், தோட்டம், எனக் கிளம்பி விடுகிறேம். இங்கே வீட்டை அவள்தான் பார்த்துக் கொள்கிறுள். எங்களுக்கும் நேரத்துக்குச் சாப்பாடும் படைக்கிறுள். சரோஜா மட்டும் இல்லாவிட்டால் ஈச்சங் கொத்தைத் தரையில் அடித்ததுபோல என் குடும்பமே சிறறிப்போயிருக்கும் ... ... ...''

எனப் பேசிக்கொண்டேயிருந்தார் அத்தந்தை,


**நீங்கள்**

செய்திப் பத்திரிகை படிக்கிறவர்களா?

அப்படியானுல்

உங்களுக்கு மாதம் ஒன்றுக்கு சராசரி ரூ. 5/- செலவாகும்!

செய்திகளைப்பற்றி அறிந்துகொள்வதற்கு மாதம் 5/- ரூபா செலவிடும் நீங்கள் ஈழத்து இலக்கியத்தைப்பற்றி அறிந்துகொள்வதற்கு மாதம் 50 சதம் செலவிடமுடியாதா?

நிச்சயமாக முடியும்!

இன்றே ''மலர்'' சந்தாதாரர்களாகச் சேருங்கள்.

ஆண்டுச்சந்தா ரூ. 6/- மட்டுமே.

விபரங்களுக்கு:-

''மலர்''

இல. 21, மத்திய வீதி,

மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பேச்சை அவதானித்த எனக்கு சரோஜாவைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய அவசியத்தைப் பற்றிய பேச்சை எடுக்கமுடியாமலே இருந்தது.

இதற்குள் மதியமாகிவிடவே, சரோஜா எங்கள் இருவரையும் சாப்பிட அமரும்படி கேட்டுக் கொண்டாள். பூசி மினுக்கிய வெண்கலச் செம்பிலே தண்ணீர் வந்தது. குமரிவாழையின் குருத்தும் விரித்தாயிற்று.

கையைக் கழுவிக்கொண்டு இலைகளின் முன்னல் நாங்கள் அமர்ந்ததும், சரோஜாவின் சின்னஞ் சிறு கைகள் எங்கட்கு அன்னம் படைக்கத் தொடங்கின, விதம்விதமான கறிகளோடு பெரு விருந்தே ஏற்பாடகியிருந்தது. இத்தனையும் அந்தச் சிறுமியின் கைவரிசைதாஞ என எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

கோளிப்பாகற் கொடுங்கனித்திரள் காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின்கனியொடு வாழைத்தீங்கனி
சாலியரிசி தம்பாற் பயன்'

எல்லாமேயுளதாய், தன் மென்விரல் சிவப்ப ஆயர்பாடியிலே கோவலனுக்கு அமுது படைத்த கண்ணகியின் திறமையைக் கூறும் சிலப்பதிகார அடிகள் தான் என் ஞாபகத்திற்கு வந்தன. நான் இரசித்துச் சாப்பிட்டேன்.

சாப்பிட்டானதும் ''பட்டினத்துக் கல்விக் கந்தோரிலே என் உத்தியோகம் சம்பந்தமான சில குறிப்புக்களைச் சேகரிக்க வந்தேன். இத்தனை தூரம் வந்த நான் உங்களையும் பார்த்துக் கொண்டுபோக இங்கேயும் வந்தேன்.'' என்று நெஞ்சறியப் பொய் சொல்லி விட்டு நான் விடைபெற்ற போது, சரோஜா எனக்கு ஒரு பசுநெய்ப் போத்தலை அன்பளிப்பாகக் கட்டிக் கொடுத்தாள்.

அதையும் வாங்கிக் கொண்டு வரும் வழியில், என்மனம் எனக்குச் சொல்லிக் கொண்டது.

'ஒரு பெண் எதைப்படிக்கவேண்டுமோ அதையெல்லாம் சரோஜா படித்துக் கொண்டாள். பட்டினத்துப்படிப்பால் அவள் பட்டம் பெறலாம். ஆனல் அப் படிப்பால் ஓர் குடும்பமே சீர் குலைந்துவிடும். நாவுக்கு உருசியாக அவள் தந்தையும் தமையன்மாரும் சாப்பிடமுடியாது. படித்துப் பட்டம் பெற்றலும் அது அக்குடும்பத்துக்கு மேலும் மேலும் தொல்லையையே கொடுத்துக் கொண்டிருக்கும். ஆமாம் காட்டிலே மலரும் எந்தப்பூவும் தம் மணத்தை வீணுகச் சிந்துவதே இல்லை; வண்டுகளைக் கவரவும் அதன் மூலம் தம் வம்சத்தை விருத்தி பண்ணவும் அவை இயல்பாகவே வலிமையுள்ளதாக இருக்கின்றன. முட்டாள் கவிஞர்கட்கு இது தெரிவதில்லை. அதுவரை சரோஜா என்ற மொக்கும் தன் தந்தையின் பூஜைக்குச் சார்த்தப்படும் ஆரத்திற்குப் பயன்படட்டும்.



# ஈழமதில் எழுந்த மலரே!

அருந்துசுவை தேனினை அளியினம் பருகியே
அழிவிழந் தாங் கலையுமே!
பொருந்திமிளிர் புத்தகப் புதுமலர் தேனினை
புசித்திடிற் புத்தி எழுமே!

சருகாகு மலர்மீது தவழ்கின்ற இன்பமோ
தழையாது நெடிது நாளே!
கருவாகு காகிதக் கவினுன மலரேடு
காட்டிடும் நீ டின்பமே!

மடிவுற்ற போதிலே மணமதும் போய்விடும்
மலரினல் மகிழ்ச்சி சிறிதே!
வடிவுற்ற ஓவியம் வண்மைசேர் கதை கவிதை
மலரேடு மகிழ்ச்சி நெடிதே!

ஆண்களொடு பெண்களும் அகஅழ கு பேணியே
அணிவதற் கேற்ற மலரே!
ஈண்டுமெய் கூறிடும் இலக்கியப் பேரேடு
ஈழமதில் எழுந்த மலரே!

அரியாலையூர்,
வே. ஐயாத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகங்கள் பாரமா?

(சென்ற இதழ் தொடர்ச்சி)



அருள். சுப்பிரமணியம்.

"அம்மா, அம்மா... பிள்ளையளுக்கு கோப்பி குடுத்தனியே, ஒண்டும் இன்னும் நித்திரைப் பாயால எழும்பேல்லைப் போல"

''அதையேன் கேட்கிருய், அதுகளும் தாயைப் போல கோப்பி, தேத்தண்ணி ஒண்டும் வாயில கூட வைக்கிறேல்லை'' அம்மா பதிலளித்தாள்.

பிள்ளைகளின் பள்ளியறைக்கு ஆவலோடு நடையைக் கட்டுகிறேன். தாய் தந்தையரின் அரவணைப்பிலே சயனிக்க வேண்டிய என் குலக் குழந்தைகள் தலையணை பாய் இவைகளை விட்டு விட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக படுத்திருந்தன. மூத்தவளின் வயிற்றைத் தன் பிஞ்சுக் கால்களால் உதைத்துக் கொண்டு படுத்திருக்கிருள் ஐந்தாவது. கடைக்குட்டி ராதை வாய்க்குள் பெருவிரலை வைத்துச் சூப்பிக் கொண்டு சின்னச் சின்ன மூச்சுகள் விட்டுக்கொண்டே படுத்திருக்கிருள்.

கவலையை மறந்த நிலையில் சிரித்துக் கொள்கிறேன் நான். ''என்ர ராசா'', என் குழந்தையின் பிஞ்சுக் கன்னத்திலே கொஞ்சிக் கொள்கிறேன்.

ஆக, இதுகளுக்காக வாழ்கின்ற வாழ்க்கை எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் அதிஷ்டக்காரன் தான். என்னையே நான் தேற்றிக்கொள்கிறேன்.

அன்று முழுவதும் எனக்கு ஓய்வில்லை. ஓய்வு எடுக்கவும் விருப்பமில்லை. லீவு எடுத்து வந்திருந்த அந்த ஆறு நாட்களுக்குள் எல்லாம் செய்து விட வேண்டுமென்ற ஆசை என்னுள்ளே விரவிக் கிடந்தது. ஏதாவது வேலையில் ஈடுபட்டிருக்கும் போது கூட பிள்ளைகள் மாமா, மாமாவென்று என்னோடு ஒட்டிக் கொண்டன.

தகுந்த பாதுகாப்பில்லாவிட்டால் பின்னுக்கு இதுகளுக்கும் அக்காவின் நிலை தானே......

இரவு ஒன்றரை மணியிருக்கும். நித்திரை...... நித்திரை, அது ஏன் வரவில்லை. எனக்கே தெரியவில்லை. படலையில் முட்டுக்கு வைத்திருந்த உரலை யாரோ தள்ளி உருட்டிவிட்ட அரவம் பலமாகக் கேட்டது. அத்தான்தான் வந்துகொண்டிருந்தார். தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தார்.

அக்காவின் அறைக்குள்ளே தட்டுத் தடுமாறிச் சென்று வேட்டியைக் களைந்து வைத்துவிட்டுச் சாரனை மாற்றிக்கொண்டார்.

நித்திரை செய்பவனைப்போல் இருந்துகொண்டு எல்லாவற்றையும் வெகு உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன் நான்.

அறைக் கதவு சாத்தப்பட்டது. எந்தவிதமான சப்தமுமில்லை. நான் இருக்கிறேன் என்பதனுல் ஏற்பட்ட பயம்போலும்......என்னிலேயே எனக்கு அன்பு பிறந்தது.

உருண்டு உருண்டு வந்து எனது காலடியில் முடங்கிக் கொண்டிருந்தாள் கடைக் குட்டி ராதா. அக் குழந்தையின் முகத்தில், கன்னத்தில் இப்போதுதான் கறந்தெடுத்த பசும்பால் வடிந்துகொண்டிருந்தது. இரண்டுகைளாலும் என் உயிரை அள்ளி எடுத்து, கன்னத்தில் வழிந்துகொண்டிருந்து பாற்சொட்டுகளை ஆசையுடன் பருகிக்கொண்டேன்.

ஏதோ அரவம் கேட்கிறதே ஆ......அக்காவின் அறைக்குள்தான் கேட்கிறது, காதுகளைத் தீட்டிக் கொண்டு ஜாக்கிரதையானேன்.

''டியேய் என்னத்துக்கடி உன்ர தம்பியை வரச் சொல்லிஎழுதினனி?இவர்பெரிய ஆளோடி எனக்கு? இப்ப நினைச்சாலும் எழும்பி மிரிச்சுப்போடுவன். எல்லாரும் சேர்ந்து என்னைப் பயமுறுத்தப் பாக்கிறியள் என்ன? அடியேய், நான் உங்களை எல்லாரையும் வெண்ட கள்ளனடி......வேசை, இண்டைக்கு என்ன செய்யிறன் பார்......"

கணவன் மனைவி தாம்பத்ய உறவை ஓரளவிற்குப் புத்தகங்களில் படித்திருக்கிறேன். அவர்களுக்குள் எதுவென்றாலும் இருக்கும்; வேற்று ஒருவர் அதில் தலையிடுதல் முறையல்ல என்பதை அறிந்திருக்கிறேன். ஆனல் என்னோடு கூடப்பிறந்த பிறப்பல்லவா அங்கு அடிவாங்கிக்கொண்டிருக்கிறது. பாயை விட்டெழும்பி, எழுந்த வேகத்திலேயே ஓடிப்போய் கதவை காலால் எட்டி உதைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு கண்ட காட்சி......என் கால் கைகளில் ஓடிக்கொண்டிருந்த இரத்தம் நெஞ்சிற்கும் மூளைக்கும் எகிறிப்பாய்ந்து விறைத்தது.

''டேய் அக்காட கழுத்தையாடா நெரிக்கிருய், இர்ரா டேய், இண்டைக்குத்தான்டா உனக்குக் கடைசி.'' பக்கத்திலிருந்த தும்புக்கட்டையால் அடி அடி என்று ஆத்திரந் தீருமட்டும் அடித்தேன். காலுக்கு ஒரு உதைகொடுத்து ஆளை நிலத்தில் விழ்த்தினேன். ஆத்திரம் தீரவில்லை.

''டேய், இத்தக் கையாடா கழுத்தை நெறிச்சது?... மடையா, என்னடா நினைச்சுக்கொண்டாய்? ராஸ்கல்.'' ஆத்திரத்தில் என்ன செய்தேன் என்ன பேசினேன் என்பதே தெரியவில்லை. இரண்டு கால்களும் நிலத்தில் நிற்க முடியவில்லை. பதறியது.

''வேணுந்தம்பி, வேணும், அவனுக்கு ஒன்டெண்டாலும் எங்களுக்குத்தான் துக்கம். நாளைக்கு உனக்கொண்டு ஆயிற்றெண்டால் உன்னையே நம்பியிருக்கிற இதுகளை யாரடா பாக்கிறது?'' அம்மா அடித்தொண்டையில் கத்திஞள்.

ஆமாம், அவனுக்கென்ன குடிகாரன், மானம் மரியாதையைப் பற்றிக் கவலைப்படாதவன். நானும் அப்படி மரியாதைக்குப் பயப்படாமல் இருக்க முடியுமா? என் நடத்தையில் காணப்படும் தூய்மையில்தானே தங்கியிருக்கிறது, என் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கை.

அத்தானின் தலைக்கு தலையணையொன்று வைத்துப் படுக்கவைத்தாள் அக்கா. பேசக்கூடாத தமிழை, அன்னை மொழியை வாய்க்கு வந்தவண்ணம் பேசி அரற்றியவாறே கால்கைகளை அங்குமிங்கும் சாடிக்கொண்டிருந்தார் அத்தான், நல்ல நிறை தண்ணி.

அக்காளுடைய முகத்தைப் பார்க்கவே பயந்தேன். எங்கே-சினிமாப் படங்களில் வருகின்ற கதாநாயகிகள் மாதிரி, தனது கணவன் அடிபட்டதும் அடித்தவரை நோக்கிப் பேசுவதுபோல—அக்காவும் என்னேடு வசனம் பேசிவிடுவாளோ என்று பயந்தேன். வாய்மூடி மௌனியாகி அழுதுகொண்டே என்னைப் பார்த்தாள் அக்கா. எதை நினைத்து என்னைப் பார்த்தாளோ தெரியவில்லை. தொண்டையை சரி செய்துகொண்டே நானும் அக்காவைப் பார்க்கிறேன்.

''அக்கா இனி இது சரிவராது, இன்னம் நீ இந்த வீட்டில் இருந்தால் — அடுத்த முறை உனக்குக் கொள்ளி வைக்கத்தான் கொழும்பில இருந்து நான் வரோணும், நாளைக்கே வேற வீடு பார்த்துக் கொண்டு போயிடுவம், அவர் தனிய இருந்து ஆளட்டும்.''

அக்காவின் அறைக்குள்ளே மௌனம் குடிகொண்டது. நான் எனது பாய்க்குச் சென்று என்னை விழுத்திக்கொண்டேன். எனது அறையிலும் மௌனம் ஆட்சிபுரியத் தொடங்கியது.

காலை நேரம். சுவர்க் கடிகாரம் ஏழு தடவை அடித்து ஓய்ந்தது. வீட்டிலே மயான அமைதி என்றுமில்லாதவாறு குடிகொண்டிருந்தது.

பக்கத்துவீட்டுப் பொன்னம்மாக்கிழவி வந்தா, குசலம் விசாரிக்க. ஆறுதல் கூறத்தான் வந்தாள், ஆனாலும் கிழவியின் இயல்பு எங்கே போகும் ஆத்திரத்தை ஏற்படுத்திவிட்டு தன் வழியோடு போய்விட்டது, அந்தக் கிழம்.

அத்தான் இன்னும் நிலத்திலிருந்து எழுந்திருக்கவில்லை. அவரின் பக்கத்திலே காப்பிக் கோப்பை தொடுவாரற்று ஆறிப்போய்க் கிடக்கிறது.

திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டவன், கிணற்றடிக்குச் சென்று அவசரக் கழுவல் ஒன்று கழுவி உடம்பைச் சுத்தப்படுத்திக் கொண்டு, ஸ்டாண்டிலே மாட்டியிருந்த ட்ரௌசருக்குள் புகுந்துகொண்டேன். வெளியே போய்விட்டு உடனே வருவதாகக் கூறிவிட்டுக் கிளம்பினேன்.

எனது சைக்கிள் பெரிய கடையை நோக்கிப் போயிற்று. வழிநெடுக, சில வீடுகள் மாற்றங்களினுல் ஏற்பட்ட புது மெருகுடன் கண்களுக்கு இதமாக இருந்தனபோல் தோன்றிற்று. அதோ அந்தக் கோடியிலே தென்படுகிற நண்பன் சிவராசாவின் வீடும் மாறிப்போய்விட்டதே, வீட்டோடு சேர்த்து தன் நல்ல குணத்தையும் மாற்றிக்கொண்டிருப்பானே?

என்னைக் கண்டதும் ஓடி வந்து வரவேற்ருன். அவன் அப்படி நடந்து கொண்டது, என்வரையில் எனக்கு அவன் செய்த பெரிய உதவிபோலத் தோன்றியது.

என் நண்பர்களிலே உண்மையானவன் அவன்.

"எப்ப மச்சான் வந்தனி? கடிதம் ஒண்டும் போடாமத் திடீரென்று வந்திருக்கிருய். என்ன விசயம்?" சாய்மனக் கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டே கேட்டான்.

"என்னத்தடாப்பா கடிதம் போடுறது. உனக்குத் தெரியும் எண்டு நினைக்கிறன், அதுதான் எங்கட அக்காட விசயம். அதாலதான் வந்தனுன். இப்பவும் உன்னிட்டை அந்த விசயமாத்தான் ஒரு உதவி கேட்டு வந்திருக்கிறன். எனக்கு உதவி கேட்கிறதுக்கு உன்னைத் தவிர வேருெருவரும் இல்லை மச்சான். செய்வியா?" கண்களை கண்ணீர்த்திரை மறைக்கவே, தலையைக் குனிந்துகொள்கிறேன்.

"டேய், என்னடாது, சின்னப்பிள்ளையள் மாதிரி அழுகிருய்? இந்தா கொஞ்சம் ஆறுதலாய் இருந்து என்னெண்டு சொல்லு, எதண்டாலும் நான் செய்து தாறன் யோசிக்காதை."

உறுதிமொழிகளையளித்துக்கொண்டே உள்ளுக்குள் போகிருன். திரும்ப வரும்போது இரண்டு கிளாசில் எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து கொண்டு வருகிருன். "இந்தா மிச்சம் சூடாயிருக்கிருய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் குடி, தணியும்.'' சாய்மனக் கதிரையில் விரித்திருந்த சால்வையால் கண்களைத் துடைத்துக் கொண்டே தொண்டையைக் கனைத்துக் கரகரப்பைக் குறைத்துக் கொள்கிறேன்.

"வடிவாக்கேள், இனி அக்கா அவனோடை வாழேலாது. நல்லா யோசிச்சுப் போட்டுத்தான் பேசிறன். அதால நீ குறுக்க பேசாதை". உச்சஸ்தாயியில் என் குரல் உயர்ந்து கொண்டு போகிறது.

"சாகிறதுக்கு ரெடியெண்டால் அவ அவனோடை அந்த வீட்டில இருக்கலாம்.'' சுருங்கச் சொல்லி விளக்கினேன் விசயத்தை.

"எனக்கு இப்ப அவசரமா; ஏன் இண்டைக்கெண்டாலும், ஒரு வீடு வேணும். நான் இந்த நேரத்தில எங்க போறது கையில காசுமில்ல", தொடர்ந்தேன் நான்.

"உங்கட அப்பாட்டைச் சொல்லி அந்தப் பின் வளவுக்குள்ள இருக்கிற உங்க தகர வீட்டை வாடகைக்குத் தருவியா?'' ஒருவாறு வந்த விசயத்தை முடித்துக் கொண்டேன்.

"அப்பா ஆருக்கோ போன கிழமை அந்த வீட்டை ஓம் எண்டு சொன்னவர், நல்ல காலம் இன்னம் குடுக்கேல்லை. நான் அப்பாட்டை எல்லாம் சொல்லிக்கொள்ளுறன். நீ வாடகையொண்டுந் தர வேண்டாம்; எப்பவாறாய் ... ... ?'' என்பதிலை எதிர்பார்த்து வாயைப் பார்த்துக் கொண்டு நின்றான் அவன்.

''மச்சான் இதுக்கு நான் என்ன செய்யப் போறன். இப்ப என்னால கொஞ்சம் சந்தோஷமா அழத்தான் முடியும். அதுதான் நான் உனக்குச் செய்யக்கூடிய கைமாறு''.

குரல் கம்மியது எனக்கு. என் கண்களிலே விழுவதற்குத் தயாராக இருந்த இரண்டு கண்ணீர்ப் பொட்டைக் கைகளால் மறைத்துச் சிரித்துக் கொண்டே துடைத்து விட்டுக்கொண்டான் சிவராசா.

"ங்... ... மறந்து போயிட்டன். இதுதான் முக்கியம், இன்னம் நாலு நாளோடை எனக்கு லீவு முடியுது. நீ பக்கத்தில இருக்கிறாய் எண்ட நம்பிக்கையிலதான் போறன்; நான் போனப் பிறகு அவன் ஏதும் கரச்சலுக்குவருவான், நீ தான் எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளோணும்''

எனக்குத்தெரியும் இது ஒரு பாரதூரமான கேள்வியென்று. என்ன செய்வது? வேறுவழி?

"எப்பிடிடா? அந்தாள் தன்ரை பெண்சாதி பிள்ளைகளைப் பார்க்க வந்தா நான் எப்பத்தி தடுக்கிறது?''

நியாயமான ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டானே, சமாளித்துக் கொண்டேன் நான்.

"அப்படியெண்டா அவ அங்க இருக்கிறதும் ஒண்டுதான் இங்க இருக்கிறதும் ஒண்டுதான். இங்க அக்காவைக் கொண்டந்து விடப்போறதே அவன்ர கரச்சல் இருக்கக் கூடாதெண்டுதானே. எப்படியென்டாலும் ஆரிடை கால்ல விழுந்தாவது இரண்டு மூன்று மாசத்திலை மாறி இங்க வந்திடுவன். அதுமட்டும் நீதாண்டா, உன்னைத்தான் நம்பியிருக்கிறன்''. அழவில்லை நான் அது ஒன்றுதான் குறை.

"சரி கனக்க யோசிக்காதை, எல்லா நாளும் கடவுள் இப்பிடியே விட்டிட மாட்டார். நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை எதெண்டாலும் நான்பார்த்துக்கொள்ளுறன். சந்தோசமாப் போயிற்றுவா''.

நண்பனுடைய நம்பிக்கை தரும் தோற்றம் மாடிப்படிகளாயின, அப்படிகளினூடே நடந்து வந்து அவன் கூறிய வார்த்தைகள் என் இதயத்தைத் தொட்டன.

இவனுக்கு நான் என்ன செய்துவிட்டேன்? இப்படியொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டானே. நண்பனை மனங்குளிர வாழ்த்திவிட்டு நம்பிக்கை துளிர்விட வீட்டுக்குத் திரும்பினேன்.

தகரத்தால் வேயப்பட்ட சிறிய வீடு அது. ஆனால் அங்கு நிம்மதி நிலவியது.

"நான் அவனைக் கொல்லாம விடுறேல்லை. அவங்க எல்லாருக்கும் கொள்ளிவைக்கிறது நான் நான்''. இவையெல்லாம் எனது அன்புக்குரிய அத்தான் அந்த நான்கு நாட்களாக குடிபோதையில் மற்றவரிடம் பிதற்றித் திரிந்த மணிமொழிகள்.

எதெது செய்யவேண்டுமோ, அவைகளைச் செய்தேன். துணைக்குச் சிவராசா பக்கத்திலேயே இருந்தான் கடவுள்மாதிரி. என்னைப் பொறுத்த மட்டில் அவன் கடவுள்தான்.

கொழும்புக்கு வெளிக்கிடும் அன்று இரவு அக்கா எனக்கு கட்டித்தருவதற்காகப் புட்டு அவித்துக்கொண்டிருந்தாள். அம்மா உடுப்புப் பெட்டியை சரிபண்ணிக்கொண்டிருந்தாள்.

''வாறண்டெல்லாம் கவனமா எடுத்து வைச்சிருக்கிறியே?'' அம்மா கேட்டாள். ஓமென்று தலையை அசைத்துவிட்டு ஒரு குட்டி லெச்சருக்கு என்னை ஆயத்தப்படுத்திக்கொண்டேன்.

''அம்மா, இனி இந்தப்பிள்ளையளைப் பொறுத்த வரையில் நல்ல பழக்கம், படிப்பு, குணம், நடை இவைகளைச் சொல்லிக் குடுக்கிறதுக்கு தகப்பனில்லை. நான் மாறி இங்க வருமட்டும் குழந்தையளை நல்லாப் பாருங்கோ. பொம்பிளைப் பிள்ளையள் நல்ல பழக்கம் பழகவேணும். ஒழுங்காப் பள்ளிக்குப் போகோணும் குணம், நடை எல்லாம் பழகவேணும். வெளியில் கண்டமாதிரி விடப்படாது. இந்தப் பிள்ளையளை வளர்த்து, பெரியாளாக்கி, படிப்பித்து நல்ல நிலையில் வைக்கவேண்டியது என்ர பொறுப்பு. அதால ஒருவரும் க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப்படத் தேவையில்லை. அம்மா, நீ மட்டும் நல்லாச் சாப்பிட்டு இந்த உடம்பைக் கொஞ்சம் கவனிச்சுக்கொள்ளம்மா. அக்காவை யோசிக்க வேணுமெண்டு சொல்லு, என்ன?"… …

''ம்,……..மற்றது மாசாமாசம் சிவராசாட பேருக்கு 150 ரூபா அனுப்புறன். எல்லா விசயமும் சிவராசாட்டை சொல்லியிருக்கிறன். ஏதுமெண்டால் அவனிட்ட வெட்கப்படாமல் கேளுங்கோ, என்ன……?"

நண்பன் வந்தான். பெட்டியைத் தூக்கிக் கொண்டான். எல்லாரையும் பிரிய மனமில்லாமல் பிரிந்தேன்.

''அம்மா, போயிட்டுவாறன். அக்கா போயிட்டு வாறன்.''

பெரிய மனிதத் தோரணையில் ஆறுதல் கூறி விட்டு வந்துவிட்டேன். ஆனால் என் மனம் சொல்ல முடியாத அவஸ்தைக் குள்ளாகியிருந்தது.

நண்பனுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தி விட்டு மெயில் ரெயிலில் தொங்கல் சீற்றாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டேன்.

ஏழும் பொம்பிளைப் பிள்ளையள். இவ்வளவு போதும் அக்காவுக்கு. இதுகளை எப்படி முன்னுக்குக் கொண்டுவாறது. அக்காவுக்கு வயது இப்ப இருபத்தேழுதான். இளமையும் குறையவில்லை. இதற்குள்ளே கணவன் இருக்கையிலேயே விதவையாவதா? என்ன கொடுமையப்பா…… என்ன கொடுமை. முருகா,

சரி அத்தானைப் பார்ப்பம்……

கணவன் என்ற புனிதமான பதத்திற்கே களங்கத்தை யுண்டுபண்ணியவனல்லவா அவன். அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுேடு அக்காவை மீண்டும் வாழச்சொன்னுல் மிஞ் சுவது... அடியும், உதையும், இன்னும் இரண்டொரு குழந்தைகளுந்தான். ஐயோ, இரண்டொரு குழந் தைகளா...... இன்னுமா... வேண்டாம். வேண் டவே வேண்டாம். இப்ப இருக்கிற ஏழையும் காப் பாற்றவே நான் இரட்டை மனிதனுக மாறி உழைக்கவேணடியுள்ளதே...... இன்னமும் பெற்று விட்டால்...... அப்பப்பா... வேண்டாம், அக்கா அவனேடு வாழவே வேண்டாம்.

திரும்பத் திரும்ப சிந்தனை வயப்பட்டு உழன் றேன். என் அக்காவிற்காக வாழப்போகின்ற வாழ்க்கையின் புனிதமான நினைவுகள் என் நெஞ்ச கத்தே நீள வியாபித்திருந்தாலும், அவ்வாழ்க்கை யில் ஏற்படப்போகும் நடைமுறைக் கஷ்டங்களின் பயங்கரத் தோற்றங்கள் என்னைப் பயமுறுத்தத் தவறவில்லை.

கனத்த இதயத்துடன் கொழும்புக் கோட்டை ஸ்டேஷனை அடைந்தேன். ஸ்டேஷனில் வழமையான நெரிசலைக் காணமுடியவில்லை. என் மனதைப் போன்று ஸ்டேஷனும் தூங்கிவிட்டதா, டிக்கட் டைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன்.

ம்......அந்தா 123 ம் நம்பர் பஸ் வருகிறது. கையில் பெட்டி கனத்தது. ஆனுல் இதயத் திற்கு ஈடாகக் கனக்க முடியவில்லையே அதனுல். உள்ளமும் உடலும் பாரத்தினுல் நோக பஸ்ஸினுள் ஏறிக்கொண்டேன்.

இனிமேல் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து விடுவேன். படிக்காமல் கவனிக்காமல்விட்ட சிங்க ளத்தை இனிக் கண்ணும் கருத்துமாகப் படித்தாக வேண்டும். இல்லாவிட்டால் சம்பள உயர்வு இல்லை. சம்பள உயர்வு இல்லாவிட்டால் சங்கடந்தான். எட்டு, அல்லது ஒன்பது 'நேவிக்கட்' சிகரட் அல் லவா நாளொன்றுக்குப் புகைத்து வருகிறேன். இனி ஒன்றுமே புகைப்பதில்லை. சினிமாப் படங்களைப் பார்ப்பதை அடியோடு நிறுத்திவிட வேண்டியது தான். என் மனதின் அடிமட்டத்தே யொட்டிக் கொண்டு எப்பொழுதாவது வெளிக்காட்டி நானும் வாழ்ந்துகொண்டிருக்கிறேன் என்று கூறிக்கொண் டிருக்கும் ஒரு நங்கை நல்லாளைப் பற்றிய காதல் உணர்ச்சிகள்......அவைகளையும் பிய்த்து எறிந்துவிட வேண்டியதுதான்.

எனது எதிர்கால நேரசூசியை வழிநெடுகிலும் பஸ்ஸிலிருந்து கொண்டே போட்டுக் கொண்டேன்.

ஒரு உலுக்கல் உலுக்கி நின்றது பஸ். என் மனப் படத்திற்கும் ஒரு இடைவேளை. இடைவேளை நேரத்தில் ''சிகரட்'' புகைக்காவிட்டால் எப்படி? சட்டைப் பைக்குள்ளிருந்த 'கப்ஸ்ரனை' எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டேன்.

குலுக்கலுடன் நின்ற பஸ் அதே குலுக்கலுடன் ஆரம்பமாகி சென்று கொண்டிருந்தது. வீடு வந் தது. இறங்கிக் கொண்டேன். அறையைத் திறந்து படாரென்று கட்டிலில் விழுந்தேன்.

ஆறு நாள் லீவுக்குப் பின்னர் ஆபிசில் 'ட்ரே' நிரம்பி வழிந்தது. ஏதோ ஒரு மோன நிலையி லிருந்துகொண்டு எல்லாவற்றையும் 'கிளியர்' பண்ணினேன். இப்படியே மூன்று மாதம் கடந் தது. இடமாற்றமோ கிடைத்தபாடில்லை. இடை யிடையே சிவராசாவிடமிருந்து வீட்டுச் சங்கதிகள் கடித மூலம் வந்து கொண்டிருந்தன. அவனுடைய எழுத்துகளிலிருந்து அவன் என்னிடமிருந்து எதையோ மறைக்கிறுன் என்றும் அதை எழுது வதால் என்னைத் துன்பத்திலாழ்த்தக் கூடாதே என்ற உணர்ச்சி அவன் எழுத்தில் இருந்தது போல வும் அறிந்து கொண்டேன்.

மொத்தத்தில் வீட்டு நிலை பிழையில்லை. மாதா மாதம் பணம் அனுப்பிக் கொண்டிருந்தேன். என்ன கஷ்டம் வந்தாலும் ஏற்றுக்கொள்வது என்ற மனப் பான்மையை வளர்த்துக் கொண்டேன்.

இந்த மூன்று மாத காலமும் அலுவலக நண் பர்களிடையே உண்மையான சிரிப்புச் சிரிக்க என் னுல் முடியவில்லை. நண்பர்களின் சிரிப்புக் கதை


உங்களுடைய
மாத வருமானம் என்ன ?

ஆசிரியரானுல் (குறைந்தபட்சம்) ரூ. 220-00
இலிகிதரானுல் (குறைந்தபட்சம்) ரூ. 250-00
கூட்டுத்தாபன ஊழியரானுல் (குறைந்தபட்சம்) ரூ. 272-00
வங்கி ஊழியரானுல் (குறைந்தபட்சம் ரூ. 258-00
∴ சராசரி வருமானம் ரூ. 250-00
அப்படியானுல்
அதன் $\frac{1}{500}$ பங்கு = சதம் -/50.
இந்த அற்பத் தொகையை
நீங்கள் ஈழத்து இலக்கியத்திற்காகச்
செலவிட முடியாதா?
நிச்சயமாக முடியும்!
இன்றே ''மலர்'' சந்தாதாரர்களாகச்
சேருங்கள்.
ஆண்டுச்சந்தா ரூ. 6/- மட்டுமே.
"மலர்"
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அனுபவம்

புதிய சஞ்சிகை ஒன்று ஈழத்தில் வெளிவருகிறதென்றால், பெரும் பாலோர் உதிர்க்கும்கருத்து, ''இவங் கட பேப்பரைத் தெரியாதா? இந்தி யாப் பத்திரிகைகளோட போட்டி போட இவங்களால முடியுமா?''— பலர் தெரிவிப்பது, ''வீண் முயற்சி! எத்தனையோபேர் தொடங்கி அறுந்து போனுங்க. இவங்களும் அதே கதை தான்''. சிலர், ''பாராட்டத்தக்க முயற்சி. நம்மவர் முயற்சியை நாமே ஆதரிக்கவேண்டும்''. மிகச்சிலர் சொல்வது, ''உங்கள் பத்திரிகை நன்றாக இருக்கிறது. இதோ எனது ஒருவருடச் சந்தா!''

இந்தப் பின்னணியில், மட்டுநக ரில் இருந்து ''மலர்'' என்ற இலக் கியப் பத்திரிகை வெளிவருகிறது என்ற செய்தியை மட்டும் கொண்டு பத்திரிகையைப் பார்க்காமலே, பத் திரிகை வெளிவருமுன்பே, மன்னாரில் உள்ள இலக்கிய அன்பர்களிட மிருந்து 25 ஆண்டுச்சந்தா சேர்த்து, அதற்கான பணத்தையும் கூடவே செக்காக அனுப்பியிருந்தார் ஒரு அன்பர்.

நெஞ்சை நெகிழச்செய்யும் இந்த அனுபவம் ''மலர்'' வெளியீட்டுக் குழுவினருக்கு ஏற்பட்டது.

வாய்ச் சேவை (Lip Service) மட்டுமே செய்கிற இன்றைய இலக் கியஉலகில், தேவையான – உருப்படி யான பணி இதைப்போல் வேறில்லை யென நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

—''சேது''

களுக்கு சிரித்து ஈடுகொடுக்க முடியாமல் எனக் குள்ளேயே வருத்தப்பட்டுக் கொண்டேன்.

அன்று வெள்ளிக்கிழமை. வழக்கத்திற்கு விரோ தமாக அதிகாலையில் எழுந்துவிட்டேன். அலுவல கத்திற்கு சிறிது நேரத்திற்கு முன்னரே சென்று இருக்கையில் அமர்ந்து கொண்டேன்.

''இந்தாங்க, உங்களுக்கு இண்டைக்கு ஒரு கடிதம் வந்திருக்கு'' கடிதத்தைத் தந்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தான் அலுவலக வேலையாள். நல்ல விஷயமாத்தான் இருக்கும். வெள்ளிக்கிழமை யும் நாத்துமாகடவுளைக் கும்பிட்டதுக்கு நல்ல பலன். அப்பாடி ... ... தந்தியைப் பிரிக்கும் பர பரப்புடன் கடிதத்தைப் பிரித்தேன்.

அன்புள்ள தம்பி,

நீ இங்கிருந்து போனப் பிறகு நான் உனக்குக் கடிதம் எதுவும் எழுவில்லை. சிவராசா இரண்டொரு முறை உனக்கு எழுதியதாகச் சொன்னார். இண்டைக்குத்தான் கடிதம் எழுதுவதற்குரிய முக் கியத்துவம் வந்திருக்கிறது. அத்தான் கொஞ்ச நாளா நல்லாய் நடப்பதாக அக்கம் பக்கத்தா ரெல்லாம் வந்து என்னிடஞ் சொன்னார்கள். ஒரு நாள் அவர் சிவராசாவிடம் வந்து ஏதோ கதைத்து விட்டுச் சென்றார்! சிவராசா அண்டு பின்னேரம் விட்ட வந்து ''அவர் இப்ப திருந்தி விட்டார் போல இருக்கு, உங்களோட சந்தோஷமா இருக்கப் போறாராம்'', ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பாருங் கோ என்று சொன்னார். அம்மாவும் ஓம் எண்டு சொன்ன. உனக்கும் அறிவிக்கவா எண்டு சிவராசா கேட்டார். நான் தான் இப்போதைக்கு வேண்டாம் என்டு சொன்னேன்.

நானும் அம்மாவும் பிள்ளைகளும் நம்பிக்கை யோடு அத்தானுடைய வீட்டுக்குப் போனோம். அத்தான் நல்ல தனமாக எல்லோரோடும் பழகி னர் இரண்டே இரண்டு கிழமைக்குள் திரும்பவும் குணத்தை மாற்றிக்கொண்டார். அடி, உதை முன்னில்பார்க்கக் கூடியது.

சிவராசாவிற்கு ஆள் சொல்லி அனுப்பிவிட்டு திரும்பவும் அவ்வளவு பேரும் தகர வீட்டைத் தஞ்சமடைந்தோம்.

தம்பி, எனக்குச் சொல்லப் பயமாயிருக்கிறது. நான் மீண்டும் **கர்ப்பமாயிருக்கிறேன்.** என்னை மன்னித்துவிடு.

அத்தானுக்குச் சந்தர்ப்பத்தைக் கொடுக்கப் போய், உனக்கும் எனக்கும், எல்லோருக்கும் சங் கடத்தைத் தேடிக்கொண்டுவந்து விட்டேன். என் னேடு கூடப்பிறந்தவன் நீ ... ... ... நீ என்னை மன் னிக்காவிட்டால் வேறுயார் மன்னிக்கப்போகிருர் கள்?

இப்படிக்கு
உனது அன்புள்ள அக்கா,
அருள்மணி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுபெற்ற தை "மலர்" விமர்சனக் கட்டுரை.

# எனக்குப் பிடித்தது

மு. ஹ. சேகு இஸ்ஸதீன்.

'மலர்' கன்னி இதழின் வெற்றிக்கு உறுதுணைத்தது இதுதான் என்று எந்த ஒன்றையும் எடுத்த எடுப்பில் குத்துமதிப்பாகக் கூற இயலாமல் இருப்பதற்கு விமர்சகனின் கையாலாகாத்தனம் காரணமல்ல; எல்லாமே சராசரியாக ரசனையின் பீடத்தைத் தொடத்தான் செய்தன. நிஜமலரின் வெற்றிக்கு அதன் வண்ணமும், அமைப்பும், நறுமணமும் காரணங்களாகி விடுவதைப்போல் சென்ற இலக்கிய மலரின் எடுப்புக்கு கட்டுரையும் கவிதையும் சிறுகதையும் ஒருங்கே ஒத்துழைத்திருக்கின்றன. மலரின் வண்ணமா, அமைப்பா மணமா சிறந்தது என்ற, மனத்தை லாகிரிப்பது என்ற சிக்கலான பிரச்னைக்கு பிறிதுபட்ட ரசனைக்காரர்கள் ஒவ்வொன்றைக் காரணமாக்கலாம். எனக்கு மலரின் நினைவுப் பீடத்தை வசீகரிக்கும் நறுமணத்தில்தான் ரசனையும் ஈடுபாடும் என்பதனால் இலக்கிய உலகில் அந்த இடத்தை என்னளவில் சிறுகதை பெறும்பட்சத்தில் அதுபற்றியே என் விமர்சனத்தை எழுதுகிறேன்.

பிரசுரமாகியிருந்த சிறுகதைகளில் ஒன்று முடிவுபெறவில்லை என்பதனால் அதனை விமர்சனத்தில் சேர்த்துக்கொள்ள இயலவில்லை. எஞ்சிய மூன்று கதைகளில் அருள் செல்வநாயகத்தின் 'கடல் தந்த காவலன்' சரித்திரத்திடம் 'கரு'வைப் பெற்றது என்பதனால் அதுவும் போட்டிக்கு நிற்கவில்லை. ஆக கவிதாவின் 'யுகங்கள் கணக்கல்ல' வும் ஆனாஸானாவின் 'வர்ணபேதமும்' தான் போட்டிக்கு நிற்கின்றன. கவிதாவின் 'யுகங்கள் கணக்கல்ல' ஒரு காதல் கதை; ஆனாஸானா தன் கதைக்குக் கருவை ஒரு சாதாரண பெண்ணின் குடும்ப வாழ்வின் பின்னணியில் பெற்றிருக்கிறார். ஏன் ஒன்றில் மற்றது சிறந்திருக்கிறது என்று ஒப்பிடுதலில் விமர்சிப்பதுவும் கரு அளவில் பிடித்த ஒன்று ஏன் தன்னில் நன்றாக அமைந்துள்ளது என்று விமர்சிப்பதும் சாத்தியமானதே. பின் கூறிய முறையில் எனக்குப் பிடித்த சிறுகதையை விமர்சிக்கும் நிலையையே நான் கைக்கொள்ளுகிறேன்:

வாழ்க்கையோடு நேரடியாக ஆழ்ந்த கலப்பைக் கருவளவில்—என்று தற்சமயத்துக்கு எடுத்துக் கொள்ளலாம்—கொண்டிருப்பதனால் ஆனாஸானாவின் 'வர்ணபேதம்' தான் எனக்குப் பிடித்த சிறுகதை. பிடித்துவிட்ட சிறுகதை என்பதனால் அதனில் குறைகளை இல்லை என்று ஒருபக்க நியாயம் கதைக்க நான் தயாரில்லை. விமர்சனத்தில் நிறைகளை விடக் குறைகளே கூடுதலாய்க் கூறப்பட்டாலும் அது 'பிடித்தகதை' என்ற முத்திரையை விழுங்கிவிடாது.

கதையை வாசிக்குமுன் தலைப்பே அறியப்படுவதனால் கதைத் தலைப்பின் பிடித்தமும் விமர்சகனிடம் ஒரு பரிவைப் பெற்றுவிடுகிறது. 'வர்ணபேதம்' என்ற தலைப்பு மிக அருமையான ஒரு சொற்கூட்டே. வானவில்லின் வர்ணங்கள் ஒன்றோடொன்று முயங்கியதாய்த் தென்படினும் பேதம் காட்டாது விடவில்லை. இதையே தலைப்பு நினைக்கச் செய்வதிலும் சொற்கூட்டு ஓர் இசைவைக் கொண்டிருப்பதிலும் ஆனாஸானாவிற்கு ஒரு வெற்றியே. அதேநேரம் கதையின் கருவின் தன்மையையும் தலைப்பு தாங்கி நிற்கவே செய்வது ஆசிரியரின் ரசனா ஞானத்திற்கு ஒரு மதிப்பீடாகும்.

கருவைப் பொறுத்தமட்டில் ,வர்ணபேதம்' வாழ்க்கையை மிக ஒட்டியே நிற்கிறது. கருவைப் பிரதிபலிக்கும் பாத்திரம் 'சுபைதா' அப்படி ஓர் அசாதாரண படைப்பு இல்லாவிட்டாலும் பாத்திர தர்மம் கெட்டுவிடாதவாறு ஆக்கப்பட்டிருக்கும் முயற்சி பாராட்டத்தக்கதே. நாகரிகத்தின் சுவடுகளையும், முன்னேற்றத்தின், வாழ்வின் ஆடம்பரத்தின் வெளிப்பான நிறங்களையும் விரும்பிய ஒரு பெண் எப்படித் தன் குடும்ப வாழ்வில் தன் உணர்ச்சிகட்கு மதிப்பளித்தாள் என்பதையும் தன் எண்ணங்களை பிற பாத்திரங்களின் சேர்க்கையால் எங்ஙனம் பிரதிபலித்தாள் என்பதையும் ஆனாஸானா அணுகி இருக்கும் முறை எழுத்துலகில் அவருக்குள்ள முதிர்வை எடைபோட்டுக் காட்டத்தான் செய்கின்றன. தனது இச்சைக்குரிய வாழ்க்கைக்கு வேண்டியிருந்த முற்போக்குக் கருத்துகளையும் அவள் திரட்டி வைத்திருப்பதாயும் காண்பிக்கப்படுகிறாள்.

மௌலவியோடு சுபைதாவின் வாழ்க்கை ஒரு வருத்த நாடகம். மௌலவியின் ஞானோபதேசங்கள் அவள் தேவையைப் பூர்த்தி செய்யாத போதில் தனக்குள் அவள் குமுறிக்கொள்ளும் ஆரம்ப கட்டம் அவள் மனநிலையைச் சித்தரிக்கப் போதுமானதே. 'மலரின் பக்கத்தில் வட்டமிடும் வண்டுகளுக்குத் தேன் தேவையா? சுவைகளின் அநித்தியமான உணர்வுகள் பற்றிய இதோபதேசம் தேவையா?' என்று தேவைத்தத்துவம் கதைக்கும் போதெல்லாம் அவள் பாத்திர தர்மம் சிதைவுறாமலேயே பின்னப் பட்டிருக்கிறாள். மௌலவி தன் இச்சைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமான தரவு அல்ல என்பதை அவள் நன்றாகக் கண்டு கொண்டதும் விவாகரத்தின் மூலம் முடிவு தேடும் வன்மை அவள் தன்மையே. இந்த விவகாரத்தின் பின்னணியில் அவளுக்கிருந்த தன்னம்பிக்கையும், தன் அழகிலிருந்து சரியான கணிப்பும் அவள் கிளியோபாத்திராவின் கூற்றை மேற்கோள் காட்டுவதிலிருந்து புலனாக்கப்படுகின்றது. மௌலவி என்னும் வர்ணம் அவள் வாழ்க்கையில் அப்பி விட்டிருந்தாலும் அதை மாற்ற முடியாமல் தனக்குப் பொருத்தமான வர்ணத்தை 'ரபீக்' மூலம் பெற்றுக் கொள்ளுவது சரியான கைகாரத்தனமே. யதார்த்த நிலையில் சுபைதா போன்ற ஒரு பாத்திரத்தின் நடமாட்டம் அபூர்வமல்ல.

'ரபீக்கோடு அவள் வாழ்வு சோபிக்கத்தான் சோபித்தது. அது நியாயமான அணுகுதலே. பாத்திரத்தின் தன்மைக்குப் பகட்டுக் காட்ட பொய்யான வர்ணங்கள் தீட்டிக்காட்ட ஆசிரியர் விரும்பவில்லை. இது ஓர் உன்னத நிலையே. இருப்பினும் ஆனாஸானா தாமாகவே தம் வழி விட்டுப்போய் பாத்திர தர்மத்தை வலிந்து கறைப்படுத்துவது — ஓர் அபநோக்கில் — இங்கு ஒரு படிந்துவிட்ட மாசுதான். 'அவர் ஏன் அதனை ஆதாயப்படுத்தக்கூடாது' என்ற வக்ரமான கேள்வி ஆபாச உணர்வை எழுப்புவது பாத்திரக் கணிப்பை தவறாக்க வழிகோலுகிறது. 'இப்பொழுதோ நான் நாக்கு ருசி தெரியாதவனிடம் அமுத கலசமாக நின்றேன்' என்று பொருமும் சுபைதாவின் மனோநிலை வேறு, முன்கூற்றைக் கூறும் பரத்தை மனோநிலை வேறு. இங்கு ஆசிரியர் அளந்து கொடுப்பதை மறந்து அள்ளிக் கொடுத்திருப்பது சரியல்ல. அவளின் மேல் வீணான அபவாதத்தைக் கிளப்பச் செய்த முயற்சி போல் தெரிகிறது.

ரபீக்கின் கொலைக்கு ஆசிரியர் அதிக விளக்கம் கொடுக்காமல் நழுவும் முயற்சி ஏன் என்று சரியாக விளங்கவில்லை. சுபைதாவை — கவர்ச்சிமையமாக வைக்க ஆசிரியர் விரும்பியிருந்தால் ரபீக்கின் கொலைக்கு அழுத்தம் கொடுக்காமல் விட்டது சரியே. ஆனால் பின்னால் கதையில் வரும் அக்கிராசனர் சின்ன மரக்காயருக்கு ஏன் அதிக விளக்கம் என்று புரியவில்லை.

அக்கிராசனர் சின்னமரைக்காயரின் தொடர்பை சுபைதா மூலம் விளக்க வருவதுதான் முறை. அதை விட்டு கருவுக்குத் துணையாக இன்னுமொரு புதுக்கருவை இணைக்க முயலும் போது பிரதான கருவில் தளர்வு ஏற்பட்டுவிடுகிறது. சின்ன மரக்காயர் பாத்திரம் ஆசிரியர் மனதில் உருவாகி வளர்ந்தபோதில் ஆசிரியருக்கு தன் பாத்திரத்தில் ஓர் அவநம்பிக்கையும் மதிப்பின்மையும் விஷ விருக்ஷமாய் எழுந்ததில் அதை வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் மனப்பாங்கில் நடந்துகொண்டிருப்பது முறையல்ல. இருப்பினும் சின்னமரைக்காயரின் அறிமுகம் சுபைதாவின் உள்ள எச்சங்களைப் புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கிறது. சுபைதாவுக்கு எத்தனையோடு எத்தனையைச் சேர்த்தால் ஐந்தாகும் என்பது புரிகிறது என்ற விஷயத்தைத் தெளிவாக்குவது சின்ன மரைக்காயரின் பாத்திரம்தான். அவள் தன் அலுவல்களை முடித்துக்கொள்ள அவரை நாடும் சுபாவம் அவளுக்கு உரிய ஒன்றே. சின்னமரைக்காயரின் ஆழ நீளங்களை புகை வண்டியில் அவள் புரிந்துகொள்ளும் திறமை அவளுக்கு ஆண்களின் குணங்களில் உள்ள ஈடுபாட்டைத்தான் காட்டுகின்றது. அப்படியான அவளின் குணங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெளித்து வாசகர்களுக்கும் வேலை வைத்திருப்பது ஆனாஸானாவிற்கு இந்தக் கதை மூலம் ஏற்பட்டிருக்கும் ஒரு புதுத்திறமை என்றே நம்பவேண்டும்.

கதையின் உருவம் அப்படி ஒன்றும் விமர்சிக்கக் கூடிய புதுமையைக் கொண்டிருக்கவில்லை. முடிவுக்கு முன் தொடங்கி ஆரம்பத்திற்குத் தாவிக் கதையை நடத்திச்செல்லும் உத்தி சாதாரணமானதே. விறுவிறுப்பைப் பொறுத்தமட்டில் சராசரியைத் தாண்டிவிட்டிருப்பது குறிப்பிடத்தக்க வெற்றியே.

மௌலவியின் வர்ணங்களும், ரபீக்கின் வர்ணங்களும் தனித்தனியானவை. இடையில் ஏற்படும் வர்ணக் கலப்பு வர்ணபேதத்தை மறைக்கவே இல்லை. பின் வந்த சின்னமரைக்காயரின் வர்ணங்கள் ரபீக்கின் வர்ணங்களோடு கலந்து கலப்பும் மயக்கமும் காட்டினாலும் பேதத்தையே பெரிதாக்குகின்றன. ஒவ்வொரு வர்ணமும் தன் இயல்பில் பேதமாகுவதும் 'வர்ணபேதம்'தான், ரபீக் வாங்கி மாட்டிய புறுக்களின் மணிக்கண்களைப் பார்க்கக் கூசும் சுபைதாவின் தடுமாற்றமும் 'வர்ணபேதம்'தான்.

கடைசியாக, ஒவ்வொரு பாகத்திற்கும் இடப்பட்ட தலைப்பையிட்டு ஒரு வார்த்தை. நிறங்களுக்கு தனித்துவம் உண்டு. ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு மனித குணங்களைக் காட்டும் அர்த்தத்தைக் கொண்டுள்ளன. ஆனால் இந்த ஆராய்ச்சியை ஆனாஸானா அறிந்துகொண்டிருப்பதாய் படவில்லை. பகுதிகளுக்குத் தலைப்பு வேண்டுமே என்பதற்காக அதிர்ஷ்டச் சீட்டிழுத்துப் போட்டதுபோல் இருக்கிறது. சுபைதாவின் வாழ்க்கை மௌலவியோடு இருண்டிருந்ததென்றால் அதன் தலைப்பு 'கறுப்பு' என்றும், ரபீக்கோடு பசுமையாய் இருந்ததென்றால் 'பச்சை' என்றும் மற்றவையும் இப்படியே பொருத்தம் பார்த்து அமைக்கப்பட்டிருக்கவேண்டும். இது கவனிக்கப்படவேண்டியதொன்றே.

மொத்தத்தில் 'வர்ணபேதம்' சிறந்த படைப்பே, சுபைதாவின் கதை, வாழ்வை விட்டு ஒதுங்கிவிட்ட கதாபாத்திரம் சாலியாவைப் போன்றிருப்பது துரதிர்ஷ்டம்தானென்றாலும் 'வர்ணபேதம்' மலரின் வெளியீடாகிச் சிறந்துவிட்டது என்றே கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த வீட்டின் புதியக்கதை

செ.யோகநாதன்



"எவ்வளவு மகிழ்ச்சியாக இந்த வண்ணாத்திப்பூச்சிகள் பறந்து திரிகின்றன. வண்ணாத்திப் பூச்சிகளாய்ப் பிறந்திருந்தால்கூடக் கவலை இல்லாமல் சந்தோஷமாயிருந்து செத்துப்போயிருக்கலாம்'' — பச்சையாய், நீலமாய், சிவப்பாய், பச்சையும் நீலமும் சிவப்பும் கோடிட்டதாய் காவிழாச் செடிகளின் பூக்களிலிருந்து தேன் குடித்துப் பறந்துதிரியும் வண்ணாத்திப் பூச்சிகளைக் கண் இமைக்காது பார்த்துக்கொண்டிருந்த இராசம்மாவின் மனம், இயற்கையின் பசுமையென்ற குளிர்மையினுள் தோய்ந்த மறுகணமே அலுத்துச் சிலுப்பிக்கொண்டது.

மனதினுள்ளே குமையும் துன்பங்களையெல்லாம் ஓரளவு மறக்கவைக்கும் அந்த வீட்டின் இந்த இனிமையைக்கூடக் கவலையின்றிப் பார்க்கும் சந்தர்ப்பமும் அவளுக்கு இனி இல்லாமற் போய்விடப்போகின்றது. வரண்டிருந்த அவளின் நெஞ்சிலே பசுமையின் சிறுதலை நீளவிருந்த வேளையிலே வரவிருக்கும் அந்த இழப்பினை, அந்த வீட்டை இழப்பதினை அவள் எப்படியும் தவிர்த்துக்கொள்ள வேண்டுமென்பதில் முழுமூச்சாயிருக்கிறாள். எப்படியும் அந்த வீடு அவளுக்கில்லாமற்போவதை அவள் அனுமதிக்கப்போவதில்லை.

காவிழாச் செடிகளும், காட்டுச் செவ்வந்திகளுமே நிலத்தை மூடி அடர்ந்திருந்த நாளிலிருந்து, இக்காணியில் அவள் கால்கள் பதிந்து, விளையாடி, அலுத்துக் களித்துத் திரிந்திருக்கின்றாள். இளவயதின் பல நினைவுகள் சேமிக்கப்பட்ட நெஞ்சினுள் அக்காணியைப்பற்றிய செய்திகளும், சம்பவங்களுந்தான் மிகுதியாகக் கிடந்தன. அவளது குடும்பத்தின் ஆசை, நிம்மதி, இரத்தம், உழைப்பு யாவையும் உறிஞ்சி, அவற்றையே அத்திவாரமாயும், உரமாயும் கொண்டு அக்காணியில் எழுந்த வீட்டை இராசம்மா மனநிறைவோடு பார்த்துக் களித்திருக்கின்றாள். அந்தக் களிப்போடு அளவிடமுடியாத சோகம் ஒரு இழையெனப் பின்னியிருந்தாலும், அது அவளுக்கேயுரிய வீடென்ற நினைப்பில் அவளையறியாததோர் பூரிப்பு இராசம்மாவின் இதயத்தினுள் அடர்ந்து செறிந்துதான் இருக்கின்றது. அந்த இதயப் பூரிப்பிற்குக்கூட முடிவு வந்தாற்போல........

மழைத்தூறல் ஓய்ந்து மணித்தியாலம் கழிந்த பின்னேரப் பொழுதில் - என்றும் அவள் வீட்டின் பின்புறத்தினுள்ள மாமரத்தின் அருகேயுள்ள முதுகுவளைந்த தென்னை மர அடியில் இருந்தவண்ணம் எதையாவது யோசித்துக்கொண்டோ அல்லது மெதுவான குரலில் தன்னை மறந்து பாடிய வண்ணமோ இருப்பாள். சிந்தனைகள் அவையவை விருப்பம்போல எங்கெல்லாமோ போய் வழிதெரியாதன போல உழன்று குழம்பும் தருணங்கள்தான் அனேகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைமறந்த இசைலயிப்பில் மூழ்கியிருக்கையில்தான் அவள் மனம் சஞ்சலமேயற்ற அமைதியினை எய்தும், அந்தக்கான உலகின் சஞ்சரிப்பு முடிந்து மனம் மண்ணுக்கு மீள்கையிலோ, துன்ப நினைவுகள் இறகுகள் சடசடத்துவந்து உட்காரும் பட்டிப்பறவைகளாய் நெஞ்சினுள் உட்கார்ந்து, தமது கூரிய அலகுகளால் இதயத்தைக் கொத்திக் கொண்டிருக்கும்.

அவளுக்கு மிகவிருப்பமான பாடல், இரவின் துயிலிலும் அவள் நெஞ்சினுள் துல்லியமாக ஒலித்துக்கொண்டிருப்பதாய் அவளுக்கோர் பிரமை. ''வேலவரே உமைத்தேடி ஒரு மடந்தை விடியுமளவும் காத்திருக்கிற வகையென்ன?' என்பது அப்பாடல். அப்பைரவிராகப்பாடல்,நெஞ்சையே மயக்கித்தாபத்தைப் பிரவகிக்கும் அந்தக்கீதம் அவள் நெஞ்சோடு ஒன்றுகி, இரத்தம் சதையோடு கலந்ததுபோல ஒன்றிப்போய்விட்டது.

அவள், தான்பயின்ற கீதங்களுக்குத்தான் இதுவரை மயங்கியிருந்தாள். ஆனால் ஒருமாதகாலத்துக்கு முன்னிருந்து அவள் தற்செயலாக ஒரு நாள் அவன் மெல்லப்பாடிக்கொண்டுபோன பாட்டினைக்கேட்டதிலிருந்து, கேட்கவிரும்பும் இனியகீதமாக அவனது கீதமே அவளுக்கு மாறிப்போயிற்று. அவள், தனிமையில், மௌனம் சரிந்திருந்த மாலையின் மையல் வேளைதனில் கேட்ட அவனுடைய பாடல், அந்த வெறும் சினிமாப்பாடல் அவள் நெஞ்சினுள்ளேயே அவளே வியக்கும் புதிய தெம்பினையும் எதிர்பார்ப்பினையும் கொடுத்துவிட்டது.

அவன் பாடிக்கொண்டுபோனதின்பின் மூன்று நாட்கள் கழிய அவனைக் காணவேண்டுமென்று பரபரப்புற்றிருந்த இராசம்மா அவனைக்கண்டாள். அவனுக்கு, பார்த்தவுடன் மனதில்பதியாத தோற்றமாயினும், அந்தக்கட்டுமஸ்தான ஆகிருதியும், ஒட்டவெட்டி முன்புறம் சற்றுக்கும்பலாக விடப்பட்டிருந்த தலைமயிரின் கடுமையும் அவள் கண்களிலே நிறைந்துவிட்டது. அன்று இராசம்மா அறைக்குள்ளிருந்து தன்னைமீறியதோர் வெறியுணர்ச்சியோடு தான் விரும்பும் அந்தப் பாடலைப் பாடிக்கொண்டிருந்தாள். அப்பைரவிராகப் பாடலின் ஒவ்வொரு சொல்லும் அன்றுதான் பூரண அர்த்தம் பெற்றனபோல நெஞ்சினுள்ளே உணர்வு நெருடிக்கனத்து, அவள் பாடுகையில் நிறைந்த பரிபூரண உணர்வினைப் பெற்ருள்.

மறுநாள் அவனுக்காக அவள் காத்திருந்து, ஓரக்கண்களாலே போலித்தனமாகப் பார்த்து, அவனுடைய பூ மலர்ந்தாற்போன்ற புன்னகையைக் கண்டு பெருமகிழ்வோடு தன்னை மறந்து பாடுகையிலே ஏற்படும் பிரகாசமான பரவசம் அவளின் கண்களிலும், கன்னங்களிலும், களிக்கும் உடலிலும் அலையாய் எறிந்தது.

அன்றிரவு, தன் உணர்வுக்குத்தானே அதிசயப்பட்டு உறக்கத்திற்கும் விழிப்பிற்குமாளாகி உறங்கிய பின்னிரவின் போதினிலே இராசம்மா ஒரு கனவு கண்டாள்.

... அவள் ஓயாது வணங்கும் இளமுருகன், அவளின் பாட்டைக்கேட்டு மனமிளகி இரங்கி மண்ணிற்குவந்து தன்னை ஆட்கொள்ளவேண்டும் என்று பாடிக்கொண்டிருக்கின்ருள். “வேலவரே உமைத்தேடி ஒரு மடந்தை விடியுமளவும் காத்திருக்கிற வகையென்ன” என்ற அப்பைரவிராகப்பாடல் ஏக்கமாய், இதயத்தின் ஜீவகீதமாய் வீணையின் ஓசையோடு சேர்ந்து எழுகையில் அவள் நின்ற இடத்தைச்சுற்றி நூருய் ஆயிரமாய் நிறமற்ற மலர்கள் மலர்ந்து விரிந்தன. அவள் மிக விரும்பும் பெரிய 'போடர்' உள்ள சாறியை அணிந்து நெற்றியில், உச்சி தொடங்கும் இடத்திலும், நடு நெற்றியிலுமாய்க் குங்கும திலகங்கள் அணிந்திருந்தாள். அந்தத் திலகங்களைப் பார்த்துவிட்டு அவளுக்குமுன்னுல் அவளின் சிலசக ஆசிரியைகள் தலைகுனிந்து கொண்டு போனதையும் அவள் கண்டாள். பிறகு பார்த்தால் அவள் அந்த மாமரத்தை அடுத்த தென்னை மரவடியில் இருந்தாள். அவள் தேடிய முருகன், அவ்வளின் வீட்டுச் சுவரிலுள்ளது போல புன்னகை சிந்தும் முருகன் தொலைவிலே வந்து கொண்டிருந்தான். அவள் கண்களைத்துழாவி அவனைப் பார்க்கின்ருள். அந்தக்கட்டுமஸ்தான ஆகிருதியும், ஒட்டவெட்டப்பட்டு முன்புறம் சற்றுக்கும்பலாக விடப்பட்ட தலைமயிர்க்கற்றையுமுள்ள அவனுக அந்த முருகனின் தோற்றம் மாறுகின்றது. அவன்தான். இராசம்மாவின் உள்ளமெல்லாம் காற்றுக்கு ஆடிச் சிலிர்க்கும் பூங்கொத்தாயிற்று. அவன் எதையுமே கவனியாமல் சிருங்காரம் ததும்பும் முகத்தோடு அவளின் அருகே வந்து ... ... அவள் உடல்திமிறித் திடுக்கிட்டு விழித்தாள்.

என்ன கனவு இது?

அவள் பாடிப் பரவசமாகிப் பக்தியால் தேடும் வேலவன் இவன்தானு?

ஈழத்துச் சிறுகதையுலகில் குறுகிய காலத்தில் நிறையப் பெருமை தேடிக்கொண்டவர் இளைஞர் செ. யோகநாதன். ''யோகநாதன் கதைகள்'' (சிறுகதைத் தொகுதி) ''இருபது வருஷங்களும் மூன்று ஆசைகளும்'' (குறுநாவற் தொகுதி) ஆகியவை அச்சில் வெளிவந்த இவரது நூல்கள். ''சோளகம்'' என்ற இவரது சிறுகதை தமிழக, வாசகர்வட்ட வெளியீடான ''அக்கரை இலக்கியம்'' என்ற தொகுப்பு நூலில் வெளிவந்து பாராட்டுப்பெற்றுள்ளது.

—ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு தனது நெஞ்சின் சிந்தனைகள் பாவமாய், தீயதாய்ப்பட்டன; பெருமூச்செறிந்தாள்.

பிறகு அவளுக்கு உறக்கமே வரவில்லை. புரண்டு உழன்றவள் கட்டிலில் இருந்து எழுந்து உட்கார்ந்து, துடிக்கின்ற கண்களோடு எவ்வித அர்த்தமுமின்றி இருளைத்துழாவினுள். எல்லாவற்றையும் மீறி அந்தக்கனவுதான் அவளின் நெஞ்சிலும், கண்களிலும் அழியாத ஓவியங்களென வந்து தோன்றிக் கொண்டிருந்தது. வெகு தொலைவில் மழைக் குருவியொன்று கிறீச்சிட்டுப் பறந்தது. ஏகாந்தமும் நிசப்தமும் கலந்த அந்த நேரத்தில் மௌனத்தைக் கீறிக்கிழித்து அழித்தது போலிருந்தது அந்தக் கீச்சிடல். அதுவே ஓர் சோகத்தின் இழையென அவள் நெஞ்சினுள் எதிரொலித்து விம்மியது.

அவளுக்கு அவ்வீட்டில் உள்ள ஒரே ஆறுதலான மனித உயிரான தாய், அந்தக் குடியிருக்கும் காணியின் எதிர்காலம்பற்றிய விபரத்தை இறுதியாக அறிந்துகொள்வதற்காக, அந்தக் காணியை ஈடுபிடித்த தாமோதிரம்பிள்ளையின் வீட்டிற்குப் போயிருந்தாள். இராசம்மா பள்ளிக்கூடத்தால் திரும்பி வீட்டிற்கு வந்தபோது போனவள் இன்னமும்தான் வந்து சேரவில்லை.

வீட்டின் முன் விறுந்தையில் அவளின் ஆசைக்குரிய பூனைக்குட்டி லில்லி, மூலைப்புறமாக தலையை முன்னங்காலினுள் சேர்த்துவைத்துக்குறங்கிக் கொண்டு கிடக்கும்.

அடைக்கலம் குருவிகள் இரண்டு ஓயாமல் அறையன்னலில் வந்திருந்து கீச்சிடுவதால், அவை வந்திருக்கட்டுமே என்று ஒரு கடுதாசிப் பெட்டியை யன்னல் கம்பியில் கட்டிவிட்டாள் இராசம்மா. அந்த 'வீட்டில்' இப்போது அக்குருவிகள் ஒன்றின் அலகினை மற்றொன்று கோதிக்கொண்டிருக்கும்.

நான்கு அறைகளும், சமையலறையும் முன் விறுந்தையுமுள்ள அந்த வீட்டின் நித்தியவாழ்வு, சிலவருஷங்களிலிருந்து இதுவாகவே போய்விட்டது.

வெளிவிறுந்தையின் வெண்சுவரிலே, உயரத்தில் முருகனின் பெரியபடம் மாட்டப்பட்டிருந்தது. சிரித்தமுகத்துடன் அபயங்காட்டிய முருகனின் கீழே, 'வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்' எனப் பெரிய எருத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அந்தப்பெரியபடத்தின் கீழே, காலஞ்சென்ற அவளின் தகப்பன் திருநாவுக்கரசரின்படம் தூங்கியது. படத்திற்கு குங்குமசந்தனம் பூசப்பட்டிருந்தது.

தகப்பனின் படத்தையும், முருகனையும் பார்த்துவிட்டுத்தான் கதவோரமாக உள்ள செருப்பை மாட்டிக்கொண்டு அவள் பாடசாலைக்குப் புறப்படுவாள். அவரின் புகைப்படத்தின் முகத்தையே அவள் உற்றுப்பார்த்துவிட்டு அடிக்கடி பெருமூச்செறிவாள். அந்த முகத்திலேதான் எத்தனை நிறைவேறுத ஆசைகள் புதைந்து மறைந்து கிடக்கின்றன!

இந்தியாவிற்குப் போய்ச்சங்கீதம் படித்துவிட்டு சங்கீதபூஷணமாக அவள் வீட்டிற்குத்திரும்பிய போது, திருநாவுக்கரசர் கண்களில் துளிர்த்த கண்ணீரை அடக்கமுடியாத தளதளப்போடு மகளை நெஞ்சார இறுகத்தழுவி மகிழ்ந்த புளகாங்கிதத்தை இராசம்மா அவர் முகத்தின் பொலிவிலே மானசீகமாகக்கண்டாள். அவளின் ஒரேயொரு திரவியம் இராசம்மா என்று அவர் அடிக்கடி சொல்வார்.

இராசம்மாவின் வட்டமானமுகம் அப்போது பூரிப்பினுல் பொலிந்திருந்தது. என்றும் நெற்றியில் பளிச்சிட்டுத்துலங்கும் கறுப்புத்திலகம் அவள் முகத்தினை வெட்டியடிக்கும் மின்னலென காணும் எவரின் நெஞ்சிலும் பதியவைக்குமளவிற்குக் கவர்ச்சிகரமாயிருந்தது தகப்பனைப்போலவே தான் பெரியவிழிகள் இராசம்மாவிற்கு. அந்த விழிகளே இராசம்மாவின் எல்லா அழகிற்குமான அந்தரங்கம் என்று அவளைக்காண்பவர்களும், அவளோடு பயின்றவர்களும் சொன்னதுண்டு. அவள் கதைக்கும்போது கண்களைச்சிமிட்டிச் சிமிட்டித்தான்

## ஒரு அனுபவம்

—★—

''மலர்'' விற்பனைக்காக கல்முனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம். நாங்கள் சென்ற வாடகைக்காரின் பின் பக்கம் கட்டுக்கட்டாக ''மலர்'' பிரதிகள் இருந்தன. காரில் வந்த பிரயாணிகளில் ஒருவர் அக்கட்டுகளில் இருந்து ஒரு ''மலர்'' பிரதியை உருவி எடுத்தார். சிறிது அதைப் புரட்டி ஒரு கண்ணேட்டம் விட்டார். பிறகு, ''என்னையும் ஒரு சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ள முடியுமா? இதோ பணம்!'' என்று ஒரு பத்து ரூபா நோட்டை நீட்டினர். எங்களுக்கு ஒரே வியப்பு. அவர் இலங்கைச் சர்வகலாசாலையில் ஒரு உதவி விரிவுரையாளர் என்பது தெரிந்ததும் எங்கள் வியப்பு நீங்கிவிட்டது.

தரமான இலக்கிய ஏடென்றுல் விஷயமறிந்தவர்கள் நிச்சயம் விரும்பத்தான் செய்வார்கள் என்பதை இந்தச் சம்பவம் நிரூபித்துவிடுகிறது அல்லவா?

—''சேது''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைப்பாள். அந்த வசீகரமான கண்சிமிட்டலும் அவளின் சொற்களாயிருந்தன.

ஆனால் இவ்வேளையில், எட்டு ஆண்டுகள் கழிந்து போன இந்த வேளையில் அவள் முகத்தில் எத்தனை மாற்றங்கள்! அதே வட்ட முகம் கண்கள் சிமிட்டல்.

ஆனால் அந்த முகத்திலிருந்த மோகனமோ, பூவிலிருந்து போன மணம்போல எப்படியோ திருட்டுப்போய் விட்டது. எவ்வளவுதான் அவள் முயன்ற போதும் கண்களைச் சுற்றிவிழும் கருவட்டங்கள் ஆழக்கோடு கீறிக்கொண்டிருப்பதை அவளால் நிறுத்த முடியவே இல்லை. உடம்பு கூட முன்னை விடச் சற்றுப் பெருத்து, அவளைக் குள்ளமாக்கிக் காட்டியது.

அவளின் தகப்பனார் திருநாவுக்கரசரின் பெயரை நாகரிகமாகச் சுருக்கி 'திருமனை' என்ற நாமத்தில் தான் அந்த வீடு அழைக்கப்பட்டது. அந்த வீட்டுக் கேற்றுப் பொருத்தப்பட்டிருந்த தூணிலே 'திருமனை' என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. கேற்றை இழுத்துப்பூட்டும் மறு தூணிலே ஒன்றுமே பொறிக்கப்படாது, ஒரு விழியிழந்த முகத்தைப் போல வெறுமையான நீள் சதுரமே இருந்தது. பள்ளிக்கூடத்திலிருந்து களைப்போடு, குடையைச் சுருக்கியபடி அவள் வருகையில், அதனை - அந்தப் பெயர் பொறிக்கப்படாத தூணிலுள்ள வெறும் நீள் சதுரத்தைப் பார்க்கவே விரும்பாது கேற்றை அவசரமாய்த் திறப்பாள்.

கேற் திறக்கும் சிறீச்சிடலோடு, தகப்பனின் குரலும் அவளுக்குக் கேட்பது போல பிரமை.


"தங்கச்சி, உனக்குக் கலியாணம் முடிச்சுக் கொடுத்தாப் பிறகு, இந்தத் தூணிலே என்ரை மருமகனின்ரை பெயரைப் போடுறதுக்காகத்தான் அதை வெறுமையாய் விட்டிருக்கிறன்."

மூன்று வருஷங்களின் முன்பு அவளின் தகப்பனார் மாரடைப்பால் இறந்த போது அவள் அவர் சொன்னவற்றை நினைந்து நினைந்து கலங்கினாள். அவரின் பிரேதம் வைக்கப்பட்டிருந்த வாங்கின் அருகே நின்று, கண்கள் மூடி, தான் இறந்ததே பொய்யென்ற நினைவை அவளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் தகப்பனின் உயிரற்ற சடலத்தை அவள் பார்த்துக்கொண்டே நின்றாள். அதே கோலத்தில், கலக்கமற்ற முகத்தோடு தூயவெள்ளை நாஷனலும் வேட்டியும் அணிந்து, மடித்துக் கையை ஒன்றின்மேலொன்று வைத்து, நீறும் பொட்டு மணிந்த நெற்றியோடு அவள் இன்று தான் அவரைப் பார்த்திருக்கின்றாள். அவள் உடலே துயராகிக் குலுங்கிற்று.

அவள் மனதிலே நிறைந்த சுமை கணத்துக்குக் கணம் அதிகரித்தது; இதயம் வெடிக்க, செய்வதறியாத ஏக்க நிலையோடு உதட்டைக் கடித்து விம்மியவள் தன்னை மறந்து ஓவென்று கதறினாள்.

"ஐயோ, ஐயா போயிட்டீங்களே, என்னை வெறுமையாய் விட்டிட்டுப் போயிட்டீங்களே..."

அவள் அழுகையின் துயரம், அவள் அழுகையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் கண்களிலும் கண்ணீராய் வழிந்தோடிற்று. ஒவ்வொருவரும் இரக்கப்பட்டார்கள்; பெருமூச்செறிந்தார்கள்; அவளை ஆறுதற்படுத்தினார்கள். அங்கு வந்திருந்த தாமோதரம்பிள்ளையும் மனைவியும்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மாவையும் தாயையும் அறுதல் படுத்தி விட்டே சென்றார்கள்.

இராசம்மா அன்று அழுத அந்த நெஞ்சினைக் கரைக்கும் அழுகை, அனுபவித்த அந்தவேதனை ஆகிய யாவுமே, இன்றும் அந்தத்தூணின் பெயரிடப்படாத குருட்டு நீள்சதுரத்தைக் காணும் போதிலெல்லாம் துயரோடு விக்கலாய் வெளிவருகின்றன.

அந்த நீள்சதுரம் இன்றுவரை வெறுமைதான்! ஆனால் அந்த வெறுமையும், விரைவில் நிரம்பிவிடும்

அவளின் தகப்பனும், அவளும் நிரப்பி வைக்கத் துடித்த அந்த வெறுமையேயான நீள் சதுரத்தை யாரோ ஒருவன், அது தாமோதரம் பிள்ளையோ அல்லது வேறுயாரோ ஒருவன் எவ் விதமான மனத்தாங்கலோ கஷ்டமோ இன்றி விரைவில் மாற்றிவிடுவான். சில வேளைகளில் 'திருமனை' என்ற பெயரினைக்கூட அவன் தூக்கி யெறிந்துவிட்டு அவ்வீட்டிற்கு வேறு பெயர் சூட்டிக்கொள்ளலாம்!

அவளுக்கு நெஞ்சைப்பிய்த்துக்கொண்டு கண்ணீர் வந்தது.

அவள் விம்மி விம்மி அழுதாள்.

அந்த ஆசைக்குரிய அவளின் பூனைக்குட்டி லில்லி தன் வாலினால் அவளின் கால்களை வருடியபடியே விட்டது.

அவள் கண்களைத் துடைத்துவிட்டு எழுந்தாள்.

## 2

அடைக்கலம் குருவிகள் இரண்டும் எங்கோ வெளியில் பறந்துபோய் விட்டன. கூட்டின் வாசலில் இரண்டொருவைக்கோற்துண்டுகள் சிதறி வெளியே துருத்தியிருந்தன.

இராசம்மா, மேசையில் இருமுழங்கைகளையும் ஊன்றிக் கைகளால் நாடிக்கு ஆதாரம் கொடுத்தபடியே தனக்குச் சிறிது தள்ளி வைக்கப்பட்டிருந்த தம்புராவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதம் பயின்று கொண்டிருந்த நினைவுகள் மேலோங்கி ஆரோஹணகிரமத்தில் நெஞ்சினுள் சுழன்றன; நேற்றைய நிகழ்ச்சிகளாய் மனதை அவைதொட்டன.

இளவயதிலிருந்தே எதற்கும் மௌனமான 'அமசடக்குப்பேர்வழி' இராசம்மா. யாராவது கதைகேட்டால் ஒருமுறுவல்; இன்னும் மிஞ்சிப் போனால் இரண்டொருசொற்கள். ஆண்களோடு தலைநிமிர்ந்து பேசியதெல்லாம் மிகவும்குறைவு. பெண்களிலே அவளுக்கென்றோர் சிநேகிதி எந்தக் காலத்திலுமில்லாதிருந்த போதும், அவளுக்கு அதைப்பற்றிக்கவலையே முகத்திலோ, நெஞ்சிலோ, வார்த்தைகளில்தானோ தொனித்ததில்லை. அவள் மீது அனுதாபங்கொண்டு பழகிய திருச்சிமாணவி, இராசம்மாவை ஒருநாள் நேருக்கு நேராகவே இதைப்பற்றிக் கேட்டபோது பாடமாக்கி வைத்திருந்ததுபோல இராசம்மா பதில் சொன்னாள்:

"சுருதிதான் எனது தாய். லயம் தான் எனது தகப்பன். கானத்திற்கு எது தாய், தகப்பன், சுற்றமோ அவைதான் எனக்கும் தாயும் தகப்பனும் சுற்றமும்"

அந்தத் திருச்சி மாணவி, இராசம்மாவின் கிறுக்குத்தனத்தினை நினைத்துச் சிரித்துக் கொண்டு போய் விட்டாள்.

திருநாவுக்கரசருக்குத் தனது மகிழ்வின் பெரும் பகுதி மகளாலே தான் ஏற்பட்டிருக்கின்றது என் பதில் பெரும் பூரிப்பு.

அவள் என்றும் ஆடம்பரமாய் உடுத்தியதில்லை. தகப்பனின் கண்டிப்பும், தன்னையே கூர்ந்து கவனித்திருக்கும் கண்களும் இராசம்மாவின் ஒவ்வொரு செயலின் போக்கிலும் அவளை மிக எச்சரிக்கையோடு இருக்கவைத்தது.

அவளுக்கேயுரிய அந்தக்காணியை, தாமோதரம்பிள்ளையிடம் முதலில் சிறுபணத்தொகைக்கு திருநாவுக்கரசர் ஈட்டில் வைத்துத்தான் அவளைச் சங்கீதம் படிக்க இந்தியாவுக்கு அனுப்பினார். நகரத்திலுள்ள பலசரக்குக் கடையில் கணக்குப் பிள்ளையாக விருந்த திருநாவுக்கரசருக்கு தன்னுடைய அந்த ஆசை தகுதி மீறியதாகத் தெரியவில்லை. மகள் படித்துவிட்டு வருவதற்கிடையில் கொட்டிலாக, ஒரு சிறு குடிசையாக உள்ள தன் வீட்டை, நாலு அறைகளும், முன் விறுந்தையும் சமையலறையுமுள்ள ஒரு கல்வீடாகக் கட்டிவிடுவதென்று அவர் மனதினுள்ளேயே சபதம் பூண்டிருந்தார். அந்தச் சபதத்தையும் தாமோதரம்பிள்ளையிடம் மேலும் பெற்றுக்கொண்ட கடனால் நிறைவேற்றிக் கொண்டார் அவர்.

ஓலை வீட்டிலிருந்து இந்தியாவிற்குப் போன இராசம்மா ,சங்கீத பூஷணமாகத் திரும்பி வந்த போது கல்வீட்டிலே காலடி எடுத்து உள்ளே வந்தாள். பூரித்த முகத்தோடும், பொலிந்த புன்னகையோடும் அவளைப் பார்த்துக் கொண்டிருந்த தகப்பனை அவள் கண்கள் பனிக்க நோக்கினாள். உடலைக் கவனியாது மகளிற்காக எல்லா உழைப்பையும் கொடுத்துத் தோல்மூடிய எலும்புக் கூடாய் நிற்கும் தன் தகப்பனாருக்கு, அந்தத் தெய்வத்திற்கு எதனைத் தன்னால் திருப்பிக்கொடுக்க வல்லமையுள்ளது என அவள் தன்னுள்ளேயே குமைந்தாள்.

தகப்பனோ சிறுவனின் களிப்பில் பரபரத்தார்.

''இராசு. இஞ்சை வந்து பாரம்மா ...''

அவர் காட்டியதை அவள் பார்த்தாள்.

கேற்றின் இருபுறத் தூண்களிலும் பெயர் பொறிப்பதற்காக இரு நீள் சதுரங்கள் வெட்டப் பட்டிருந்தன.

அவர் அந்த வெறுமையைக்காட்டிச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தங்கச்சி, இந்தப்பக்கத்திலே வீட்டின்ரைபேர், மற்றப்பக்கத்திலே வீட்டுச் சொந்தக்காரரின்ரை பேர் போடவேணும்''

இராசம்மா வழமைபோலப் புன்முறுவல் செய்தாள்.

''உங்கடை பேரைச்சுருக்கி, வீட்டுக்குத் 'திருமனை' எண்டு பேர்வைப்பம். வீட்டுச் சொந்தக்காரரும் நீங்கதானே. அதிலை உங்கடை பேரைப் போடுவம்''

இயல்பாகவே சிரிக்கும் திருநாவுக்கரசர் இப்போது தன்னைமீறி ஓவென்று சிரித்து அடங்கி விட்டுச் சொன்னார்.

''வீட்டுக்கு வேணுமெண்டால் நீ விரும்புகிற மாதிரிப் பேரை வை. ஆனால் வீட்டுச் சொந்தக்காரர் ஆரெண்டு உனக்குத் தெரியுமே? தங்கச்சி, உனக்குக் கலியாணம் செய்துகொடுத்தாப்பிறகு,இந்தத்தூணிலை என்ரை மருமகனின்ரை பேரைப் போடுறத்துக்காகத்தான் அதை வெறுமையாய் விட்டிருக்கிறன்''

தகப்பன் அடங்கிய குரலிற் சொன்னபோது இராசம்மா நாணத்தோடு உள்ளே போனவள், விருந்தைச்சுவரை நிமிர்ந்துபார்த்தாள், அந்த அபயகரமுருகனின் கீழே ''வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என எழுதியிருந்ததை வாய்க்குள் வாசித்து முணுமுணுத்துவிட்டு அவனை வணங்கினாள். பக்தியும் ஒருவித சுயநலம்தான் என மனம் எண்ணிற்று.

''ஒருநாள் ராகங்களில் சிறந்த ஸாவேரிராகத்தில் அவள் பாட்டுப்படித்துக்கொண்டிருந்தாள். யாருமே மயங்கும் கானத்தில் அப்போதுதான் அங்கு வந்துநின்ற தகப்பன் மெய்மறந்து போனார். மகளின் திறனிலே நெஞ்சுபூரித்தது அவருக்கு. வீட்டுவேலைகளே கடமை, கணவன் சொல்வதே மந்திரம் என ஒழுகிவரும் மனைவியையும் அழைத்துக்கொண்டுவந்து, அவள் பாடிப் பரவசமாயிருந்த தோற்றத்தைக் காண்பித்தார். சங்கீதமென்ற பாஷையில் அவர்கள் கட்டுண்டார்கள்.

தாய்க்கு இப்போது அவள் சங்கீதத்தை அனுபவிப்பதல்ல இன்பம். வருஷங்களோடு ஏறிவரும் மகளின் வயதை அவள்நினைத்துக்கொண்டாள். அவள் சங்கீதபூஷணமாக வந்துவிட்டாள். ஆனால் ஆசிரிய பதவியோ கிடைக்கவில்லை. அவள் உழைப்பதுஎப்போது, கடன்தீர்வது எந்நாளில், திருமணஞ் செய்து பிள்ளைகுட்டிகளோடு கலகலப்பாய் உலவுவது எவ்வேளை என்ற கேள்விகள் தாயின்யோசனை ஆயின. அதுவே மனக்குழப்பமாய், பிரார்த்தனைக் குரல்கள் ஆயின தாய்க்கு. வீடுகட்டி மகளைப் படிப்பிப்பதற்காக தானும் கணவனும் வெறும் சம்பலோடு சோறுதின்ற நாட்களின் வேதனைக்கு ஆனந்தமயமான அறுவடைவரும் என மிக நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்தாள்.

அந்தவீடு, தன் கணவனின் வாழ்வின் நாட்களைக்குறைத்து வருகிறது என்பதை மனைவி அறிவாள். நித்திரையின் பிதற்றலிலும் மகளும், வீடும், கடனும்தான் அவரின் சொற்களாயிருந்ததை நெடுநேரம்வரை உறக்கம்வராது புரளும் மனைவியே அறிவாள்.

ஒருநாள் திருநாவுக்கரசர், இசைக்கல்லூரி ஆசிரியர் ஒருவரைத் தன்னுடைய வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.

வீட்டின் மூடிவைத்த கஷ்டங்களெல்லாம் மெல்ல மெல்லத் தன் முன் அனுங்குவதைக் கண்ட இராசம்மாவிற்குத் தன்னையறியாததோர் மனப்பாரம் நெஞ்சினுள் குடிகொண்டது. அவள் மனம் நொந்து போனாள்.

ஒரு வாரமாய் அவள் பாடவில்லை.

இருபத்தெட்டு வயதான தன் வாழ்வை அவ்வாரத்திலேதான் அவள் ஆழமாகச் சிந்தித்தாள். அனேக விஷயங்களை இழந்துவிட்டது போன்றதோர் ஏக்கம் நெஞ்சிலிருந்து சீறிற்று.

தன்னோடு படித்தவர்கள், தெரிந்தவர்கள் பலர் தன்னுடைய திருமணம் எப்போது என்று விசாரித்ததையெல்லாம் முன்பு அவள் கேட்டால் சினமடைவாள். ஆனால் அந்தச் சினமோ இப்போது பலவீனமடைந்து விட்டது.

அவளறிந்த பலர், அவள் வயதான பலர், அவள் படித்து விட்டு வந்து வீட்டினுள்ளிருக்கும் ஓராண்டுக்காலத்தினுள் திருமணமாகி, பிள்ளைகளோடு போனதை அவள் கண்டாள். அப்போதெல்லாம் அவளின் நெஞ்சம் உடைந்தாற் போல அவள் உணர்ந்தாளாயினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளவே இல்லை.

மகள் யோசித்திருப்பதைக் காணும்போது, பாம்பின் கால் பாம்பறிந்த மனநிலையில் தாய் கவலையுற்றாள். ஓரிரு நாட்கள் திருநாவுக்கரசரிடமும் இதனைச் சொன்னாள். தன்பெரிய கண்களால் மனைவியைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு சொன்னார் திருநாவுக்கரசர்.

''நீ இராசுவைப் பெத்தனியே தவிர அவளின்ரை மனம் உனக்குத் தெரியாது. அவளுக்கா கலியாணத்திலை ஆசையெண்டு நீ நினைக்கிறாய்? உனக்கென்ன தெரியும் அவளைப்பற்றி? அவளுக்கு சங்கீதத்தைப்பற்றித்தான் ஒரே எண்ணம். எப்பதனக்கு வேலை கிடைக்கும், தன்ரை ஞானத்தைப் பிறருக்கு ஊட்டலாம் என்டதுதான் அவளின்ரை ஒரே யோசனை. அந்த யோசனையையும் அவளுக்கு இனி இல்லாமல் செய்துபோடுவன் ... உனக்கு இதொண்டும் விளங்காது. போய் உன்ரை வேலையைப்பார். அவளுக்குத்தான் அடிபட்டுக் கொண்டு மாப்பிளைமார் வந்து நிக்கப்போறாங்கள்''

வெளியே நின்ற மனைவியோடு, உள்ளே நின்ற மகளும் அவர் சொன்னவற்றைக் கேட்டாள்.

மனைவி கணவனுக்கெதிராக எதிர்ச்சொல் பேசி அறியாதவள்; மகளோ இதைப்பற்றிப் பேசவே முடியாதவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இசைக்கல்லூரி ஆசிரியர் வீட்டிற்குவந்து அவளோடு நிறையக் கதைத்தார். அவளோ ஒப்புக்கு இரண்டொரு சொற்களைக் கதைத்துவிட்டுப் பேசாதிருந்தாள். வில்லி அவள் காலினுக்குக் கீழே வந்து வாலால் உரஞ்சிக்கொண்டிருந்தது.

அவள் ஒரு வாரமாய்ப் பாடாதிருக்கிருள் என்று திருநாவுக்கரசர் அந்த இசையாசிரியரிடம் சொன்னபோது அவருக்குக்கண்களில் தீட்சண்யம் பொங்க அவளுக்குப்புத்திசொன்னுர்.

''அடிக்கடி பாடிக்கொண்டு வந்தால்தான் குரலுக்கு நல்ல மெருகும், பிரகாசமும், பண்பும் ஏற்படும்; அழகாகவும், மதுரமாகவும் பாடவரும் பாடப்பாடத்தானே ராகம்வரும்!''

இராசம்மா ஒன்றுமே பேசாதிருந்தாள்.

'குரலுக்கு மெருகும் பிரகாசமும் வந்துதான் என்ன, மனதுக்கு நிம்மதியே இல்லாது இருக்கும் போது!'

இரண்டு வாரங்கள் கழிந்தபின், ஒரு திங்கட்கிழமை மிகவும் உற்சாகத்தோடு திருநாவுக்கரசர் மகளிடம் வந்தார்.

''இன்னும் ஒரு மாதத்துக்குள்ளை தங்கச்சிக்கு வேலை வந்திடும். நான் அதுக்குரிய எல்லா வேலையையும் இந்த ஒரு கிழமைக்குள்ளை பார்த்து முடிச்சுப்போட்டன்.

அந்த 'வேலைமுடிய' அவருக்கு மூவ யிரம்ரூபா வரை செலவாயிற்று என்பதை அவருக்குப்பணம் கொடுத்த தாமோதரம்பிள்ளையே அறிவார். எல்லாமாக இருபதிஞயிரம் ரூபா காசும், வட்டிப் பணமாக நாலாயிரம் ரூபாவும் திருநாவுக்கரசரின் பெயரில், தாமோதரம்பிள்ளை வீட்டுக் கணக்குப் புத்தகத்தில் எழுதிவைக்கப்பட்டிருந்தது.

அவள் படிப்பிக்கப்போன பதின்மூன்ரும்மாதத்தில் திருநாவுக்கரசர் திடீரென்று இறந்துபோனுர். அது நடந்துபோய் ஆறேழு மாதங்கள் கழியத் தாமோதரம்பிள்ளை அங்கே வந்தார். மெதுவாகக் கதையைத் தொடங்கிய அவர் தன்னுடைய இருபத்தி நாலாயிரத்துச் சொச்சரூபாவையும் தரும் படியும், அல்லது அவ் வீட்டையும் காணியையும் தன் பேருக்கு எழுதினுல், தான் ஆருயிரம்ரூபா தருவதாகவும், எதற்கும் ஒரு மாதத்திற்குள் வந்து தனக்குப்பதில் சொல்லும்படியும் சொல்லிவிட்டுப் போனுர். பிறகு மனமிரங்குபவர்போல ஒன்றரை வருஷங்களாய் அதைப்பற்றி எதுவுமே பேசாதிருந்தார்.

பலர் அவளிடம் அந்த வீட்டினைப்பற்றிக் கேட்டபோது கொஞ்சங்கூட மனதிலே பசை இல்லாமல் அவள் வெற்றுச்சிரிப்புச் சிரித்தாள்:

''என்ன இருந்தென்ன? போயென்ன?''

அவர்கள் போனபின் வீடு வந்து, தன்அறைக்குள் நுழைந்தவள் அடைக்கலம் குருவிகள் கீச்சிட்டுப்பறந்து கொண்டிருப்பதைக்கண்டு மனதிற்குள் ஏதோ தோன்றியவளாய் ஒரு கடுதாசிப் பெட்டியை எடுத்து, முன்புறம் சதுரமாக வாசல் வெட்டி யன்னற்கம்பிகளில் கட்டிவிட்டாள்.

அந்தக் குருவிகள் பிறகு சந்தோஷமாக அவ் வீட்டிற்குள் குடியிருந்து கீச்சிட்டு ஒழுங்கோடு வாழ்ந்தன.

'நான்தான் சந்தோஷமாய் இந்த வீட்டிலை இருக்கமுடியவில்லை. நீங்களெண்டாலும் சந்தோஷமாயிருங்கோ' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்ட அவள் முணுமுணுத்தாள்.

''நான் ஒரு வெறும் மடைச்சி. முப்பத்திநாலு வயதாப் போச்சு. லயமும் சுருதியுந்தான் எனக்கு எல்லாமெண்டு பொய்சொல்லிக் கொண்டு, என்னையே ஏமாற்றி, கடைசியிலை எல்லாத்தையும் இழந்துபோய், இப்ப கருகின மரக்கொப்பாய் நிக்கிறன்''

சரியாக ஆறு மாதங்களின் பின்பு, இப்போதும் அதே போல இராசம்மா மேசையில் இரு முழங்கைகளையும் ஊன்றிக் கைகளால் நாடிக்கு ஆதாரம் கொடுத்தபடியே தனக்குச் சிறிது தள்ளிவைக்கப் பட்டிருந்த தம்புராவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.'வேலவரே உமைத்தேடி ஒரு மடந்தை விடிய

## விமர்சனக் கட்டுரைக்குப் பரிசு

இம்மாத ''மலர்'' சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள, கதை, கவிதை, கட்டுரை முதலியவற்றைப் படித்து முடித்தபின் இவற்றுள் சிறந்த படைப்பு எது என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அதையிட்டு ஒரு விமர்சனம் எழுதுங்கள். உங்கள் கட்டுரை ''மலர்'' சஞ்சிகையின் இரண்டு பக்கங்களுக்கு மேற்படக்கூடாது. (பூல்ஸ்காப் தாளில் 4 பக்கம்) கட்டுரை இம்மாதம் 28ம் திகதிக்கு முன்னர் எங்களுக்குக் கிடைக்கவேண்டும். தெரிவு செய்யப் படும் சிறந்த கட்டுரைக்குப் பரிசு ரூபா 25/– வழங்கப்படும்.

கட்டுரை அனுப்பப்படவேண்டிய முகவரி:-

ஆசிரியர் ''மலர்''
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மளவும் காத்திருக்கிற வகையென்ன?' என்ற பாட்டு நெஞ்சினுள்ளே தாள சுத்தம் தவறாது கேட்டுக் கொண்டிருந்தது.

அவள் மேசையிலிருந்த கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அவன் வரும் நேரம்; ஐந்தரைமணி.

வீட்டின் பின்புறமாகப் போனாள். அவள் வருவதற்கென்றே காத்திருந்தவன் போல ஒழுங்கையில் நின்ற அவன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான். கறுப்பும், சிவப்புமான கோட்டுச் சட்டை போட்டிருந்த அவன் மீசையைச் சற்று மொத்தமாக விட்டிருந்தான்.

அவளை வெட்கமின்றி, உடல் முழுவதும் கண்களால் அவன் தடவிப்பார்க்கிறான் என்பதை உணர்ந்த அவள், தன்னை மீறிய வெட்கத்தினால் தலை குனிந்தாள்,

## 3

பள்ளிக்கூடத்திற்குப்போன அவளிற்கு ஒரு எதிர்பாராத அதிர்ச்சி காத்திருந்தது.

ஒருமாத காலம் முடிய அவளிற்குக் கொழும்புப் பாடசாலைக்கு மாற்றம் வந்திருக்கிறது.

அவள் முற்றாய் மனம் ஒடிந்து போனாள். அவனுடைய புன்னகை பொலிந்த முகம் கண்களுக்குள் வந்து நின்றது. அந்த வாகான தேகம். முன் கவிந்த தலைமயிர். புன்னகை. கூசும் கண்கள். முப்பது வயதிற்குள்தான் அவனுக்கு இருக்க வேண்டும். அவன் அவளை ஒவ்வொரு நாளும் பார்த்துப் புன்னகை செய்திருக்கிறான். பட்டுப்போயிருந்த அவளுடைய மனதினைப் பசுமைபெற, துளிர்ப்புற வைத்தவை அவனது புன்னகையும், வசீகரம் பொதிந்த பார்வைகளுந்தான். அவளது நெஞ்சம் ஓயாது சஞ்சலம் கொண்டு தவித்தது. ஒப்பிற்குப் படிப்பித்தாள், கதைத்தாள், நடமாடித்திரிந்தாள்.

எட்டாம் வகுப்பிற்குள் போனவள், தலையிடி பொறுக்காது மேசையில் சாய்ந்திருந்ததைகண்ட அவளது மிகப்பிரியமான மாணவி ஒருத்தி அவள் அருகே வந்து, தன் பிளாஸ்கைத்திறந்து தேனீரைக் கோப்பைக்குள் ஊற்றினாள்.

அந்த சத்தத்தில் தலைநிமிர்ந்தாள், இராசம்மா.

மனம் அலுத்திருந்ததாயினும், அவ்வேளையிலே அந்தப் பிஞ்சுச் சிறுமியின் வாத்சல்யத்தைக் கண்ட இராசம்மாவின் கண்கள் பனித்தன. அவள் தளதளத்துக்கதைத்தாள்.

''கடவுளே என்னிலை இரங்கவில்லை. நீ இரங்கித்தான் என்ன பிரயோசனம்?''

விரக்தி பட்டென்று சொற்களாய்த் தெறித்தது.

அவள் அந்தப்பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்த போதே அவளை எல்லோரும் ஒருமாதிரியாகத்தான் பார்த்தார்கள். அவளதுமௌனமான, யாரோடும் ஒட்டிப்பழகாத போக்கு. அவளைப்பற்றி அங்கே பல கதைகளையே கிளப்பியது 'அவளுக்கு ஒரு காதலன் இருந்து அவளை ஏமாற்றிவிட்டானாம்' அதனால் தான் அவள் இப்படிஒரே விரக்தியாயிருக்கிறாளாம்'

இராசம்மா அவைகளைக்கேட்டு மனதார வெதும்பினாள்.

ஒருநாள் அவளைவிட வயது குறைந்த ஆனால் திருமணமாகி கர்ப்பவதியான ஆசிரியை றேந்தை பின்னிக்கொண்டிருந்ததை இராசம்மா தன்னை மறந்த கவனத்துடன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்ட ஆசிரியை சொன்னாள்:

''நீங்க இதைப்பார்த்து என்ன பிரயோசனம் மிஸ். குழந்தை இருக்கிறவை பார்த்தாலும் பயனிருக்கு''

அந்த ஆசிரியை கையில் வைத்திருந்தறேந்தை ஊசியைப் பழுக்கக்காய்ச்சி தன் இதயத்தில் ஆழக் குத்தியது போல இராசம்மா துன்பத்தால் நெகிழ்ந்து நாக்கைக்கடித்துக்கொண்டு அன்று லீவு எடுத்து மத்தியானத்தோடு வீட்டிற்குப் போய் விட்டாள்.

'முப்பத்திநாலு வயதான எனக்கா இனித் திருமணமாகிக் குழந்தை பிறக்கப்போகிறது?'

சோகந் ததும்பும் முகத்தோடு இராசம்மா பூட்டிய அறையினுள் நின்று நிலைக்கண்ணாடிமுன் தன் உருவத்தையே பார்த்துக்கொண்டு மனம் பொருமினாள்.

அந்த வட்டமான முகம் காய்ந்து கருகியிருந்தது. கண்களைச்சுற்றி, அவளின் அழகிற்கு அந்தரங்கமான கண்களைச்சுற்றிக் கருவளையம் பூரணமாய் விழுந்துவிட்டது. மாநிறத்தோலும் இலேசாகச் சுருங்கி வதங்கிய மாம்பழத் தோலெனத் தெரிகிறது. தன்னையறியாது, அந்தக் கண்ணாடிமுன் நின்று அவள் ஒவ்வொரு உடையாகக்களைந்தாள்.

படிக்கும் வேளையில் கண்ணாடி முன் நின்று தன் பொங்கும் இளமையின் அழகை மிக ரகசியமாக அவள் பார்த்து ரசித்து பெருமிதமும்; கர்வமும் அடைந்திருக்கிறாள். இன்று அதே உடலை, அதே கண்களால் பார்க்கிறாள். வாசமும், வண்ணமும், பசுமையுமிழந்த பூவென அவள் உடல் வாடிப்போய் அவள் கண்முன்னே தெரிகிறது.

அவள் கண்களில் நீர் முட்டிற்று.

அவளின் இளமை, அழகு, வாழ்வு யாவுமே போய்விட்டதா? அவள் கிழவியாகவே போய்விட்டாளா? இந்த உடலை, நாற்பது வயதுக் கோலத்தை யார்தான் இனி விரும்பப்போகிறார்கள்?

இந்தச்சம்பவம் நடந்து ஐந்து மாதங்களின் பின்னர்தான் அவனை இராசம்மா கண்டாள். அந்தப் பசுமை தலையெடுக்க முன் அவள் வாழ்விலே ஆசிரிய இடமாற்றம் என்று இன்னொரு சோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர், அந்த மாற்றத்தைத்தான் ஒருவாறு தடுத்து நிறுத்துவதாய் அவளுக்கு ஆறுதல் சொன்னார்.

இராசம்மாவின் மனதிலே அன்று ஓர் புதிய துணிவு பிறந்தது. அன்று மாலை அவனிடம் எப்படியும் முழு விஷயமும் கதைத்து, தன் திருமண விஷயமாக அவனிடம் ஒரு முடிவு கேட்டுவிட வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தாள்.

மாலையில் அவள் மிக்க நிம்மதியோடு வீட்டிற்குச் சென்றாள். அந்த வெறுமையான நீள்சதுரத்தைப் பார்த்து மனதாரச் சிரித்தாள்.

'உன்னுடைய இடம் விரைவில் நிரம்பிவிடும்'

வாசற்படியில் 'வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்' என்ற முருகனின் கீழே, தலையிற் கைவைத்தபடி தாய் இருந்தாள், சோகவே உருவாக.

இராசம்மாவின் நெஞ்சிலே முள் செருகிற்று.



''என்னம்மா, இது?''

''தாமோதரம்பிள்ளை வந்தது. மூன்று நாளைக்குள்ளே ஒரு வழி செய்யட்டாம். அல்லது காணி ஏலத்திலை போடுமாம்'' தாயின் கண்கள் நீர் சொரிந்தன; திடீரென விம்மினாள்.

இராசம்மா ஒன்றுமே பேசாதபோதும் கலக்கமுறவில்லை. மீண்டும் இந்தக் காணியை ஈடுவைத்துவிட்டுத் தாமோதரம்பிள்ளையின் முகத்தில் காசை வீசி எறிந்து விட முடியாதா?

அறைக்குள் நுழைந்தவள் மேசையில் குடையையும், புத்தகங்களையும் தொப்பென்று போட்டுவிட்டு, யன்னற் கம்பிகளைப் பார்த்தாள் கம்பியில் கட்டப்பட்ட பெட்டிக்குள் அடைக்கலம் குருவிகள் கீச்சிட்டுக் கொண்டிருந்தன.

அவள் அவைகளைச் சந்தோஷமாகப் பார்த்தாள். பிறகு தூசு படிந்திருந்த தம்புராவை துண்டினால் தட்டி, துப்புரவாக்கி அறையை ஒழுங்காக்கினாள். வாய்க்குள் பைரவி மெல்லக் கீதமாய் எழுந்தது.

அவள் மாலை நேரத்திற்காகக் காத்திருந்தாள். ஒவ்வொரு நிமிஷமும், யுகமெனத்தேய்ந்து அந்த ஐந்தரை மணி வரவே, அவள் பின்புறமாகப் போனாள். சொல்லிவைத்தாற்போல அவன் வந்து நின்றான். அந்த வாகான தேகம். நீலமும் பச்சையும் கோடிட்ட சட்டை. கருமீசை. முன்குவிந்த மயிர். அவன் வடிவம் எவ்வளவோ ஆண்டுகளாய் அவளுக்குப் பழக்கமானாற்போல ஒரு உணர்வு அவளுக்கு. அவனோடு நீண்ட நெடுநாளாய்ப்பழகி உணர்ந்தவள் போல அவள் மனதிலே அவனோடு பழகுவதற்கு கூச்சமே இல்லாது போயிற்று.

ஒருத்தி நெற்றியின் நடுவிலும், உச்சித் தொடக்கத்திலும் குங்குமதிலகங்கள் அணிந்திருந்ததை இராசம்மா ஆசையோடு நோக்க அவள் ஏளனமாய் இராசம்மாவைப்பார்த்துச் சிரித்தாள். இனி அவள் சிரிக்க ஒரு சந்தர்ப்பந்தான் வருமா? அவள் மனம் துணிந்து வேலியோரமாய் நடந்தாள்.

அவனும் அவளுக்காக எதையோ சொல்லக் காத்திருப்பவன் போல துடிக்கும் கண்களோடு நின்றான்.

இருவரும் மௌனமாய் எதிர்கொண்டனர்.

மூச்சுகள் தகித்தன.

அவனே செருமினான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்ன?''

'' ... ... ''

அவன் உதடுகளை நாவினால் தடவினான். அவள் பேசாது, சொல்லவந்ததை மறந்து நின்றாள். கண்கள் சிமிட்டிப் படபடத்தன. அவன் அவள் கைகளைப் பற்றுகையில் அவள் உடல் நடுங்கிற்று. அவன் விரலை இராசம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். இரு மோதிரங்களை அணிந்திருந்தான். அவளுக்கு நெஞ்சு பகீரென்றது. இதென்ன அடையாளம்?

அவன் அவளைக் கண்களுள் பார்த்தபடி சொன்ஞன்.

"நாளைக்கு ஊருக்குப் போறன். இரவைக்கு மட்டும், இன்றைக்கு மட்டும் வரட்டுமே? பிறகு வரயில்லை"

கெஞ்சிய குரலில் அயோக்கியத்தனம் முக்காடிட்டு நின்றது. அவள் அவன் கைகளை நெருப்புப்பட்டாற்போல உதறிவிட்டுப் பின்வாங்கி ஓடிஞள். நெஞ்சு துடித்துக் கலங்கிப் படபடத்தது. உயிரே தடுமாறிச் சோர கட்டிலில் வந்து குப்புறப் படுத்துக்கிடந்தபடி விசும்பி விம்மி வாயைப் பொத்திக்கொண்டு அழுதாள். விடியும் வரை அவள் அழுகை ஓயவேயில்லை ... ...

## 4

வீங்கிய கண்களுடன் முகத்தைக் கழுவிக்கொண்டு அறைக்குள் நுழைந்தவள் அந்த அடைக்கலங்குருவிகளையும், தம்புராவையும், மேசையையும் பார்த்தாள். வெளியே வந்தவள் சுவரை நிமிர்ந்து பார்க்க விரும்பாது நடுஅறைக்குள்ளால் பின்புறம் போஞள்.

அங்கே தாய் நின்ருள்.

இராசம்மா முகத்தைத் திருப்பிக்கொண்டு சொன்ஞள்:

''அம்மா, தாமோதரம்பிள்ளையரிட்டை இந்த வீட்டையும் காணியையும் எடுத்து எங்கடை கடனை முடிச்சுக்கொண்டு மிச்சக் காசைத் தரச் சொல்லு. அடுத்தகிழமையே கொழும்புக்குப் போய் வீடு எடுக்கவேணும். அங்கைதான் நான் படிப்பிக்கப்போறன்.''

உறுதியாகச்சொன்ன மகளை ஒன்றுமே விளங்காத, தாய் கண்கள் கலங்கப்பார்த்துக்கொண்டு நின்ருள்.

அடைக்கலம் குருவிகள் கீச்சிட்டுக்கேட்டது.

விரைவில் ''மலர்'' ஏட்டில்
ஆரம்பமாகவிருக்கும்
தொடர் அம்சங்கள்.

(i) மகாவம்சக் கட்டுரைகள் (சரித்திரம்)
(ii) முத்தமிழ் ஓவியம் (இலக்கியம்)
(iii) விருத்தாந்த சித்திரம் (நகைச்சுவை)
(iv) கைத்தொழில் கட்டுரைகள் (பொருளாதாரம்)

முழுவிபரங்களும் அடுத்த இதழில்

# சமநீதி

சர்வானந்தன்.

மரத்தில் இலைக்குச் சமமாக
மலர்கள் நிறைய மலர்ந்தன;
சிரத்தை நிமிர்த்தி மரமது
சிறகு கட்டிப் பறந்தது.

மலர்கள் நிறைந்த பெருமிதம்
மரத்துக்(கு) இருக்கும்; ஆனுலும்
அலர்ந்த பூக்கள் அதனுலே
அதுவும் பித்தம் கொண்டதுமேன்.

பூவின் வாசப் புளகத்தால்
புதிய இளமை கொண்டது
ஓவென்(று) உளமும் பொங்கிட
உலகை மரமும் மறந்தது.

ஆயின் உலக இயற்கைதான்
அதற்கு மட்டும் வேருமோ?
காயும் கதிரோன் வீச்சிஞல்
கருகும் மலர்கள் பலதாகும்.

தேவன் பாதம் பூசிக்க
தெரிந்து எடுத்த மலராக
தேவை என்றே பண்டாரம்
தெரிந்து கொய்தான் மலர்களை.

மலரின் அழகு மறைந்ததனுல்
மரத்தின் அகந்தை மாண்டது;
சிலரின் உண்மை தெளயாமை
சின்ஞள் வாழ்ந்து அழிந்துவிடும்.

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பில்லா இறந்தகாலம்

எம். ஏ. நுஃமான்.

வீதியிற் போகும் போதுன்
விழிகளைப் பார்த்தேன்: என்றன்
காதலீ, நீயோ என்னைக்
காணாது போற் செல்கின்றாய்!
மாதங்கள் சிலமுன் அன்பால்
மகிழ்ந்து நாம் கலந்திருந்தோம்,
பேதங்கள் அற்றோம் என்று
பேசினோம் பிணைந்து நின்றோம்.

வெறுப்புற்று வாழ்தல்; அன்பே
இயற்கைக்கு விரோதமாகும்
வெறுப்புறும் போதே நாங்கள்
துன்பத்தில் வீழு கின்றோம்
விருப்புறல் அன்பு செய்தல்
இயல்பான வேட்கை யாகும்
விருப்பினை அன்பைக் கொன்றால்
துன்பமேமிகுந்து போகும்.

புன்னகை ஒன்று செய்தேன்,
பூவைநீ வருதல் கண்டு.
என்னகை மலரைக் கண்டாய்
எனினும் நீ திரும்பிச் சென்றாய்.
முன்னெல்லாம் அன்பில் நாங்கள்
மூழ்கினோம், நினைக்கும் போதே
இன்புற்றோம் முறுவல் பூத்தோம்
இதயத்தில் மலர்ச்சி கொண்டோம்.

என்விழி களினைக் காண
இயலாது திரும்பு மாறும்
என்முறு வலினை ஏந்த
இயலாது குனியு மாறும்
உன்உளம் பலம்குன் றிற்றா?
உண்மையில் அன்பு செய்த
முன்னைய நிலையை மூட
முனைந்தனையா இப்போது?

இன்று நீ அவற்றை எல்லாம்
ஏன் அழிக் கின்றாய்?
நாங்கள்
சென்றநாள் வாழ்ந்ததெல்லாம்
செயற்கையா? பொய்யா? என்றே
இன்றென திதயத்துள்ளே
எழுந்தன வினாக்கள்; உண்மை
ஒன்றுபின் பொய்யாய் மாறில்
ஓ! அது பெரிய துன்பம்!

இறப்புற்ற கணங்க ளெல்லாம்
உண்மையில் இறப்பதில்லை.
பிறப்புற்றெம் வாழ்க்கை ஏட்டின்
பின்புறம் தொடர்ந்து நிற்கும்
மறப்புற்று வாழ்தல் பொய், அம்
மணித்துகள் களினை — நாங்கள்
இறப்புற்ற போதும் அந்தக்
கணங்களோ இறப்ப தில்லை·

''புதுக் கவிதை''யில் மிகவும் பற்றுக்கொண்ட கவிஞர் நுஃமான் ''கவிஞன்'' என்னும்
காலாண்டு இதழின் கௌரவ ஆசிரியராக இருப்பதுடன் கவிதைபற்றி மிகச் சிறப்பான கட்
டுரைகள் பலவும் எழுதியுள்ளார். கல்முனை தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய உறுப்பின
ரான இவர் ஈழத்தின் கவியரங்குகள் பலவற்றில் பங்குபற்றி, நியாயமான பெருமையையும்
மதிப்பையும் சம்பாதித்துள்ளார். அவ்வப்போது இலக்கிய விமர்சனக் கட்டுரைகளும் எழுதி
வருகிறார்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மத்திற்காகப் போராடுக!

**பீ. மரியதாஸ்.**

கலை — இலக்கியம் பற்றித் தமிழ் நாட்டைவிட ஈழத்தில் ஓரளவிற்குத் தெளிவான கண்ணோட்டம் இருந்த போதும் அடிக்கடி தடம்புரட்டும் முயற்சிகளைக் காண்கிறோம். பரவலான வகையில் சரியான நோக்கம் பிரதிபலிக்க முடியாமைக்கு குரலை நசுக்கும் பணநாயகத்தின் முரட்டுப் பிடிதான் காரணம் என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை. இருட்டடிப்பு, பூரணமாகச் சிதைத்தல் போன்ற நானாவித தகிடு தத்தங்களால் கலை—இலக்கியம் பற்றிய விஞ்ஞான பூர்வமான கருத்துக்கள் நசுக்கப்படுகின்றன. இந்தத் தீமையை சகல உபாயங்களைக் கொண்டும் எதிர்க்க வேண்டியது இத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள் சகலரின் கடமையாகும்.

கலை—இலக்கியத்தை வளர்க்கவும், இத்துறைக்குத் தொண்டாற்றவும் புதிய பத்திரிகை ஒன்று துளிர்க்கும்போது சரியான கருத்துக்களை அதன் வாயிலாக வெளியிடுவது அதன் ஆரோக்கியத்திற்கும், அது வரித்துக்கொண்ட பணிக்கும் உரமிடுவதாக அமையும். இந்த நாட்டில் எல்லாம் உண்டு—சகல விதமான சுதந்திரங்களும் தாராளமாகக் கிடைக்கும் சந்நிதானம்—என்றெல்லாம் இந்நாட்டு பத்திரிகைகள் உரக்க ஓலமிடுவதுண்டு. ஆனால் உண்மையில் இவை நச்சுக் குரல்கள். இந்த நாட்டின் சனத்தொகையில் மிக்ச் சிறுபான்மையான—அதுவும் நாட்டின் உருவாக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் காத்திரமான எதுவித பங்கையும் நல்காத-மிக மிகச் சிறுபான்மையோரின் நலனுக்காகவே இவை ஓலமிடுகின்றன. இதனால்தான் நடைமுறைப் பாடபோதனையாகக் கொண்டு முரண்பாடுகளின் முடிச்சவிழ்க்கும் வழிகளின் அனுசரணையோடு, வரலாற்றின் போக்கிற்கேற்ப சரியான கருத்துக்களைக் கூறும்போது இச்சுதந்திரச் சங்குகள் அவைகளின் குரல்களை நசுக்கிவிடுகின்றன.

இது சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக உலகின் பொது நியதியாயிருந்தது. இந்நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலிருந்து சிறிது சிறிதாக மாறிக்கொண்டு வரும் ஒரு போக்கு. பொய்மையை-நடைமுறையில் இல்லாததை — வாழ்க்கையில் மருந்துக்கும் கிடைக்காதவைகளை — தத்துவமாக மாற்றி உலகின் ஜீவகளைக்குப் போராடும் மக்களை ஏமாற்றும் போக்கு இது. எழுத்தில் எல்லாம் இருப்பதும் நடைமுறையில் பெரும்பான்மை மக்களிடம் அதில் எதுவுமே இல்லாதிருப்பதுமே இதன் சாராம்சம். இந்த உண்மையை சமுதாய வளர்ச்சியிலும், மாற்றத்திலும் முக்கிய பங்கு வகிக்கும் கலை - இலக்கியவாதிகள் சரியான முறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும். இன்று நம் நாட்டில் வெளிவரும் சிறுகதைகளும், கவிதைகளும், பிறவும் தொகையில் பெரிதாக இருந்தபோதும்இலக்கியத்துறைவளமாக வளரவில்லை என்ற கணிப்பு உண்டு. இதற்கு முக்கிய காரணம் மேற்கூறிய பொய்மை வாதப் பேயின் மாயவலையில் இலக்கிய கர்த்தாக்கள் சிக்கிக் கொள்வதுதான். எழுத்தார்வம் துளிர்க்கின்றபோதே வாலிபத் துடிப்பையும் பணமாக்கிக் கொள்ளச் சதிராடும் விலைமகளைப் போல இப் பொய்மைத் தத்துவத்தின் ஊது குழல்களே அந்த ஆர்வத்தை வீணடித்து, வழிதவறச் செய்கின்றன. நான் பள்ளி மாணவனாக எழுதப் பழகுபவனாக வளரிளம் பருவத்தின் வாயிலில் நிற்போனாக இருந்தபோது இவ் வூது குழல்கள் கடிதமெழுதிக் கதைகள், கட்டுரைகள் கேட்டதுண்டு. நானும் தெரியாத்தனமாகச் சில எழுதியதுண்டு. அவைகளைப் பிரசுரித்து இவை உற்சாக மூட்டின. ஆனால் உலகையும் என்னையும் புரிந்துகொண்டவனாக நான் வளர்ச்சியடைந்தபோது — என்னில் இருந்த கோணல்களைத் திருத்திக் கொண்டபோது இவை எனக்குப் பெப்பே காட்டின முகஞ்சுளித்தன. இது இந்த நாட்டில் தமிழில் எழுதும் ஒவ்வொரு இளம் எழுத்தாளனுக்கும் ஏற்பட்டிருக்கக் கூடிய — ஏற்படவிருக்கும் கசப்பான அனுபவம். இந்தச் சதியைப் புரிந்து கொள்வது ஒவ்வொரு கலை — இலக்கியவாதியின் வளர்ச்சியாகும். இதனைப் புரியாமலிருப்பவர்கள் எழுதிக் குவிக்கலாம். எல்லா பத்திரிகைகளிலும் எழுத்தாளர்களாக மினுங்கலாம். தன்னையறியாமலே பொய்மைத் தத்துவத்தின் — கேவலத்தின் — மனிதாபிமானத்தின் புதை குழியின்—மடியில் வீழ்வதுதான் இவர்களின் கதி!

நல்லவைகளையும், சரியானவைகளையும் சிதைக்கும் இக்கைங்கரியம் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றது. எழுத்தாளன் துரதிஷ்டவசமாகவும், எதிர்பாராதவாறும் இதில் சிக்கிக் கொள்கிறான். இதனால் என்னதான் உரக்க உரக்க இவை சுதந்திரம் பற்றி பம்மாத்து பாடினாலும் உண்மையில் எழுத்தாளனின் ஆத்மாவின் குரல் நசுக்கப்படுகிறது. இலக்கியத்தின் உயிர் சிதறடிக்கப்படுகின்றது.

ஹட்டன் உயர்கல்விநிலையத்தில் கடமையாற்றும் பீ. மரியதாஸ் அவர்கள் ஆழ்ந்தநோக்குள்ள இலக்கியவிமர்சனக் கட்டுரைகளை எழுதிப்புகழ் பெற்றுள்ளார். சிறுகதை கவிதை முதலியனவும் எழுதிவருகிறார். 'அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு, கலையும், இலக்கியமும் உதவவேண்டும் என்ற திட்டவட்டமான கொள்கையுடையவன் நான்' என்று பெருமையுடன் கூறுகிறார் இவர்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசு பெறும் விமர்சனக் கட்டுரை

ஜனவரி ''மலர்'' விமர்சனக் கட்டுரைப் போட்டியில், ரூ. 25/– பரிசு பெறும் கட்டுரை

### ''எனக்குப் பிடித்தது''

எழுதியவர்:- மு. ஹ. சேகு இஸ்ஸதீன்
மட்/காத்தாங்குடி இல. 5 அ. த. க. பாடசாலை
காத்தாங்குடி.

புதிதாகத் துளிர்க்கும் பத்திரிகைகள் இத்தகைய திட்டமிட்ட மாபெருஞ் சதியை முறியடிக்க வேண்டிய பணியைக் கடமையாக வரித்துக் கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். இலக்கியத்தின் ஆரோக்கியத்திற்கான விளைநிலத்திற்காக மட்டுமல்ல இந்த நாட்டு மனிதனின் சுதந்திர மூச்சுக்காகவும் இது அவசியமாகின்றது. தெளிவானதும், விஞ்ஞான பூர்வமானதுமான கண்ணோட்டத்தை வளர்த்து விடுவது இத்தீமையை எதிர்க்கும் ஆயுதமாக இருக்கும். நசுக்கப்படும் மானிதத்தின் மீட்சிக்காகவும், மனித தர்மத்தின் உயர்ச்சிக்காகவும் உரக்கக் குரல் எழுப்புவது இன்றைய நியாயத்தின் உடனடித் தேவை. பிற நாடுகளில் எழுத்தாளர்கள் தீமைகளைக் களையப் பேனையை மாத்திரமன்றி துப்பாக்கியையும் ஏந்தியதற்கு உதாரணங்கள் பல உண்டு எழுத்தாளன் சமுதாயத்தின் நிர்மாண கர்த்தா; புணருத்தாரணம் செய்பவன். ஆகவே கண்முன்னால் -திட்டமிட்டுத் தனக்கும், தான் வரித்துக்கொண்ட பணிக்கும் தீமை செய்வதை முறியடிப்பதிலும், அம்பலப்படுத்துவதிலும் தன் பங்கைச் செலுத்துவது இன்றியமையாதது.

மக்களின் வாழ்க்கையை – முரண்பாடுகளை – பிரச்னைகளை – போராட்டங்களை நுணுக்கமாகக் கிரகித்து, கலையாக்கி, மக்கள் வாழ்க்கையை உயர்ந்த மட்டத்திற்கு உயர்த்தும் இலக்கியத்தைக் கையாள்பவன் எழுத்தாளன். இத்தகைய ஒருவன் உலகின் ஜீவகளைக்குப் போராடுபவர்களினதும், உரமிடுபவர்களினதும் பக்கத்திற்குச் செய்யப்படும் அநீதியைக் கண்டு வாளாவிருக்க முடியாது. அதே போன்று மனித தர்மத்தின் குரலை நசுக்கும் வஞ்சகத்தையும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. இலக்கியவாதி மானிதத்தின் மீட்சிக்காகவும், உயர்ச்சிக்காகவும் பாடுபடுபவன். அதில் ஆத்மாவின் பெருமிதம் உண்டென்று கருதுபவனென்றால் உடனடியாக இந்தக் கடமையைச் செய்து முடிக்க வேண்டும். பேனா யுகவாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமையுள்ளதென்றால் மானிதத்திற்காகவும், மனித தர்மத்திற்காகவுமான இப்போராட்டம் நிச்சயமாக வெற்றி பெற்றே தீரும். இத்தகைய நன்நோக்கோடும், திடசித்தத்தோடும் மனித தர்மத்திற்காகக் குரலெழுப்புவதோடு, அதனை நசுக்கும் சக்திகளை அம்பலப்படுத்தி அகற்றும் தீரத்தோடும் " மலர் " வெற்றி நடைபோட வேண்டுமென்று வாழ்த்த விரும்புகிறேன்.

*

# வாழ்வுக் கடலினிலே!

ஆயிர மாயிரம் வலைகள்!
அந்தோ! வாழ்வுக் கடலில்...

அன்னை வீசும் பாசவலை
அன்புக் கரைக்கு இழுக்கிறது!

கன்னி வீசும் அழகுவலை
காதற் துறைக்கு அழைக்கிறது!

உற்றார்வீசும் உரிமைவலை
உறவுக் கரைக்கு இழுக்கிறது!

தோழர் வீசும் நட்புவலை
துணிவுத் துறைக்கு அழைக்கிறது!

*

அந்தோ! வாழ்வுக் கடலில்
ஆயிர மாயிரம் வலைகள்...

ஆசை வீசும் மோசவலை
அதிக தூரம் அலைக்கிறது!

காலம் வீசும் கோலவலை
கட்டழ கைக்கவர்ந் தெடுக்கிறது!

காலன் வீசும் மரணவலை
கழுத்தை மெல்ல இறுக்கிறது!

உடலைக் கௌவும் நோய்வலையோ
ஓர்கோடி வேதனை அளிக்கிறது!

*

ஆயிர மாயிரம் வலைகள்!
அந்தோ! வாழ்வுக் கடலில்...

—கருணை யோகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து ரத்தினங்கள்

அமைதியை விழுங்கிய காற்றினூடாக, அந்தக் கிராமத்தின் இருதயக்குரல் இருண்ட நடுநிசியிலும், மினுமினுக்கும் கைவிளக்குகளின் அசைவினில் அடிநாதமாகத் தெரிகிறது (செ.யோகநாதன் — "சோளகம்".)

*　　*　　*

அவரது சடலம் கிடத்தப்பட்டு, வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது. தலைப் பக்கத்திலே ஒரு குத்துவிளக்கு, கால்பக்கத்திலே கண்ணீரும் கம்பலையுமாக அவர் மனைவி — சிவபாக்கியம். ஒன்று எரிந்துகொண்டிருந்தது. மற்றது புகைந்தபடி இருந்தது (சொக்கன் — "உறவுமுறை")

*　　*　　*

மருமகள் கொண்டுவந்து வைத்த சோற்றைப் பிசைந்து உருட்டி உருட்டி, பொந்துக்குள் கூழாங்கற்களை வீசுவதுபோல, வாய்க்குள் போட்டுக் குதப்பும்போது, தாடையும் மீசையும், ஒழுங்கு இல்லாமல் நெளிந்து வளைந்தன (என். எஸ். எம். இராமையா —"வேட்கை")

*　　*　　*

கனகம் எங்கள் கிராமத்துப் பெண்தான். நீரின் இடைமட்டத்தில் ஆடும் பாசிக் கொடியைப்போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டுதான் அவள் நடப்பாள். (வ. அ. இராசரெத்தினம் — "தோணி"),

*　　*　　*

கண் பார்த்த திக்கில் ஆகாயத்தின் இருண்ட நீலத்தில், இரண்டொரு நட்சத்திரங்கள் மின்னின, பெரிய விளையாட்டு மைதானத்தில் நாலைந்து பள்ளிச் சிறுவர்கள் நிற்பதுபோல. (தெளிவத்தை ஜோசப் — "அது").

*　　*　　*

இரவின் அமைதியில் நிலையிழந்து உலகம் கட்டுண்டிருக்கும் வேளை. தனித்த ஒருத்தியாக, நினைவில் விரித்த வலையில் என்னை யானே சிறையிட்டுக்கொள்ளுகிறேன் (யாழ்வாணன்— "மொட்டை").

*　　*　　*

அந்தப் பெண் தன் கையில் இருந்த பையிலிருந்து ஒரு சாணளவு கைக்குட்டையை எடுத்துத் தன் கண்களை லேசாக ஒற்றிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்தாள். கண்ணீர் பட்ட இடங்களில் அவள் முகத்தில் பூசியிருந்த வாசனை மா அழிந்திருந்தது! ('இலங்கையர் கோன்' — "அனுதை").

---

### ஈழத்து எழுத்தாளர் வெளியிடும் நூல்களுக்கு இலவச விளம்பரம்

ஈழத்து எழுத்தாளர்கள், தனிப்பட்ட முறையில் ஈழத்தில் வெளியிடும் நூல்களுக்கு "மலர்" சஞ்சிகையில் இலவசமாக விளம்பரம் வெளியிடப்படும். இவ்வாறு விளம்பரம் பெற விரும்பும் எழுத்தாளர்கள், தாங்கள் வெளியிடும் நூலின் ஒரு பிரதியுடன் விண்ணப்பிக்கவேண்டும். 1-1-70 முதல் வெளிவரும் நூல்களுக்கு மட்டுமே இத்திட்டம் அமைவதாகும்.

—ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு அனுபவம்

கலைக்கதம்ப நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூபா 5/– டிக்கட் எடுத்துக்கொண்டு சென்றிருந்தேன். அங்கே பற்பல இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. நிகழ்ச்சி போரடித்ததால் வெகுநேரம் இருக்க முடியவில்லை வெளியே வந்து விட்டேன்.

பஸ் ஸ்டான்டில் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. அங்கே பூவரசமரம் ஒன்றின்கீழ் ஒரு சிறு கும்பல் கூடியிருந்தது. ஏதோ வாத்திய இசையும் கேட்டது. மெல்ல அக்கூட்டத்தில் கலந்தேன். ஒருபிச்சைக்காரப் பையன் அநாயாசமாக ஹார்மோணியம் வாசித்துக்கொண்டிருந்தான். சினிமாப் பாட்டுகள் தான். என்றாலும் ஹார்மோணியத்தில் இவ்வளவு இனிமையான இசையை இதற்குமுன் நான் கேட்டதில்லை. இசைத்தட்டுகளில், பாட்டுக்களின் இடையேவரும் இசையைக்கூட சிறிதும் மாற்றமில்லாமல் அப்படியே வாசித்தான் பையன். மெய் மறந்து நின்றேன் நான். இசையை ரசித்த கும்பல் மெல்ல, மெல்ல நழுவியது. என்னிடம் சில்லறை இல்லாததால் ஒரு ரூபா நாணயத்தை அந்தப் பிச்சைக்காரனுக்கு போட்டுவிட்டு வந்தேன். கூட்டத்தினர் என்னை வியப்பாகப்பார்க்கின்றனர். —''சேது''


### ''மலர்'' சந்தா விபரம்

ஒருவருடம் ரூ. 6-00.
தனிப்பிரதி சதம் -/50.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பின்புற அட்டை | — | ரூ. 200/- |
| உட்புற அட்டை | — | ரூ. 150/- |
| முழுப் பக்கம் | — | ரூ. 125/- |

விபரங்களுக்கு
'மலர்'
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

### வியாபாரிகளே !

ஈழத்திலே, மிகச் சிறப்பான முறையில் வெளிவரும் சஞ்சிகை ''மலர்.'' நிறைந்த விளம்பரப் பலனைப் பெற, நாடெங்கும் விநியோகமாகும் ''மலர்'' சஞ்சிகையில் விளம்பரம் செய்யுங்கள். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு உங்கள் பங்கைச் செய்யுங்கள்.

— ''மலர்'' வெளியீட்டுக் குழுவினர்


—★—

## ஈழத்து ரத்தினங்கள்

—★—

ஈழத்து எழுத்தாளர்கள் பலரது படைப்புகளில், கருத்துச் செறிவுள்ள உவமை, கச்சிதமான வர்ணனை, கலையழகு மிக்க சிந்தனை நிறைய விரவிக்கிடப்பதை வாசகர்கள் அவதானித்திருப்பார்கள். எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவை உங்கள் நெஞ்சைத் தொட்டிருக்கும். உங்கள் கருத்தில் பதிந்துவிட்ட அப்படியான பகுதிகளை எழுதி அனுப்பி வைத்தால், ''ஈழத்து ரத்தினங்கள்'' என்ற பகுதியில் அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பிரசுரிப்போம். நீங்கள் அனுப்பும் பகுதி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது என்ற விபரத்தையும் (உரிய பக்கத்துடன்) குறித்து அனுப்பவேண்டும்.

பத்திரிகை, சஞ்சிகைகள் முதலியவற்றில் வெளிவந்த, கதை கட்டுரைகளிலிருந்து பொறுக்கி எடுத்த 'ரத்தினங்க'ளாக இருந்தால் குறித்த கதை, கட்டுரை, பிரசுரமான பத்திரிகைப் பெயர், திகதி ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். 'ஈழத்து ரத்தினங்கள்' அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், ''மலர்''
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை பாடாமல் இறப்பேனு?

திருமணம் முடிந்தொரு
திங்கள் கழிந்தபின்
அருகோடிக் கவிதைப்பெண் வந்தாள் — என்மேல்
வெறுப்போடு விழிவீசி நின்ருள்.

'ஏனிந்தப் பார்வையோ?
என்மீதேன் கோபமோ?
நானென்ன கொடுமைதான் செய்தேன்? — 'சும்மா
வாபெண்ணே கவிபாட' என்றேன்.

'புதுப்பெண்ணைப் பார்த்தநீ
போடாதே புதிரெ'ன
நெருப்பாகக் கவிதைப்பெண் சொன்னுள்! — கவிச்
செருக்கோடு நான் பார்த்து நின்றேன்.

'கலியாணம் முடிந்தபின்
கவிபாட விரும்பாத
காரணம் ஏனென்று கேட்டாள் — 'தன்னை
பாராததேனென்றும் கேட்டாள்.

'கோல எழில் பெண்ணுள்
கொஞ்சும் கிளி இல்லாள்
நீலவிழிப் பார்வை முன்னுல் — கவி
நூறு பிறக்குமே தன்னுல்

'காலம் மறைந்தாலும்
கவலை யிருந்தாலும்
நானுன்னை மறப்பேனு பெண்ணே — கவிதை
பாடாமல் இறப்பேனு' என்றேன்.

—செ. குணரத்தினம்.

## அனுபவம் புதுமை!

இம்மாத ''மலர்'' சஞ்சிகையில் ''ஒரு அனுபவம்'' என்ற தலைப்பில் மூன்று துணுக்குகள் வெளிவந்துள்ளன. இவைபோன்ற, நெஞ்சைத்தொட்ட அனுபவங்கள் உங்கள் வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா? அப்படியான அனுபவங்களைச் சுவைபட எழுதி அனுப்பினுல் ''மலர்'' மகிழ்ச்சியோடு அவற்றை வரவேற்றுப் பிரசுரிக்கும் ''மலர்'' சஞ்சிகைக்கு அனுப்பப்படும் ''ஒரு அனுபவம்'', சுவையுள்ளதாக, கருத்துள்ளதாக, பூல்ஸ்காப்தாளில் ஒரு பக்கத்தில் அடங்குவதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் பிரசுரமாகும் அனுபவத் துணுக்குகளுள் சிறந்ததெனத் தெரிவுசெய்யப்படும் அனுபவத் துணுக்கினுக்கு ஈழத்து இலக்கிய நூல் ஒன்று அன்பளிப்புச் செய்யப்படும்.

துணுக்குகளை அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர் ''மலர்''
21, மத்திய வீதி, மட்டக்களப்பு.

## மன்னிக்கவேண்டுகிருேம்

மட்டுநகரில் எதிர்பாராதவகையில் ஏற்பட்ட வெள்ள நிலைமை காரணமாக ''மலர்'' பெப்ரவரி ஏடு உரியகாலத்தில் உங்கள் கரங்களில் தவழமுடியாமல் தாமதமேற்பட்டுவிட்டது. மன்னிக்க வேண்டுகிருேம்.

மார்ச் முதல், ஒழுங்காக முதல் திகதியன்றே ''மலர்'' வெளிவரும் என்பதைச் சொல்லிவைக்கிருேம்.

—''மலர்'' வெளியீட்டுக்குழுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீசும் தென்றல்

## யாழ்வாணனின் "அமரத்துவம்"

நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) எழுதிய ''அமரத்துவம்'' என்னும் சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டுவிழா 31-1-70 மாலை யாழ் இலக்கிய வட்டத்தினரால் அலங்கரிக்கப்பட்ட யாழ் நகரமண்டபத்தில் கவிஞர் வி. கந்தவனம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கவிஞர் இ. நாகராஜன் பாடிய தமிழ்வாழ்த்துடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு, வந்திருந்த அனைவரையும் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை வரவேற்முர். விழாவினைத் தொடக்கிவைத்த மாநகரமுதல்வர் திரு. சி. நாகராசா பேசுகையில் ஈழத்து எழுத்தாளர்களிடையே ஒற்றுமையின்மை நிலவுகின்றதென்றும் அது அகலவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அடுத்து "சிற்பி" வெளியீட்டுரை நிகழ்த்த, முதற்பிரதியை முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். கனகரத்தினம் J. P. U. M. பெற்றுக்கொண்டார். அதையடுத்து "அமரத்துவம்" ஆசிரியர் யாழ்வாணனுக்கு மாநகரசபை ஆணையாளர் யாழ்சின்னம் பொறித்த கணையாளியொன்றைப் பரிசளித்தார். இரசிகமணி கனக. செந்திநாதன் 'குறமகள்' திரு. சு. வேலுப்பிள்ளை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். விழாவிற்கு ஏராளமான எழுத்தாளர்களும், ரசிகர்களும் சமூகமளித்தனர்.

## "மலர்" வெளியீட்டு விழாக் கலை நிகழ்ச்சிகள்

சென்றமாதம் மட்டுநகர் நகரமண்டபத்தில் நடைபெற்ற ''மலர்'' வெளியீட்டுவிழாவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை நிகழ்ச்சிகளைக் காண ஏராளமான ரசிகப் பெருமக்கள் திரண்டு வந்திருந்தனர். நிகழ்ச்சியின் சிகரமாக பல்லிசைக் குரிசில் ஜீவம் சகோதரர்களின் இசைநிகழ்ச்சி அமைந்திருந்தது. செவிக்கு விருந்தான இசை நிகழ்ச்சியைத்தொடர்ந்து கண்களுக்கு விருந்தான நடன நிகழ்ச்சி இடம் பெற்றது. செல்வி பரம் சிங்கராஜாவின் இந்த நடன நிகழ்ச்சியை திருமதி செல்வி நாகராஜா தயாரித்தளித்தார். இறுதியில் கருத்துக்கு விருந்தாக கல்வி இலாகா கலைக்குழுவினர் அளித்த "எனக்கு வேண்டாம்" என்ற நகைச்சுவை நாடகம் இடம் பெற்றது.

## ''நெஞ்சுக்குத் தெரியும்''

யாழினி புரொடக்ஷன்ஸ் அளித்த நல்லூர் சங்கிலியன் நாடக மன்றத்தின் கலைக்கதம்பவிழா 1–2–70ல் திருநெல்வேலி கலங்காவற் பிள்ளையார் கோயில் நல்லூர் கிராமச்சபைத் தலைவர் பொ. இராசகுலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பி. எஸ். பிச்சையப்பாபிள்ளையின் முகவீணைக்கச்சேரியும் செல்வி தர்மபூஷணி அப்புத்துரையின் நடனமும் தாளவாத்தியக் கச்சேரியும் இடம் பெற்றன. ஈற்றில் நடைபெற்ற "நெஞ்சுக்குத் தெரியும்' என்னும் சமூகநாடகத்தில் வீ. கே. பத்மநாதன், செல்வி அமுதா, டி. ஜி. ராஜா, மகேஸ்வரன், செல்வி ராஜா. சிலோன் நாகேஸ், டாக்டர் S. சுந்தரலிங்கம். ஆகியோர் சிறப்புற நடித்தனர். கே. என். கே. சர்மா நாடகத்தை நெறிப்படுத்தியிருந்தார். சினிமாப் பாடல்களைத் தவிர்த்திருந்தால் நாடகம் இன்னும் நன்முக அமைந்திருக்கும்.

## புதுமையான கலைக்கண் காட்சி

கிழக்குப் பிராந்தியக் கல்வித் திணைக்களத்திஞல் புதுமையான கலைக்கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் 22ந் திகதி முதல் மார்ச் 14ந் திகதி முடிய மட்டக்களப்பு, வாழைச்சேனை, கல்முனை, அக்கரைப்பற்று, திருகோணமலை, மூதூர் ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் இக் கலைக்கண்காட்சியில், ஓவியம் வரையும் முறை, அலங்கார உருவங்கள் செய்யும் முறை, சீலையில் அச்சுப்பதித்தல்போன்ற பல்வேறு ஓவிய முறைகள்பற்றி காட்சி மண்டபத்தில் செய்முறை விளக்கம் தரப்படும். பார்வையாளர்களும் இதில் கலந்துகொள்ளலாம். பார்வையாளர்கள் வேடிக்கை பார்ப்பதுடன்மட்டும் முடிந்துவிடாமல் விஷயங்களை நேரிடையாக விளங்கிக்கொள்ளவும் உதவும் இம்மாதிரியான கலைக்கண்காட்சி இதுவரை இலங்கையில் நடைபெறவில்லை எனச் சொல்லப்படுகிறது. இப்புதுமாதிரியான கலைக்கண்காட்சியை கிழக்குப் பிராந்திய சித்திரவகுப்பு ஆசிரியர்கள், சித்திரப் பரிசோதகர் ஜனுப் எம். எஸ். எம். ஹுசைன் அவர்களின் மேற்பார்வையில் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org